கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–14, இதழ் – 2
Volume - 14, Issue - 2

தைத் திங்கள்
January 2023

விலை ரூ. 25/–
Price Rs. 25/-

ஆண்டு சந்தா ரூ. 300/–
Annual Subscription Rs. 300/-

தமிழ் மாத இதழ்
Tamil Monthly

இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்



"Delivered by India Post"

www.indiapost.gov.in

SAPPIDA VANGA CATERERS

PURE VEGETARIAN



சாப்பிட வாங்க

சுத்த சைவம்

திருமணம், வரவேற்பு, வீட்டு வைபவங்கள்

மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும்

கூப்பிடுங்க சாப்பிட வாங்க

இப்பொழுது இன்னும் புது பொலிவுடன்

Contact: 9176657165, 9176657136,
9884302456, 6385732827, 9176657108,
hotelvassi123@gmail.com



துளிர் குழந்தைகள் நல மருத்துவமனை

THULIR KIDZ CLINIC

"WE CARE FOR YOUR LITTLE CUTES"

Dr. VARUN .G

DCH, DNB Pediatrics, FIPP (MMC), EDPRM (HERMES, Swiz)
Consultant Pediatrician, Pediatric Pulmonologist & Neonatologist,
Child Asthma Specialist
@ Apollo Speciality Hospital, Vanagaram, Chennai

"Wishing you all a Happy Healthy & Prosperous New Year 2023"

THULIR KIDZ CLINIC

94, Ramachandran Street, Madhanandhapuram,
Porur, Chennai - 600 125. Contact : 93618 34246
Landmark : Durgalakshmi Saraswathi Temple

Mangai

SREE



புத்தாண்டு
மற்றும்
பொங்கல்
நல்வாழ்த்துகள்

BUILDERS & ENGINEERS (P) LTD.,

Er.S.Elango, B.E.,M.I.E.,
Civil Engineer & Railway Contractor,
Apartment Promoter
H.O. : Mahadhana Street, Mayiladuthurai
Branch : Madanandapuram, Mugalivakkam, Chennai - 125.
Cell : 94431 42889



வாழ்க தம்பதியர் !

சஷ்டியப்த பூர்த்தி விழா



காரைக்கால் மாவட்டம், நெடுங்காடு கார்காத்தார் தெரு தெய்வத்திருவாளர்கள் பக்கிரியாப்பிள்ளை – ஜெயலட்சுமி அம்மாள் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் உத்திரமேலத்தெரு தெய்வத்திரு. சண்முகம் பிள்ளை – நலமுடன் ஜோதி அம்மாள் இவர்களின் நல்லாசியுடன்

திரு. P. மோகன் @ வரதராஜன் – திருமதி. V. அம்பிகா

தம்பதிக்கு 07–07–2022 அன்று சஷ்டியப்த பூர்த்தி திருக்கடையூரில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அது சமயம் கலந்து கொண்டு சிறப்பித்து, ஆசி வழங்கிய, ஆசி பெற்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

B. மிதுனா

B. நிபூர்ணா

R. பாலாஜி, B.E., MBA

B. திவ்வியா பாலாஜி, B.Tech

V. அருண்குமார் B.E., MBA

கார்காத்தார் தெரு,

நெடுங்காடு.

இதழின் உள்ளே....

மரபுசாரா எரிசக்தி உற்பத்தி..... 9
வாழ்க்கை வாழ்வதற்கே! 12
சங்கப் பலகை..... 14
அப்பா – ஒரு மந்திர சொல் 16
மணமகன் / மணமகள் தேவை..... 20–24
இந்தியாவில் வங்கி..... 43
மருதநாயகம்..... 46
சங்க நிகழ்வுகள்..... 50

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

ஆங்கிலப் புத்தாண்டை வரவேற்போம்



இந்த மாத இதழ் வாசகர்கள் கைகளில் தவழும் நேரத்தில் ஆங்கிலப் புத்தாண்டு2023 பிறந்திருக்கும் அதே போல் சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழாவும் கோலாகோலமாக நடை பெற்று முடிந்திருக்கும் புதிதாகப் பிறந்திருக்கும் 2023 ஆம் ஆண்டு எப்படி இருக்குமோ என்னென்ன நடக்குமோ என்ற எண்ணங்கள் பலர் மனதில் இருக்கக் கூடும்.

ஹிட்லர் தனது சர்வாதிகாரத்தால் பெற்ற வெற்றி, செப்டம்பர் பதினொன்று தாக்குதல், முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர், ஹிரோஷிமா, நாகசகி அணுகுண்டுத் தாக்குதல் உள்ளிட்டவை ஃப்ரான்ஸ் நாட்டு தீர்க்க தரிசி நாஸ்ட்ராடமஸ்ஸின் கணிப்பின்படியே நடந்துள்ள பகீர் சம்பவங்கள். கடந்த நான்கு நூற்றாண்டுகளாக நாஸ்ட்ராடமஸ் கூறிய அனைத்து சம்பவங்களும் நடைபெற்றதால் இனி வரும் காலங்களிலும் அவர் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் கண்டிப்பாக நடந்தே தீரும் என உலகம் முழுதும் ஒருசாரரால் நம்பப்பட்டு வருகிறது. அப்படி நம்புபவர்கள் 2023 ஆம் ஆண்டு என்னென்ன நடக்கும் என்று அவர் கூறி இருக்கிறார் என்று பார்ப்பார்கள்.

ஜோசியத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் ஆங்கிலப் புத்தாண்டு 2023 பிறந்த நேரத்தை வைத்து இந்த ஆண்டு எப்படி இருக்கும் என்று நமது ஜோதிடர்கள் கணிக்கிறார்கள் என்று பார்ப்பார்கள்

புதிதாகப் பிறந்துள்ள 2023 ஆம் ஆண்டு ஏற்றங்களைக்கொடுக்கலாம் அல்லது ஏமாற்றங்களைக் கொடுக்கலாம் இரண்டையும் சமமாகப் பாவித்து ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை நாம் பெற வேண்டும். நம்மைப் பொறுத்தவரை நமது சென்னை சங்கம் 2023 ஆம் ஆண்டு துவக்கத்திலேயே நூற்றாண்டைக் கொண்டாடியுள்ளது அதனால் இந்த ஆண்டு முழுவதுமே நல்லவையே நடக்கும் என்று நம்புவோம்.

அதைத்தான் வள்ளுவப் பெருந்தகை உள்ளுவதெல்லாம் உயாவுள்ளல் என்ற குறளில் சொல்லி உள்ளார் எண்ணங்கள் உயர்வாக உள்ளபோது அது நம் செயலில் பிரதி பலிக்கும்.

2023 ஆம் ஆண்டு நல்லனவற்றையே கொடுக்கும் ஒரு வேளை அல்லாதனவற்றைக் கொடுத்தால் அவற்றையும் சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை இறைவன் நமக்கு அளிப்பான் என்ற நம்பிக்கையுடன்.

"புத்தாண்டே வருக புத்துணர்ச்சி தருக" என்று 2023 ஆம் ஆண்டை வரவேற்போம்.

முக்கியமான மூன்று சக்திகள்

வாழ்க்கையில் எந்த ஒரு மனிதரும் நோயில்லாமல் வாழ வேண்டும் என்று தான் விரும்புகிறார்கள். ஆனால் அதற்காக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் குறிப்பிட்ட வயதுக்கு மேல் மருந்து, மாத்திரைகளால் மட்டுமே உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

எந்த மனிதரும் உடல், உயிர், உள்ளம் இந்த மூன்றுக்கும் ஓரளவாவது முக்கியத்துவம் தந்துவிட்டால் அவர்களது வாழ்வில் எந்த நோயும் இல்லாமல் நலமுடன் வாழ்வார்கள். இந்த மூன்றுக்கும் தேவையான 3 முக்கியமான சக்திகளைப் பற்றி சிறிது விரிவாகப் பார்ப்போம்!

யோகக் கலை :

புதிதாக ஒரு தையல் மெஷின் வாங்குகிறோம். அது சில ஆண்டுகள் மட்டும் நன்றாக இருந்த பின்னர், அதன் பாகங்கள் தேய்மானம் அடைந்து விடுகின்றன. தினசரி அதனை எண்ணெய் போட்டு சுத்தம் செய்வது அந்த மெஷினுக்கு அவசியமாகிறது. அதே போலத்தான் மனித உடலும் தேய்மானம் அடையும் போது மெஷினைப் பாதுகாப்பது போல் பாதுகாக்க வேண்டியுள்ளது. நமது உடலை எப்போதும் இளமையோடும், முகப் பொலிவோடும் வைத்திருக்க யோகக் கலை முக்கியமாகும். இருக்கிற அத்தனை யோகாசனங்களையும் செய்ய வேண்டும் என்கிற அவசியமில்லை. தினசரி 10 நிமிடம் செய்தாலும் கூட போதுமானது. சர்க்கரை நோய், மூல நோய், மூட்டுவலிகள் இருப்பவர்கள் கூட இக்கலையினைத் தொடர்ந்து செய்து வந்தால், நோய்களின் தாக்கம் குறைவதை உணர முடியும். எனவே, எந்த மனிதரது உடல் ஆலோக்கியத்திற்கும் யோகக் கலை முக்கியமான சக்திகளில் ஒன்றாகும்.

பிராணாயாமக் கலை :

உடல் நன்றாக இருந்தால் தானே உயிர் இருக்கும். உயிர் போய் விட்டால் எப்போது தூக்குவார்கள் என்கிறார்கள். சாலையின் ஓரத்தில் அதிக சுமை ஏற்றி நின்று கொண்டிருக்கும் லாரி, அதில் இருக்கும் டயரால்தான் நிற்கிறது என்றாலும், உண்மையில் லாரியின் டயருக்குள் இருக்கும் காற்றால்தான் நிற்கிறது.

டயரில் நிரம்பி இருக்கும் காற்று இல்லையென்றால், லாரி சாய்ந்து விடும். அது போலவே மனித உடலும் மூச்சு என்று கூறப்படும் காற்றால் அதாவது உயிர் சக்தியால் தான் நிற்கிறது. அந்த உயிர் சக்தியை எப்போதும் புத்துணர்வுடன் வைத்துக்கொள்ளும் கலையை பிராணாயாமக் கலை என்கின்றனர். நமது உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு நோய்வாய்ப்பட்டிருந்தாலும், நாம் சுவாசிக்கும் மூச்சுக் காற்றை உள்ளே இழுத்து அந்த இடத்தில் சிறிது நேரம் நிறுத்தி வைத்து பழுதான நம் உறுப்பையும் சரி செய்துவிடலாம் என்கிறார்கள் இக்கலையை கற்றுத் தேர்ந்த வல்லுநர்கள். எனவே, எந்த மனிதருக்கும் உயிர் சக்தியை புத்துணர்வோடு வைத்துக்கொள்ள பிராணாயாமம் என்ற சக்தியும் முக்கியமான சக்திகளில் ஒன்றாகிறது. பிராணன் போயிருச்சு என்று சொல்லாமல் இருக்கவும் நலமோடும், நீண்ட ஆயுளோடும் இருக்கவும் பிராணாயாமம் அவசியம்.

தியானம் :

நமது உடலில் உள்ளம் என்ற ஓர் உறுப்பு இருக்கிறதா? அது கறுப்பா, சிவப்பா, வெள்ளையா, சிறியதா, பெரியதா என்றால் எதுவும் இல்லை. நமது உடலிலேயே இல்லாத ஓர் உறுப்பை உள்ளம்'' என்றும் ''மனசு'' என்றும் சொல்கிறோம். கண்போன போக்கிலே கால் போகலாமா? கால்போன போக்கிலே மனம் போகலாமா? என்ற கண்ணதாசனின் கவிதை வரிகள் கூட நமக்கு நினைவுக்கு வரலாம்.

சூரியனின் ஒளிக்கதிர்கள் எல்லா இடத்திலும் பரவி இருக்கின்றன. அக்கதிர்களை ஒரு லென்ஸ் மூலம் குவிக்கிற போது அது ஒரு காகிதத்தை கூட எரித்து விடும் சக்தி பெறுகிறது. அது போலவே மனதை அலைபாய விடாமல் நமது சொல்படி நடக்க மன ஒருமைப்பாடு அவசியமாகிறது. மனதை ஒரு முகப்படுத்தும் கலையைக் கற்றுக்கொண்டால் மேம்பட்ட ஆற்றல்களை நம்மால் பெற முடியும்.

எனவே, உள்ளத்தை அதாவது மனதை ஒருமுகப்படுத்திட, மேம்படுத்திட தியானம் என்கிற சக்தியும் முக்கியமானதாகிறது. டிரைவர் இருந்தால் தான் காரை ஓட்ட முடியும். காரும் இருந்து டிரைவரும் இருந்து பெட்ரோல் இல்லையேல் கார் ஓடாது. எனவே, கார் ஓட டிரைவரும், பெட்ரோலும் எப்படி முக்கியமோ, அதுபோல உடல் என்கிற காருக்கு மூச்சுக் காற்றான டிரைவரும், மனதை ஒருமுகப்படுத்தும் சக்தியான தியானம் என்கிற பெட்ரோலும் இருந்தால் தான் உடல் என்கிற கார் நன்றாக, வேகமாக ஓடும்.

யோகக் கலை, பிராணாயாமக் கலை, தியானம் இந்த மூன்று சக்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கற்றுக்கொண்டு அதனை தினசரி செய்யத் துவங்கிவிட்டால் உடலில் நோய்களே வர வாய்ப்பில்லை.

எப்போதும் புத்துணர்வுடனும் இருக்க முடியும். எந்தச் செயலாக இருந்தாலும் மனதை ஒருமுகப்படுத்தி அதைச் சிறப்பாகச் செய்துவிட முடியும். சாதனைகள் பலவும் நிகழ்த்த முடியும்.

சுவாமி விவேகானந்தரின் கம்பீரமான தோற்றம், உயர்ந்த சிந்தனைகள், சிறப்பான செயல்பாடுகளுக்கு இவை மூன்றும் தான் முக்கியப் பங்கு வகித்திருக்கின்றன. இந்த மூன்றையும் முறையாகப் பயன்படுத்தியதால்தான் சித்தர்கள், முனிவர்கள், போன்றோர் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கிறார்கள்.

நம் உடல் உறுப்புகளில் ஒன்றாகவே ஆகிவிட்ட செல்போன் தினசரி சார்ஜ் செய்தால் மட்டுமே பயன்படுத்த முடியும். அதைப் போலவே இந்த 3 சக்திகளையும் நமது உடலில் தினசரி சார்ஜ் செய்யக் கற்றுக்கொண்டால் சிறப்பாகச் செயல்பட முடியும். இல்லையேல் சார்ஜ் ஏற்றப்படாத செல்போனாகி விடுவோம்.

ஆரோக்கியத்துக்காக தினசரி ஒரு மணி நேரமாவது ஒதுக்கவில்லையெனில், நோய்க்காக தினசரி பலமணி நேரங்களை ஒதுக்க வேண்டிய நிலை வந்துவிடும்!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர், சென்னை.
செல் : 9943702054

கௌரவ ஆசிரியருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

நம்முடைய கார்காத்தார் ஒப்புரவின் கௌரவ ஆசிரியர் திரு. வி. இரத்தினசபாபதிப் பிள்ளை அவர்களுக்கு அவர் பணியாற்றிய ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா என்னும் இந்திய உணவுக் கழகத்தில் அவருடன் பணியாற்றிய நண்பர்கள் இணைந்து F.C.I.யில் அவர் Regional Manager ஆக ஆற்றிய பணிகளைப் பாராட்டி சென்னை அரும்பாக்கம் விஜயா பார்க் ஹோட்டல் அபர்னா ஹாலில் 4–12–2022 அன்று ஒரு விழா எடுத்தார்கள். அந்த விழாவில் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது என்று சொல்லக்கூடிய Lifetime Accomplishment Award என்ற விருதினை வழங்கினார்கள். அந்த விழாவில் அவரது குடும்பத்தாரும் அவருடன் பணியாற்றிய ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பல நண்பர்களும், சென்னையை சேர்ந்த பலரும் மற்றும் திரு. அகோரம் போன்றோரும் கார்காத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டு அவரைப் பாராட்டிப் பேசி சிறப்பித்தார்கள்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற நமது கௌரவ ஆசிரியர் திரு. வி. ரத்தின சபாபதிப் பிள்ளை அவர்களுக்கு நமது பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

மங்கள சந்திப்பு

கும்பகோணம் மண்டல கார்கார்த்தார் சமூக நலச்சங்கம் சார்பாக வருகின்ற 09-04-2023 ஞாயிற்றுக்கிழமை மங்கள சந்திப்பு நடைபெற உள்ளது. மங்கள சந்திப்பு நிகழ்ச்சி வெண்திரை மூலம் வரன்கள் அறிமுகம் செய்ய இருப்பதால் விண்ணப்பத்துடன் புகைப்படம் அவசியம் இணைக்கவும்.

பதிவு ஒன்றுக்கு ரூ. 500/- விண்ணப்பம் வேண்டுவோர் கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

வெளியூர் கார்குல சொந்தங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு பூர்த்தி
செய்த விண்ணப்பத்தை கொரியர் வாயிலாக அனுப்பவும்.
முகவரி : திரு. **M.R.K. பாண்டியன்** (அ) **R. சுகுமார்,**
17/18, பெரிய அப்பாவு தெரு, கும்பகோணம். **Cell : 7598073235 / 9442013459**

மங்கள சந்திப்பு பதிவு ரூ. 500/-ஐ **V. சிவகுமார்** என்ற பெயரில் வரையோலையாக மட்டும் அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் செலுத்தவும். பதிவு இல்லாமல் புத்தகம் தர இயலாது.

மேலும் விவரங்களுக்கு :

S. விஜயகுமார் - 9443984770, **A.S. பழனி** - 8870342493, **M. சாமிநாதன்** - 9443662462,
T.S சூரியநாராயணன் - 9443589510, **V. சிவகுமார்** - 9443620015

சுயம்வர பார்வதி கலா ஹோமத்துடன் இனிதே ஆரம்பம் ஆகிறது.

புத்தகம் வேண்டுவோர் வரன் விவரப் பட்டியலுடன் 05-04-2023-க்குள் பதிவு செய்யவும். மங்கள சந்திப்பு நடைபெறும் இடம் பதிவு செய்பவர்களுக்கு மட்டும் வாட்சப் வாயிலாக தெரிவிக்கப்படும்.

S. விஜயகுமார்,
செயலாளர்.

வாழ்த்து மடல்

'கார்காத்தார் ஒப்புரவு இதழின் முன்னாள் முதுபெரும் ஆசிரியர் திருமிகு. V. இரத்தின சபாபதி பிள்ளை அவர்களுக்கு பாராட்டு விழா! LIFE TIME ACHIEVEMENT AWARD BY COLLEAGUES OF FCI (Retd Regional Manager, Food Corporation of India.

ஏடு தந்தானடி!

ஏடு தந்தானடி தில்லையிலே – அதைப்
பாட வந்தேன் அவன் எல்லையிலே என
தில்லை சபாபதியைப் பாடிய தமிழால்
திருமிகு சபாபதியாரைப் பாடுகின்றேன்!

ஏட்டினில் எனையும் எழுதவைத்தார் – அந்தப்
பாட்டையும் எனையே பாடவைத்தார்!
கூட்டினில் ஒன்றாய் இணையவைத்தார் – இந்த
நாட்டினர் போற்ற இதழ் வளர்த்தார்!

தந்தையும் தாயுமாய் அவர் இருந்து
தமிழோடு எனையும் வளர்த்ததென்ன!
சிந்தையில் நாளும் நிலைத்திருந்து!
சிறப்பினை நாளும் நல்குவதென்ன!

அப்பரும் சுந்தரரும் சம்மந்தருமே
திரு அருளோடு பாடிய தேவாரமே!
'ஒப்புரவில்' இவர் உரைத்ததெல்லாம்
உயர்தமிழ் இவர்க்களித்த இறைவரமோ!

ஆயிர ஆயிரமாய் சந்தாதாரா
ஆறாயிரமாய் உயர்ந்ததென்ன!
'அற்புதம்' என்றே அறநெறியோடு
'ஒப்புரவை' இவர் வளர்த்ததென்ன!

நாடு போற்றும் தலையங்கத்தோடு
ஏடு வளர்த்த ஆசிரியர் வாழி!
நாற்றிசையும் புகழ் மணக்க
நலங்கள் சூழ இனிதே வாழி!

– மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.
9578286891

வாழ்த்துகிறோம்

சீர்காழி, தியாகராஜ நகர் மூத்த உறுப்பினர் திரு. B. கோவிந்தராஜன் பிள்ளை மூத்தோருக்கான (வயது 75)1500 மீட்டர், 800 மீட்டர் 400 மீட்டர் மாநில அளவிலான ஓட்ட பந்தயத்தில் இரண்டாம் இடம் பெற்று, சாதனை படைத்துள்ளார். மற்றும் நீளம்தாண்டுதல் போட்டியில் மூன்றாம் இடம் பெற்று சாதனைபடைத்துள்ளார்.

உலகின் பிரம்மாண்ட கோயில்கள்

1) அங்கோர் வாட் விஷ்ணு கோயில் கம்போடியா

1113 – 1150–ல் இரண்டாம் சூர்யவர்மனால் கட்டப்பட்டது.

162.6 ஹெக்டேர் பரப்பு கொண்டது.

கம்போடியா நாட்டின் சின்னமாக உள்ளது பள்ளி கொண்ட நிலையில் விஷ்ணு இங்கிருக்கிறார்.

2) ஸ்ரீரங்கநாதர் கோயில், ஸ்ரீரங்கம், திருச்சி.

108 திவ்ய தேசங்களில் முதல் தலம்.

156 ஏக்கர் பரப்பு கொண்டது.

தென்னிந்தியாவின் பெரிய ராஜகோபுரம் இங்குள்ளது. (239 அடி)

21 கோபுரங்களும், 7 மதில் சுவர்களும் உள்ளன.

3) பிரகதீசுவரர் கோயில், தஞ்சாவூர்.

11–ம் நூற்றாண்டில் முதலாம் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது.

44 ஏக்கர் பரப்பு கொண்ட இங்கு மூலவர் 54 அடி சுற்றளவுள்ள ஆவுடையுடன் 23 அடி உயர பாணத்துடன் இருக்கிறார்.

20 டன் எடையில் ஒரே கல்லால் ஆன நந்தி சிலை உள்ளது.

தட்சிண மேரு என்னும் 216 அடி உயர விமானம் உள்ளது.

4) அக்ஷர்தாம் கோயில். டெல்லி.

மகான் சுவாமி நாராயணருக்காக கட்டப்பட்டது.

23 ஏக்கர் பரப்பு கொண்டது.

கருவரையில் 7 அடி உயர தங்கச்சிலை உள்ளது.

நினைவிடம், ஆராய்ச்சி மையம், கண்காட்சி அரங்கம், 15 ஏக்கர் பூங்கா உள்ளது.

5) நடராஜர் கோயில். சிதம்பரம்.

பூலோக கைலாயமான இதுவே முதல் சிவத்தலம்.

40 ஏக்கர் பரப்பு கொண்ட இங்கு சிவனின் ஐந்து சபைகள் உள்ளன.

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகரால் பாடல் பெற்றது.

கனக சபையின் பொற்கூரை பராந்தக சோழனால் கட்டப்பட்டது.

கிழக்கு கோபுரத்தில் 108 சிவதாண்டவங்கள் இடம் பெற்றுள்ளன.

தகவல்;
நெ. ஆ. சிவகுருநாதன்,
S.R. நகர், சிதம்பரம்.

மரபுசாரா எரிசக்தி உற்பத்தி மூலம் ஒரு புரட்சி செய்யலாம் வாருங்கள்.

நம்மவர்

திரு. ஆ. சண்முக வேலாயுதன்,
தலைவர். ஐபிஎல் புராடக்ட்

இவரைப்பற்றி தெரிந்து கொள்வோம் திரு. ஆ. சண்முக வேலாயுதன் அவர்களுடன் ஒரு நேர்காணல்.

இயற்கை மனிதருக்கு எத்தனையோ அருங்கொடைகளை வழங்கியுள்ளது. அவைகளில் மின்னாற்றல் என்பது இன்றைய நவீன உலகின் இன்றியமையாத பேராற்றல் ஆகும். எண்ணெயில் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் குண்டு பல்பு ஆகி, இன்று எல்.இ.டி பல்புகளாக தொழில்நுட்ப வளர்ச்சி கண்டுள்ளது. நிலக்கரியிலும், டீசலும், ஓடிக்கொண்டிருந்த இரயில்களும், வாகனங்களும் இன்று மின்மயமாகிப் போனதால், மின்சார இரயில்களும் இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்களும் புகையினை சுற்றுச்சூழலுக்கு உகந்ததாய் உருவெடுத்துள்ளது. இத்தனைக்கும் மூலதாரம் மின்சாரம்.

மின்சாரம் உலகெங்கும், அனல்மின் நிலையம், அணு மின்நிலையம், நீர் மின்சாரம், சூரிய ஆற்றல் மின்சாரம், காற்றாலை மின்சாரம் என பலவகையிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், பயன்பாடு அதிகமுள்ள அதிக மக்கள்தொகை கொண்ட நமது இந்தியாவில் தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே பற்றாக்குறைநிலவுகிறது.காரணம், அனல், புனல், அணு என ஒரு குறிப்பிட்ட மின் ஆற்றல் உற்பத்தி மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்டதன் விளைவாகும்.

நமது நாட்டில் சூரிய ஒளியும், காற்றும், இயற்கை எரிபொருள்களும் இலவசமாய் இயற்கை வாரி வழங்கும் அரிய பொக்கிஷமாகும். தற்போது தான் இதன் அவசியம் உணரப்பட்டு (சோலார், விண்ட் மில்) சூரிய ஒளி மின்சாரம், காற்றாலை மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மின்சாரம் என மாற்றுமின் உற்பத்தியில் அரசுகள் கவனம் செலுத்தி, ஊக்கமும் அளித்து வருகிறது.

மின்உற்பத்தியும், மின் ஆளுமையும் கடினமானது. உயிருக்கே ஆபத்தான தாக்குதல் (ஷாக்) திறனுடையது. மின்சாரத்தை வீடுகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், பொது மற்றும் தனியார் வாகனங்கள், நவீன தொழில்நுட்ப கருவிகள் என பயன்பாட்டுத் தளத்திற்கேற்ப மின் ஆளுமை கையாளப்பட வேண்டும். அதற்கேற்ற மின் பகிர்வான கருவிகள் (டிரான்ஸ்பார்மர்), கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்புக் (Conductor sensors, Disconnect, Isolate, Switches) இங்கு விசை சுவிட்சுகள் என மின்துறைப் பயன்பாட்டிற்கு பல்வகை உபகரணங்கள் உள்ளது. அவற்றை தயாரிப்பதிலும், உற்பத்தி செய்வதிலும் தமிழ்நாட்டிலும் முன்னணி நிறுவனமாக இயங்கி வருகிறது.

இதன் நிறுவனர், இயக்குநர், உரிமையாளர், திரு. ஆ. சண்முக வேலாயுதம் அவர்கள், தனது நிறுவனம் குறித்தும், மின்னாற்றல் துறையில் தான் கடந்து வந்த பாதைகளையும் நினைவுகளையும் பகிர்ந்து கொள்கிறார்.

உங்களது சொந்த ஊர், கல்வி, குடும்பம் பற்றி கூறுங்கள்:

ஏழு குழந்தைகள் கொண்ட பெரிய குடும்பத்தில் மூத்த மகனாக பிறந்தேன். சொந்த ஊர் ஆண்டாள் புகழ்கூறி, தமிழக அரசின் இலச்சினையாக இடம் பெற்றுள்ள கோபுரம் அமைந்துள்ள திருவில்லிபுத்தூர் தான். எனது தந்தையார் ஆறுமுகம். தாயார் சீதாலெட்சுமி. உள்ளூரிலேயே பள்ளிப்படிப்பை முடித்தேன். மேற்கொண்டு தொழிற்கல்வியோ, பட்டப்படிப்போ பயில குடும்ப சூழலும், பொருளாதார நிலைமையும் கை கொடுக்கவில்லை. விருதுநகர் பாலிடெக்னிக் கல்லூரியில் இடம் கிடைத்தும் கட்டணம் செலுத்த வழியில்லாததால் வாய்ப்பு பறிபோனது. பின்பு ராஜபாளையம் பி.ஏ.சி.ஆர். ராமசாமி ராஜா பாலிடெக்னிக்கில் இடம் கிடைக்கவே அப்பா கடன்பட்டு ரூ. 150 கட்டணம் செலுத்தி என்னை படிக்க அனுப்பினார். அன்றைய அரசு ஏழை மாணவர்கள் கல்வி பயில மூன்றாண்டுகளுக்கு கல்வி செலவிற்காக கடனுதவியாக ரூ. 2500 வழங்கி ஊக்கப்படுத்தி வந்தது. அப்படித்தான் எனது கல்லூரிப்படிப்பு முடிந்தது. பவுண்ட்ரி தொழில் நுட்பக்கல்வி பயின்ற நான் கோவை பி அன்ட் ஜி இன்டர்ஸ்டீல் நிறுவனத்தில் பயின்றுநராக மூன்றாண்டுகள் பயிற்சி மேற்கொண்டேன்.

தொழில் துறையில் எப்படி உங்களை ஈடுபடுத்திக் கொண்டீர்கள் ?

1968–69–ல் என்ஜிஎஸ், எஸ்பிஐ ஆகியவை புதிய தொழில் முனைவோர் உருவாக கடனுதவி வழங்கி வந்தது. அதன் மேலாளர் ஒருவரே என்னைத் தனியே தொழில் நிறுவனம் தொடங்க ஆலோசனை கூறினார். சென்னை மீனம்பாக்கம் பின்னி பவுண்ட்ரி நிறுவனத்தில் வேலை கிடைத்தது. கோவையில் பணியாற்றி ஏற்கனவே சென்னையில் அதே நிறுவனத்தில் பணியிலிருந்த திரு. பசுபதி அவர்களின் உதவியுடன் அந்நிறுவனத்தில் பணியாற்றினேன்.

பவுண்ட்ரி சப் அர்டினெட் இன்ஜினியராக பணியாற்றிய எனக்கு நிறைய கற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

1973–ல் முதன் முதலாக நண்பர் ஒருவரை பங்குதாரராக சேர்த்துக்கொண்டு, 10 சதவீத முன் முதலீட்டு திட்டத்தில் வங்கிக்கடனாக ஒரு இலட்சம் பெற்று கிண்டி தொழிற்பேட்டையில் புதிய தொழில் முனைவோருக்கான கே1, கே2 யூனிட்டில் நிறுவனம் தொடங்கினேன். நடப்பு மூலதனம் இல்லை. பெரிய வியாபார அனுபவமும் இல்லை. முதன் முதலில் தொடங்கப்பட்ட எங்களது பவுண்ட்ரி நிறுவனத்தில் அச்சு இயந்திர பாகங்கள் உற்பத்தி செய்து சப்ளை செய்து வந்தோம். தொழிலில் வந்த வருவாயில் ஒரு பகுதியை கோவையில் நிலம் வாங்கிப் போட்டேன்.

சில வாடிக்கையாளர்கள் வாங்கிய பொருளுக்கு பணம் திரும்ப செலுத்தாமல் இழுத்தடித்ததால் கிட்டத்தட்ட 2 லட்ச ரூபாய்க்கு மேல் நஷ்டமானது. கோவையில் வாங்கிப்போட்ட நிலத்தில் ஒரு பகுதியை விற்று வங்கிக்கடன் முழுவதையும் தீர்த்துவிட்டு, மின்துறைக்கு தேவையான பொருள்களை உற்பத்தி செய்து சப்ளை செய்தேன். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா தொழில்கடன் அளித்து உதவியதால் 1984 – 88–ல் மின்துறைக்கான சப்ளை அதிகரித்து நிறுவனம் வளர்ச்சி நிலையை எட்டியது.

உங்கள் நிறுவனம் மூலமாக என்னென்ன பொருட்கள் தயாரிக்கப்படுகிறது ?

எப்போதுமே, மின்துறை ஒரு வளர்ச்சி பெறும் துறைதான். தொழில்நுட்பம் தான் மாறுமே தவிர தேவை குறையாது. எனவே இத்துறை ஒரு அட்சயப்பாத்திரம் போன்றதுதான். எங்களது ஐபிஎல் நிறுவனம் மூலமாக மின்மாற்றிகள் (Transformer), பில்லர் பாக்ஸ், மின் கட்டுப்பாட்டு மற்றும் மின்தடை சுவிட்சுகள், மின்கடத்தி கண்டக்டர்கள் என துறை சார்ந்த பலவகை உற்பத்தி பொருட்கள் சப்ளை செய்யப்படுகிறது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் எங்களது வாடிக்கையாளர்களாக உள்ளனர். உற்பத்தி பொருட்கள் அனைத்தும் ஐஎஸ்ஐ தரச்சான்று பெற்றதாகும்.

இன்னும் நூறாண்டுகளுக்கு மட்டுமே நிலக்கரி, பெட்ரோலியம், எரிவாயு போன்றவை உள்ளதால் மாற்று எரிசக்தி உற்பத்தி அவசியம். மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் பலவகை ஆற்றலைப் பயன்படுத்தி சட்டதிட்டங்கள் மூலம் ஊக்கம் தந்து மின்உற்பத்தி துறையை தன்னிறைவு பெற்ற துறையாக மாற்றியுள்ளது. நமது இந்திய நாட்டிலும் இந்த நிலை வரவேண்டும்.

எனவே தான் நாங்கள், புதிய தொழில்நுட்பம் எங்கெங்கு கண்டுபிடிக்கப்படுகிறதோ அவைகளை உடனுக்குடன் அறிந்து எங்கள் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பம் இடம்பெறச் செய்கிறோம். மேலும் உலகளாவிய இத்துறை சார்ந்த கண்காட்சிகள் மற்றும் இந்தியன் எலக்ட்ரிக்கல்ஸ் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியாளர் சங்கம் (மிணிணிவி) நடத்தும் கண்காட்சிகள், உலகப்புகழும், தரமும் கொண்ட ஜெர்மன் கண்காட்சிகளிலும் பார்வையிட்டு புதிய தொழில்நுட்பங்களை அறிந்து, கற்றுக் கொண்டு, இத்துறையின் தேவைகளை காலத்திற்கேற்ப பூர்த்தி செய்யும் நிறுவனமாக எங்களை நிலை நிறுத்தியுள்ளோம்.

உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர்கள் பற்றி கூறுங்கள்:

இளம் தலைமுறைகளுக்கு வாய்ப்பளிக்கும் விதமாகவும், எனக்கும், நிறுவனத்திற்கும் உதவியாக எனது மகள் சீதாலெட்சுமி எம்.இ. மருமகன் திரு. ஹரிராஜன், பி.இ. எம்.பி.ஏ. இருவரும் நிர்வாகப் பொறுப்பேற்று சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.

கிண்டியில் இரு தொழிற்சாலைகள் உள்ளது. திருமுடிவாக்கம் மற்றும் காக்களூர் ஆகிய இடங்களிலும் எங்களது நவீனதொழில்நுட்ப தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகிறது. தொழிலாளர்களுக்கு நிறைவான சம்பளம், இஎஸ்ஐ, பி.எப், உணவு வசதிகளுடன் கிராஜூட்டி இன்சூரன்ஸ் போன்றவை செய்து கொடுத்துள்ளேன்.

டான்ஸ்டியா உறுப்பினராக உங்கள் செயல்பாடுகள் பற்றி கூறுங்கள்:

1996–ல் டான்ஸ்டியாவில் சாதாரண உறுப்பினராகி வந்த என்னை திரு. சம்பந்தம் அவர்கள் தலைவராக பணியாற்றி போது செயலாளராக நியமித்தார். திரு. பூரணலிங்கம் ஐஏஎஸ் அவர்கள் சேர்மனாக இருந்த போது இத்துறை வளர்ச்சி கண்டது. பல மறுமலர்ச்சிகள் ஏற்பட்டது. உடன் பணியாற்றிய திரு. சிரியாக் ஐஏஎஸ் அவர்கள் தொழிற்பேட்டை இயக்குனரான போது கிண்டி, அம்பத்தூர், தொழிற்பேட்டைக்கு தனித்தனி மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கிக கொடுத்தார்கள்.

வளரும் தொழில்தலைமுறையினருக்கு நீங்கள் கூறவிரும்பும் அறிவுரை :

இன்றைய இளைஞர்கள் இத்துறையில் சாதிக்க விரும்பினால், துறை சார்ந்த அனுபவம் தொடர்ந்து கற்பது. வங்கி மற்றும் தொழிற்சாலை நடைமுறைகள், சட்டங்கள் குறித்து அறிந்திருப்பதோடு பொறுப்போடும், பொறுமையோடும் செயல்பட வேண்டும். ஒரு நிறுவனத்தை தொடங்குவது எளிது.

அதை வளர்த்தெடுத்து ஆலமரமாய் உருவாக்கி காலத்திற்கும் நிலை நிறுத்துவதில் தான் நமது உழைப்பும், சாதனையும் வெளிப்படும்.

நான் டான்ஸ்டியா தலைமைபொறுப்பிலிருந்த சமயத்தில் அப்போது சிறுதொழில்துறை அமைச்சராக இருந்த பொங்கலூர் பழனிச்சாமி அவர்கள். பலவகையான நலத்திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தார். சில தொழில்முனைவோர்களுடன் டெல்லி சென்று ஜனாதிபதி மாளிகையில் குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல்கலாம் அவர்களை சந்தித்து உரையாடிய நிகழ்வு காலத்தின் கல்வெட்டாகும்.

உங்கள் தொழில் வளர்ச்சிக்கு மத்திய, மாநில அரசுகளிடம் எதிர்பார்ப்பது என்ன ?

எங்கள் துறை வளர்ச்சிக்கு பல்வேறு சட்டதிட்டங்கள் தடையாக உள்ளது. அதையெல்லாம் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று ஒவ்வொன்றாய் சரி செய்து வருகிறோம். வெளி மாநிலங்களில் தமிழ்நாடு தொழில்முனைவோர் எளிதாக தொழில் தொடங்க முடியவில்லை. ஆனால், தமிழ்நாடு அரசோ வெளிமாநிலத்தவருக்கு பல்வேறு சலுகைகளும்,உதவியும் அளித்துஊக்கப்படுத்துகிறது. இந்நிலைமாறி எல்லோரும் எல்லா இடத்திலும் தொழில் செய்ய ஏற்ற சூழல் உருவானால், இத்துறையில் என்போன்று பல சாதனையாளர்களும், தொழில் முனைவோர்களும் ஊக்கமாக ஈடுபடுவார்கள்.

அது தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பிற்கும் பொருளாதார செழுமைக்கும் வழி வகுக்கும். நல்லதே நடக்கும் என நம்புவோம் என தனது நேர்காணலை நிறைவு செய்தார் திரு. ஆ. சண்முகவேலாயுதம் அவர்கள்.

– கைலை. சண்முகம்.

கார்கார்தார் ஒப்புரவு

ஒப்புர வொழுகு ஒளவைசொல் நன்மொழி!
நவமணியாய் ஒளிவீசும் ஒப்பற்ற ஒப்புரவு
தமிழ்த்தாய் திருமுடிக்கு அழகூட்டும் ஒப்புரவு!
சித்தர்கள் சிறப்பு நம்சிந்தையில் தெளிவாய்
சிறப்பாய் விளக்கி ஆன்மீக வழிகாட்டும்!
புராணம் இதிகாசம் எல்லாமும் தொகுத்து
அறநெறி தழைக்க தக்கபணி ஆற்றிடவே
ஆணவம் நமைவிட்டு அலறியே ஓடிடுதே!
உடற்பிணி அகல மருத்துவக் குறிப்பு
உளப்பிணி தீர திருமுறைக் கதைகள்!
வான்மீதில் உலவி வையம் புரக்கும்
கோள்கள் பற்றிய சூட்சமம் விளக்குமே!
கவிதை கட்டுரைகள் தித்திக்கும் தேனமுதம்!
ஒவ்வொரு திங்களும் நாடியே நம்மில்லம்
வீசிடும் தென்றலாய் வந்தே தவழ்ந்திடுதே!
ஏடுஇட்டோர் இயல் எத்தனை எத்தனை செய்திகள்!
சங்கப் பலகையில் சகலகலா செய்திகள்!
சிறுவர் பகுதி சிந்தனைப் பெட்டகம்!
செல்லாத துறைகள் இல்லை ஒப்புரவில்!
சொல்லாத செய்தி இல்லை ஒப்புரவில்!
அன்பு அமைதி இன்சொல் ஈகையெனப்
புன்னகை பூவாய் முகமே மலர
நன்னெறி யாவும் நயனுறத் தருமே!
கார்காத்தார் ஒப்புரவே வாழ்க! வளர்க!
உயர்தனிச் செம்மொழி தாய்த்தமிழ் வாழ்க!

– புலவர். ஏ. சுசீலா,
காட்டுமன்னார் கோயில்.

அருள்மிகு காமாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம்

பூலோக கைலாயமாம் சிதம்பரம் நகருக்கு தென்மேற்கே சுமார் 5 கி.மீ தொலைவில் உள்ள துணிசிரமேடு கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு காமாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோயில் தருமபுரம் குருமகா சன்னிதானம் அவர்கள் ஆசியுடன் திருப்பணி செய்யப்பட்டு **நாளது சுபகிருது வருடம் தை மாதம் 20-ந் தேதி 03-02-2023 வெள்ளிக்கிழமை காலை கும்பலக்னத்தில் 8.15 மணிக்கு மேல் 9.30 மணிக்குள்** குடமுழுக்கு நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு திருவருள் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வாழ்க்கை வாழ்வதற்கே!

''விடியும் வரை தெரிவதில்லை, கண்டது கனவு என்று
வாழ்க்கையும் அப்படித்தான்!
முடியும் வரை தெரிவதில்லை வாழ்வது எப்படி என்று.....

நமது நாட்டின் குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கையும், முதியவர்களின் இறப்பு எண்ணிக்கையும் மருத்துவத்துறையின் வளர்ச்சியால், குறைந்து வருவதால் நமது நாடு வேகமாக முதுமை அடைந்து வருகிறது. கடந்த காலங்களில் இளைஞர்கள் அதிகம் உள்ள நாடு, விரைவில் வல்லரசாகும் என கனவு காணப்பட்ட நமது நாடு, மாறி வரும் சூழல் உருவாகியுள்ளது. நம் நாட்டில் 9 கோடி முதியவர்கள் உள்ளனர், வரும் 2050–ம் ஆண்டில் அது 31 கோடியாக உயரும் என்றும் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள், இளைஞர்களைவிட 60 வயதைக்கடந்த முதியவர்களே அதிகம் இருப்பார்கள் என "HELP AGE INDIA" நிறுவனத்தின் ஆய்வறிக்கைத் தெரிவிக்கிறது. முதியவர்களுக்குமருத்துவத்தின்பலனாகநல்லகாலம், ஆனால் குடும்பம், உறவு முறைகளைப் பொறுத்தவரை உகந்த காலமில்லை. வாழும் நாட்கள் நோய் அல்ல. அது ஒரு பருவம் தான் , அதை அனைவரும் அடைந்தே தீரவேண்டும் என்பதை மனித சமுதாயம் உணர மறுக்கிறது. முதுமையடைந்தவர்களை உபயோக மற்றவர்கள் எனக் கருதும் சூழல் அதிகரித்துள்ளது. மூப்பின் காரணமாக பல உடல் உபாதைகளும், காது கேளாமை, கண் பார்வை குறைதல், ஞாபக மறதி, அன்றாடம் பிறரை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய நிலை உருவாகிறது. தனியாக வாழும் முதியவர்கள் உயிருக்கும், உடமைக்கும் உத்திரவாதம் இன்றி பயத்திலேயே நாட்களைக் கழிக்கிறார்கள். சமையல் செய்ய இயலாத நிலையில் உணவுப் பிரச்சனை முதலிடத்தில் உள்ளது.

இன்று 70–80 வயதுள்ள முதியவர்கள் தங்கள் இளமைக் காலத்தில் கிராமங்களிலேதான் பெரும்பாலும் வாழ்ந்திருப்பார்கள். ஒரு குடும்பத்தில் குறைந்தது 5–6 பிள்ளைகள் இருந்தார்கள். பொருளாதார நெருக்கடி, அரசு பள்ளிகளில் தான் படிப்பு, ஒருவர் பயன்படுத்திய பொருளையே அடுத்தவர் பயன்படுத்தியிருப்பார், பகிர்ந்துண்டு ஒரே பாயில் படுத்து உறங்கியிருப்பார்கள். இன்றிருப்பது போன்று பொழுதுபோக்கு சாதனங்கள் இல்லாததால் விளையாட்டில் கவனம் செலுத்தியிருப்பார்கள். பள்ளிப்படிப்பை முடித்து உயர்கல்வி பயில அருகிலுள்ள கல்லூரிகளில் தான் படித்தார்கள். செய்தித்தாள்கள், உயர்கல்விபடித்தவர்களின்வழிகாட்டுதல்மூலம்படித்து பதவியில் அமர்வார்கள். அவர்கள் தெரிந்தவர்களுக்கு, உறவுகளுக்கு, உயர் கல்விக்கு, வேலை வாய்ப்புக்கு வழிகாட்டியாக விளங்கி இருப்பார்கள். பெரியவர்களின் சிபாரிசுகளிலேயே பலரும் பல பணிகளில் அமர முடிந்தது. எந்த ஜாதகத்தையும் பார்க்காமல் பெரியவர்களின் ஆலோசனைப்படி அக்கா, அத்தை, மாமா, மகள் / மகனையே மணம் முடித்தனர். பணி நிமித்தம் காரணமாக வெளியூர்களில் வாழ்ந்தாலும் விசேட நாட்களில் அனைவரும் கூடி கிராமங்களில் கூட்டுக்குடும்பமாகக் கொண்டாடினார்கள். ஆனால் பள்ளிப்படிப்பு முதல் வேலை தேடும் வரை போட்டித் தேர்வுகள் இன்றைய தலைமுறை படிப்பைத்தேடி, வேலையைத்தேடி, பின் பொருளைத்தேடி பரபரப்பாக ஓடிக் கொண்டேயிருக்க வேண்டிய சூழல் உருவாகிவிட்டது. கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் பொருளாதாரம் உயர்கிறது. நிம்மதி குறைகிறது என்பதே உண்மை. அதனால் உடனிருந்து பெற்றோர்களுக்கு உதவும் சூழல் இல்லை. இருப்பினும் அவர்களுக்கு வீடு வாங்கி / கட்டிக் கொடுக்கிறார்கள், தேவையான பொருளுதவி செய்கிறார்கள். முதியவர்களுடன் அமர்ந்து பேச, உணவருந்த நேரமின்மை என்பது தான் மனக்குறையாக உள்ளது.

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் குழந்தைகள் வளர்ப்பில் போதிய கவனம் செலுத்த முடிவதில்லை. இளைய தலைமுறை நல்லவனாக அல்லது தீயவனாக வளர்வதற்கு பரம்பரை மரபுக் கூறுகள் காரணமா? சூழ்நிலை காரணமா? என்பதை தீர்மானிக்க முடியவில்லை. ஒருவரின் உடல்வாகு, முக அமைப்பு, தலைமுடி, உயரம், நிறம் போன்றவை மரபுக் கூறுகள் (GENES) காரணமாக அமைகிறது என்கிறார். சிலர், ஆனால், ஜப்பான்காரன் குள்ளமான தோற்றமுடையவன், மூன்று தலைமுறைகள் அமெரிக்காவில் குடியேறிய ஜப்பான்காரன் வாரிசுகள் உயரமாக வளர்கிறார்கள் என்பதால் உடல் அமைப்பு மரபுக் கூறுகளால் ஏற்படுகிறது என்கிற வாதம் பொய்யாகிறது. ஒருவரின் புத்திசாலித்தனம், உணர்ச்சி வசப்படுதல், நண்பர்களைப் பெறக்கூடிய ஆற்றல் போன்றவை பெற்றோர்கள் வசதி, கல்விச்சூழல், வளர்ப்புமுறை பொறுத்துதான் அமைகிறது. கோட்டஸ்மன் என்ற அறிஞர் ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகளை வெவ்வேறு சூழலில் வளர்த்தார், இரண்டும் வேறு வேறு குணங்களோடு வளர்ந்தார்கள். ஒரு புலிக்குட்டியை ஆட்டுமந்தையில் சேர்ந்து வளர்த்தபோது அதன் ஓடும் வேகம், வேட்டையாடும் திறனின்றி ஆடு போல் கத்தி, பயந்து வளர்ந்திருக்கிறது. அதனால் குழந்தைகளின் குணங்களுக்கு சூழல்தான் காரணம் என்கிறார் அந்த ஆராய்ச்சியாளர், ஆனால் வான்டென் பெர்க் என்ற ஆராச்சியாளர் குழந்தைகளை

மூன்று வகையாகப் பிரித்து, தனிமையில் இருக்க விரும்புகிறவர்கள், கலகலப்பாக இருப்பவர்கள், உணர்ச்சி வசப்படுகிறவர்கள் என்பது பாரம்பரியத்தின் தாக்கம்தான் என்கிறார். முதியவர்களை குழந்தைகள் முறையாகப் பார்த்துக் கொள்ளவில்லை என்பது பாரம்பரிய குணமா? சுற்றுச் சூழலால் ஏற்பட்ட குணமா? என்று எந்த முடிவுக்கும் நாம் வர முடியாது. பெற்றவர்கள் பள்ளிப்படிப்பையே முடிக்காத்தவராக இருக்க, பையன் உயர் கல்வி பயின்று, உயர் பதவிகளை வகிக்கிறார்கள் அதனால் முதியவர்கள் தங்கள் வாரிசுகளைக் குறை சொல்லாமல் தங்களை எப்படி மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளவேண்டும் என்பதை அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

மூப்பு என்பது எல்லா உயிர்களுக்கும் உண்டு என்றாலும், மனிதர்களுக்கு கடமைகளும், கவலைகளும் குழந்தைகளால் அதிகமாக உள்ளது. தங்களது இளமைக்காலம் முழுவதும் குடும்பத்துக்காக உழைத்து, தங்கள் வாரிசுகளின் உயர்வுக்காக வாழ்நாளில் பெரும்பகுதியை செலவழிக்கிறார்கள். இந்துக்கள் அதிகம் கொண்ட நமது நாட்டில் 10–ல் 7 பேர் கூட்டுக் குடும்பமாக வாழ்கிறார்கள் என்று புள்ளி விபரம் தெரிவிக்கிறது. தற்போது கூட்டுக்குடும்பம் சிதைந்து வருவதால் முதியவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். வயதான காலத்தில் உடல் ஒத்துழைப்பு கொடுக்காது, காரணம் உணவு முறை, வாழ்வியல் முறை என்றாலும் பெரிதும் காரணம் மனம்தான். அவர்களின் தனிமை காரணமாக கடந்த கால நினைவுகளை அசைபோட்டு, மன உளைச்சலுக்கு ஆளாகி, பின் மன அழுத்தம் உண்டாகி, அழையா விருந்தாளியாக பல நோய்களையும், உடல் உபாதைகளையும் வரவழைத்துகொள்கிறார்கள். ஒதுக்கித் தள்ளமுடியாத நோய்களுடன் நட்பு கொண்டு வாழப்பழகிக் கொள்ள வேண்டும். குழந்தையாய் இருந்த போது அன்பு பாராட்டி, அரவணைக்க அன்னை இருந்தாள். வாழ்க்கைத்துணை இறந்தால் ஏற்படும் தனிமை இன்று பெரும் பிரச்சனையாக உள்ளது. கணவன் இழப்பிற்குப் பிறகு மனைவியால் சமாளிக்கமுடிகிறது. ஆண்கள் உடல் வலிமையாக இருந்தாலும் மனவலிமை குறைந்தவர்கள் என்பது இந்த சூழலில் புரியும். இளமையில் மனைவி, கணவனை சார்ந்து இருப்பது போல் தோன்றும். (DEPENDENT WIFE), WEAKER SEX என்று மனைவியை ஆண்கள் சொல்லிக் கொள்வார்கள். முதுமையில்தான் ஆண்கள், தங்கள் தேவைகளுக்கு மனைவியையே சார்ந்து இருக்கிறார்கள் என்பதும் WEAKER SEX ஆண்கள்தான் என்பதும் புரியும். பெற்றோர்கள் ஒருவர் பின் ஒருவராக விடைபெறுவதால், ஒத்த வயதுடையோர் எண்ணிக்கை குறைவதால், கணவன் / மனைவி ஒருவருக்கு முன்னால் ஒருவர் விடைபெற்றிருப்பதால் வாழ்க்கை சூன்யமாகிவிட்டதாக முதுமையில் உணர்வார்கள்.

"வாழ்க்கை வாழ்வதற்கே" என்று தனிமையில் வாழவும் வாழ்வை ரசிக்கவும் பழகிக் கொள்ள வேண்டும், கால ஓட்டத்தில் பெற்ற பிள்ளைகளும், உறவும், சமூகமும் உங்கள் மீது அக்கறை செலுத்தாமல் இருக்கலாம். உங்கள் இடத்துக்கு மற்றவர் வந்துவிட்டதைப் பார்த்து நீங்கள் பொறாமைப்படவோ, முணுமுணுக்கவோ செய்யாமல் வாழ வேண்டும். இளமையிலேயே பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும், உடல் ஆரோக்கியமாக இருக்க போதிய உடற்பயிற்சி, ஆரோக்கியமான, கட்டுப்பாடான உணவு முறையைப் பின்பற்ற வேண்டும்.

"ஆறுதல் சொல்லத தோழி இருந்தால்
அழுவதில் கூட ஆனந்தம் உண்டு
தூக்கி நிறுத்த தோழன் இருந்தால்
விழுவதில் கூட சுகம் உண்டு"

தோழி, தோழர்களை இளமை முதல், முதுமை வரை தொடர்பில் வைத்துக்கொள்ள வேண்டும். வாழும் பகுதிகளில் நட்புகளுடன் இணைந்து சமுதாயப் பணிகளில் ஈடுபடுதல், சேவைச்சங்கங்கள் மூலம் சேவை செய்தல், முதியோர் சங்கங்கள், ஓய்வு பெற்றோர் சங்கங்கள், பிற சபாக்கள், இன்னிசை மன்றங்கள் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு முதியவர்கள் தங்களை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்துக்கொண்டால் "வயது என்பது வெறும் எண்தான்" என்பது புரியும். நடமாட முடியாதவர்கள் எழுத்தாளர்களாக, புத்தகங்களை விரும்பிப்படிப்பவர்களாக இருந்து மனச்சோர்விலிருந்தும், தனிமையிலிருந்தும் விடுபட்டு விடுகிறார்கள். வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் உங்களுக்குத் தெரிந்த சமையல், வாழ்க்கைக்குக் தேவையான செய்திகள், ஆன்மீகம் தொடர்பு செய்திகளைத் தயாரித்து இணையதளம், அலைபேசி, youtube வாயிலாகத் தெரிவித்து நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்கலாம்.

"முடங்கிக் கிடந்தால் சிலந்தியும் உன்னை சிறை பிடிக்கும் எழுந்து நடந்தால் எரிமலையும் உனக்கு வழி கொடுக்கும்" தன் குடும்பத்திற்காக வாழ்வது மட்டும் முழுமையான வாழ்வாகாது. மனித சமுதாயத்திற்காக வாழ்வதுதான் "வாழ்வாங்கு வாழுதல்" என அறநூல்கள் கூறுகின்றன "ஆண்டவனை உச்சரிக்கின்ற உதடுகளை விட அடுத்தவர்களுக்கு உதவுகின்ற கரங்கள் மேலானவை"

– ப. சுவாமிநாதன்,

சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : மங்களம், அலமேலு, ஆண்டாள், சித்ரா, வசுமதி, தீபிகா, கோமதி, பிரியா, கௌரி, பவித்ரா

இடம் – மயிலாப்பூர் உட்லாண்ட்ஸ் ஹோட்டல்

அலமேலு – என்னம்மா வழக்கமா ஏதாவது பார்க் அல்லது பீச் எங்கியாவதுதான் கூடச் சொல்லுவீங்க இன்னைக்கு என்ன ஹோட்டலுக்கு வரச் சொல்லி இருக்கீங்க ஏதாவது விசேஷமா ?

மங்களம் – யாருக்காவது கல்யாணம் நிச்சயம் ஆயிருக்கா ?

ஆண்டாள் – அல்லது புத்தாண்டு கொண்டாடறத்துக்கா ?

கௌரி – ஆண்டாள் மாமி சொன்னது ஓரளவுக்கு சரி . அதை நான் கடைசியில் சொல்றேன் இப்போ தீபாவளி , பொங்கல் புத்தாண்டு இதை எல்லாம் கொண்டாடறதைப் பத்தி ஆரம்பிப்போம்.

மங்களம் – சரி ஆரம்பிங்க யார் முதலில் ஆரம்பிக்கப் போறீங்க.

சித்ரா – வழக்கம் போல நான் தான் மாமி.

அலமேலு – சரி சொல்லும்மா எதைப் பத்தி ஆரம்பிக்கப்போறே.

சித்ரா – மாமி நம்ம பண்டிகைகளில வருட முதலில் ஜனவரியில் பொங்கலும் ஆகஸ்ட் செப்டம்பரில் பிள்ளையார் சதுர்த்தியும் அக்டோபர் நவம்பரில் ஆயுத பூஜையும் பிறகு தீபாவளியும் வருது.

வசுமதி – ஆனா இப்போ நாங்க சொல்லப்போறது ந்யூ இயர், பொங்கல் தீபாவளி தான்.

ஆண்டாள் – சரி ஒங்க சௌகரியப்படியே சொல்லுங்க.

தீபிகா – தீபாவளியை குடும்பத்தோடும், பொங்கலை சுற்றத்தோடும், கொண்டாடி மகிழ்வது போல் புத்தாண்டும், குடும்பமும் சுற்றமும் சூழ நிறைந்திருந்தால் அது கொண்டாட்டமா இருக்கும்.

அலமேலு – ஆனா இந்த காலத்து இளவட்டங்க அப்படி கொண்டாடறது இல்லியே அம்மா.

வசுமதி – கரெக்டா சொன்னீங்க மாமி காற்றையும், காதையும் கிழித்திடும்படி சைலன்ஸர் கட்டிய இருசக்கர வாகனங்களும், பாடல்களை இரைச்சலாக்கி அபாய வேகத்தில் ஓட்டும் வாகனமும், நடுரோட்டில் நண்பர்களோடு முகம் சுழிக்கும் வகையில் நடனமிட்டு புத்தாண்டை வரவேற்றிருந்தால் அது கொண்டாட்டமல்ல, கும்மாளம். தான்.

ஆண்டாள் – உறவுகள் ஒன்று சேர்ந்து வீட்டில் பின்னர் வீதியில், விளக்கேற்றி, உதிக்கின்ற புத்தாண்டு ஓர் உன்னத ஆண்டாக அமைய பிரார்த்தித்து, இருக்கின்ற இனிப்புகளை இல்லாதோருக்கு வழங்கி, தொடங்குகின்ற புத்தாண்டாக இருக்கும்.

தீபிகா – ஆண்டாள் மாமி சொல்றது சரிதான் அது நம் தமிழ்ப் புத்தாண்டுக்கு சரியா வரும். ஆனால் உலகம் பூரா கொண்டாடும் ஆங்கிலப் புத்தாண்டை ஏதாவது சுற்றுலா ஸ்தலங்களில் நண்பர்களுடன் கொண்டாடுவதையே இந்தக் கால இளைஞர்கள் விரும்புவார்கள்.

கோமதி – அப்படிப்பட்ட இடங்கள் நம்ம நாட்டில் நிறையவே இருக்கு.

அலமேலு – எது ஊட்டி கொடைக்கானலைச் சொல்றியா.

பிரியா – அதுவுந்தான் அவை மலை வாசஸ்தலங்கள் ஆனா நம் நாட்டில் பல விதமான சுற்றுலா ஸ்தலங்கள் உள்ளன.

மங்களம் – அப்படி என்னம்மா வித விதம்.

கௌரி – ஆமாம் மாமி அவ சொல்றது சரிதான் எப்படின்னா.

கடற்கரை உள்ள சுற்றுலா ஸ்தலம்னா சென்னை பாண்டிச்சேரி கோவா மங்களூர்னு பல இடங்கள் இருக்கு.

பிரியா – மலைவாச ஸ்தலம்னா மாமி சொன்ன ஊட்டி கொடைக்கானல் ஏற்காடு வட இந்தியாவிலும் சில இடங்கள் இருக்கு.

பவித்ரா – அரண்மனை போன்ற இடங்கள்னா மைசூர் இருக்கு.

கௌரி – கடற்கரை மலைகள் உள்ள இடம் போல் பாலைவனம் வேணும்னா ஜெய்சால்மர் இருக்கு.

அலமேலு – நீங்க சொல்றதெல்லாம் பாக்கும் போது முந்தி எல்லாம் ரேடியோவுல ஒருத்தர் தினமும் ஒரு தகவல் கொடுப்பாரு, அவரு ஞாபகம் வருது.

ஆண்டாள் – ஓ கோ தென்கச்சி கோ. சுவாமி நாதன் சொல்றியா அலமேலு.

சித்ரா – எஸ் எஸ் அலமேலு மாமி அவுரப் பத்தி தான் சொல்றாங்க.

மங்களம் – அவுரு ஒரு தர நம்ம சென்னை சங்கத்தில கூட பேசினாரு இல்ல இப்ப ஏன் அவுரு எங்கேயும் வரதில்லை.

கௌரி – பரவாயில்லியே மங்களம் மாமி அதெல்லாம் ஞாபகம் வச்சிருக்காங்களே.

நீங்க சொல்றது கரெக்ட் மாமி சென்னை கார்காத்தார் சங்கத்தின் ஆண்டு விழா ஒண்ணில் அவுரு பேசி யிருக்காரு. ஆனா அவுரு இப்போ காலமாயிட்டாரு.

அலமேலு – அப்படியா அடப் பாவமே அவுரப் பத்தி கொஞ்சம் விவரமா சொல்லுங்க அம்மா.

கௌரி – சித்ரா ஆரம்பிடீ.

சித்ரா – சரியக்கா தென்கச்சி கோ. சுவாமிநாதன் (1946 – 16 செப்டம்பர் 2009) புகழ்பெற்ற பேச்சாளரும், எழுத்தாளரும் ஆவார். 'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சி மூலம் வானொலி நேயர்களிடையே பிரபலமாக விளங்கினார். அகில இந்திய வானொலியில் உதவி இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். தொலைக்காட்சியில் 'இந்த நாள் இனிய நாள்' என்ற நிகழ்ச்சியை நடத்தி வந்தார். பல சிறுகதைகளையும் எழுதியிருந்தார்.

அலமேலு – தென்கச்சிக்கோங்கறது அவுரு ஊராம்மா ?

வசுமதி – இல்லே மாமி அரியலூர் மாவட்டம் தென்கச்சிப்பெருமாள் நத்தம்ங்கறது அவுரு ஊரு. கோ ங்கறது அவரோட இனிஷியல் மத்த விவரங்கள கோமதி சொல்லுவா.

கோமதி – சென்னை மடிப்பாக்கத்தில் வசித்து வந்த. வேளாண்மைப் பட்டதாரியான அவுரு நெல்லை வானொலியில் அறிவிப்பாளராகப் பணியைத் தொடங்கியவர். சென்னை வானொலி நிலையத்தில் இன்று ஒரு தகவல் நிகழ்ச்சி வழியாக உலகத் தமிழர் உள்ளங்களில் இடம் பிடித்தவர். திரைப்படங்களிலும் தொலைக்காட்சியிலும் நடித்தவர்.

பிரியா – மீதிய நான் சொல்றேன் இவர் தமிழ்நாடு அரசுப் பணியில் விவசாய அலுவலராக வாழ்க்கையைத் தொடங்கி, பின்னர் 1977 முதல் 1984 வரை திருநெல்வேலி வானொலி நிலையத்தில் பணிபுரிந்தார். அகில இந்திய வானொலியில் வேளாண்மை நிகழ்ச்சிப் பிரிவு இயக்குனராக இருந்தபோது "வீடும் வயலும்" என்ற நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

மங்களம் – ஏம்மா அவர் இன்று ஒரு தகவல்னு தொடர்ச்சியா சொல்லி வந்தாரே அதைத் தொகுத்து புத்தகமா போட்டிருக்காங்களா.

கௌரி – சரியா கேட்டீங்க மங்களம் மாமி இன்று ஒரு தகவல் 23 பாகங்கள் வெளியிட்டிருக்காங்க. அதைத் தவிர அவர் எழுதின வேறு பல புத்தகங்களும் வெளி வந்திருக்கு.

அலமேலு – சரிம்மா அவுரு எப்படி இறந்தாரு எப்ப இறந்தாரு ?

அவுருக்கு குழந்தைகள் இருக்கா ?

கௌரி – இதயநோயால் அவதிப்பட்ட சுவாமிநாதன் போரூர் மருத்துவமனையில் 2009 செப்டம்பர் 16 புதன்கிழமை அன்று பகல் 12:40மணிக்கு காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 63. சுவாமிநாதனுக்கு மனைவி மகாலட்சுமி, மகள் செந்தமிழ்ச்செல்வி ஆகியோர் உள்ளனர்.

ஆண்டாள் – சரி கௌரி நேரம் ஆச்சு நீ ஏதோ கடைசியா சொல்றேன்னு சொன்னியே அதைச் சொல்லும்மா.

கௌரி – அடுத்த மாதத்திலேர்ந்து உங்க சந்திப்பில நான் கலந்துக்க முடியாது அதனால தான் பிரியறத்துக்கு முன்னால் நாம எல்லாம் கூடி சாப்பிட்டு விட்டு பிரியலாம்னு இங்கே வரச் சொன்னேன். தோதா புத்தாண்டும் பிறந்திருக்கு.

ஆண்டாள் அலமேலு மங்களம் – எல்லோரும் சேர்ந்து அய்யையோ என்னம்மா இது புத்தாண்டும் அதுவுமா குண்டு போடற ? கல்யாணம் நிச்சயம் ஆச்சா ?

கௌரி – அதெல்லாம் ஒண்ணுமில்லே மாமி ஒரு கோர்ஸ் படிக்க அமெரிக்கா போறேன்.

அலமேலு – அது எப்ப முடியும் முடிஞ்சப்பறம் வந்துடுவே இல்லே.

கௌரி – அதை இப்போ சொல்ல முடியாது கோர்ஸ் 2 வருஷந்தான் முடிஞ்சா முன்னாலியே கூட முடிச்சுடலாம் அதில் என் பெர்ஃபாமன்ஸை பாத்துட்டு அவுங்களே வேலைக்கு எடுத்து கிட்டாலும் எடுத்துப்பாங்க.

ஆண்டாள் – உன் திறமைக்கு உனக்கு நிச்சயம் அங்கேயே வேலை கிடைக்கும் ஆனா எங்களுக்குத் தான் நீ இங்கே இல்லாதது பெரிய நஷ்டம்.

கௌரி – ஏன் மாமி அப்பிடி சொல்றீங்க. நான் இல்லாட்டியும் என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் இருக்காங்க நீங்க எல்லாம் இருக்கீங்க அதனால நீங்கல் எல்லாம் வழக்கம் போல் கூடிப் பேசுங்கன்னு சொல்லிட்டு இது வரைக்கும் எனக்கு சான்ஸ் குடுத்ததற்கு உங்க எல்லாருக்கும் தாங்க்ஸ் சொல்லிட்டு ஒண்ணா சாப்பிட்டு விட்டுப் போகலாம்னுதான் இன்னிக்கு வந்தேன்.

மங்களம் – நீ இல்லாம அது எப்படிம்மா முடியும்.

கௌரி – அப்படி சொல்லாதீங்க மாமி நாம எல்லார் கிட்டேயும் ஒவ்வொரு திறமை இருக்கும் வாய்ப்பு கிடைக்கும்போது தான் அதை வெளிப்படுத்த முடியும் இந்த சந்தர்ப்பத்தை யூஸ் படுத்திகிட்டு நீங்க எல்லாம் வழக்கம் போல கூடிப் பேசுங்க . தாங்ஸ் டு ஆல் அண்ட் பை பை.

எல்லோரும் – பை பை ஆல் தெ பெஸ்ட் கௌரி.

அத்துடன் எல்லோரும் பிரிய மனமில்லாமல் சாப்பிடக் கிளம்புகிறார்கள்.

அப்பா – ஒரு மந்திர சொல்

Dr. D. Kalyanakumar, Trichy-18.

தன் வாழ்நாள் பூராவும் மனதிலும் தோளிலும் சுமக்கின்ற அப்பாவின் பெருமைகளை இறந்த பிறகே உலகம் புரிந்து கொள்கிறது என்கிற அருமையான கருத்தை உணர்த்தும் முகநூலில் படித்த நெஞ்சைத்தொட்ட கதை!! தற்போது அப்பாவாக இருப்பவர்களும் அவர்களின் அனைத்து பிள்ளைகளும் கட்டாயம் படிக்க வேண்டிய அற்புதமான சிறு கதை. இனி கதையை படிப்போமா ?

அம்மா, கொஞ்சம் தாகத்துக்கு ஜலம் குடிச்சுக்கோ, வெய்யில் வேற இன்னிக்கு அதிகமா இருக்கு என்று தனது 75 வயது அம்மாவை அக்கறையோடு கேட்டான் ரகுராமன். அதெல்லாம் ஒண்ணும் வேணாண்டா சீக்கிரமா வேலையை முடிச்சுட்டு ஆத்துக்கு போயிடலாம் என்றாள் அம்மா. பேங்க் மேனேஜரைப் பார்த்து வாரிசு சர்டிபிகேட் பாஸ்புக் கூடவே ஒரு கவரிங் லெட்டர் எல்லாம் கொடுத்து விட்டு. ''எங்க அம்மா சகுந்தலா பெயரில் எல்லாம் மாத்திடுங்க சார்.'' என்றான் ரகுராமன். பிறகு கொஞ்ச நேரம் காத்திருந்தான்.

அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டான். அப்பா இறந்து போய் இந்த 45 நாட்களில் அம்மா ரொம்பவும் ஆடித்தான் போயிட்டா. ''அம்மா கவலைப் படாதேம்மா'' என்று ரகுராமனும் அவன் மனைவியும் அடிக்கடி சொல்லி அவளை ஒருவாறு தேர்த்தி இப்போதுதான் கொஞ்சம் பேச ஆரம்பித்திருந்தாள். ஆகஸ்ட் மாசக் கடைசியில் மகன் வாசுவுக்கு உபநயனம் செஞ்சுடலாம்னு அப்பாவிடம் ஏப்ரல் மாதமே நாள் பார்க்கச் சொல்லி இருந்தான் ரகுராமன். விஷயத்தைக் கேட்டவுடன், பத்துப் பதினைந்து வயது குறைந்தவராக, ஆட்டோ பிடிச்சு நாலு இடம் போய் நல்ல நாள் பார்த்துக் குறிச்சுக் கொண்டு வந்தார் அப்பா.

அப்போது தெரியாது ரகுராமனுக்கு அடுத்த மாசமே அப்பா போயிடுவார்னு 'ரகு, நீ பணம் எதுவும் கொண்டுவர வேண்டாம். என் பேரன் வாசுவை மட்டும் இங்குக் கூட்டிண்டு வா. எல்லா செலவையும் நான்தான் செய்வேன்'' என்று சந்தோஷமாகச் சொன்ன அப்பா இப்போது இல்லை. பென்ஷன் பணம், நிலத்தில் கிடைக்கும் கொஞ்ச மகசூல் பணம் இதெல்லாம் சேர்த்து வெச்சிருப்பாரோ ஒரு வீடு ஊர்ல இருக்கு. அதையும் வாடகைக்கு விட்டிருந்தார். அந்த வாடகைப் பணம் நேராக பேங்குக்கு வர்றமாதிரி பேசி வெச்சிருந்தார் அப்பா. 'லாக்கர்ல அதிகம் பொருட்கள் இல்ல. எதுக்கு வேஸ்ட்டா அதுக்கு வருஷத்துக்கு ஆயிரத்து ஐநூறு வாடகை கொடுக்கணும்'' னு அம்மா சொன்ன போது, ''இருக்கட்டும் நம்ம பையன் சீக்கிரம் நகைகள் வாங்கிண்டு வந்து அடுக்குவான். இருக்கட்டும்''னு சொன்னார்.

''ரொம்ப தைரியமான மனிதர் என் அப்பா'' என்று ரகுராமன் மனதுக்குள் தன் அப்பாவைப் பற்றி சிலாகித்துக் கொண்டான். பி.காம் படிச்சு முடிச்சு ஆறு மாதத்துக்குப் பிறகு தனியார் கம்பெனி சோளிங்கர் பிராஞ்சுல வேலை கிடைச்சு லெட்டர் வந்தவுடன், மாயவரம் ரயில்வே ஜங்க்ஷனுக்குப் போய் செங்கல்பட்டுக்கு டிக்கெட் போட்டு வந்தார் அப்பா. ''நேரா செங்கல்பட்டு வரைக்கும் ரயில்ல போ அங்கேர்ந்து சோளிங்கர்க்கு பஸ்ல போயிடலாம். மெட்ராஸ் போய் சோளிங்கர் போனா 3 மணிநேரம் டைம் வேஸ்ட்'' என்றார். பிறகு, ''செங்கல்பட்டு ஸ்டேஷன்ல இறங்கி பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்துல நரசிம்ம விலாஸ்னு ஒரு ஹோட்டல் இருக்கு, பேர பார்த்துட்டு அது சைவ ஹோட்டல் னு நெனைச்சு போயிடாதே. பேர அப்படி வெச்சு ஏமாத்தறான். அது அசைவ ஹோட்டல். நன்னா விசாரிச்சிட்டு நல்ல ஹோட்டலாப் பார்த்து சாப்பிடு'' என்றார்.

முதல் மாசம் சம்பளம் வாங்கினவுடன் ரகுராமன் பெயரிலேயே ஒரு பேங்க் அக்கவுண்ட் திறந்து அதில் மாதாமாதம் சம்பள பணத்தைப் போட்டு சேமிக்கக் கற்றுக் கொடுத்தவர். இன்று ரகுராமனுக்குத் திருமணமாகி 15 வருடம் முடிந்த நிலையில், பிள்ளைகள் படிப்பு, நகர வாழ்க்கையில் வாடகை, இதர செலவுகள் என்று நிறைய செலவுகள். எந்த மாதமும் அப்பா ரகுவிடம் செலவுக்கு பணம் எடுத்துக்கொடு எனக் கேட்டதேயில்லை. மாறாக தீபாவளி, சங்கராந்தி, கார்த்திகை தீபம், ஆடிப்பெருக்கு என்று எல்லாருக்கும் டிரஸ் வாங்கி அனுப்புவதும் ''டவுன்ல இதெல்லாம் உனக்கு செய்ய நேரமே இருக்காது'' என்று அம்மா பக்ஷணங்கள் செய்து அனுப்புவதும் வருஷா வருஷம் நடந்த நிகழ்வுகள்.

அப்பாவும் அம்மாவும் தனியாக இருக்கிறார்கள் என்று லீவு விடும் போதெல்லாம் மகனை அனுப்பி வைப்பான் ரகு. ஒவ்வொரு முறையும் பேரனுக்குச் செயின், மோதிரம், சைக்கிள் என்று விலை உயர்வான பொருட்களை வாங்கிக் கொடுப்பார் ரகுராமனின் அப்பா. அவருக்கு செலவுக்கு இருக்கான்னு எப்போதாவது கேட்கும்போது ''நிறைய இருக்கு, கவலைப்படாதே பகவான் குடுக்கறதை பத்திரமா வெச்சு செலவு பண்ணனும்'' னு சொல்வார்.

''சார், மேனேஜர் கூப்பிடறார்'' என்று வங்கி ஊழியர் கூப்பிட நினைவுக்கு வந்தான் ரகுராமன்.

அம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே போனான். ''உங்க அப்பாவோட அக்கவுண்ட்ல ஒரு லட்சத்து எழுபதாயிரம் இருக்கு, அதை அப்படியே உங்க அம்மா அக்கவுண்டுக்கு மாத்திடவா''. என்றார் ரகு, ''சரி'' என்றான். அம்மாவோ உடனே, ''அது வாசுவின் உபநயனத்துக்கு நீ எடுத்துக்கோ அதுக்குத்தான் உங்க அப்பா வெச்சிருந்தார்'' என்றாள். இந்த நிலைமையில் உபநயனம் எப்படிம்மா என்றதற்கு ''அது எப்போ செய்தாலும் இந்தப் பணத்துலதான் செய்யணும், அதுதான் அப்பாவோட ஆசை'' என்றாள் ரகுராமனின் அம்மா.

ரகு, ''அம்மா சரி போவோம்'' னு கிளம்ப வங்கி மேனேஜர், ''லாக்கர்ல எதுவும் பார்க்கலியா'' என்றார். ''அதை மறந்தே போய்ட்டோம். சரி அதுல வெள்ளி டம்ளர், வெள்ளி சொம்பு தான் இருக்கும்'' னு ரகுராமன் சொன்னான். எதற்கும் பார்க்கப் போனார்கள். அப்பா வைத்திருந்த லாக்கர் சாவியைப் போட்டுத் திறந்து பார்த்தபோது உள்ளே 2 பேப்பர்க் கட்டுகள். பிரித்துப் பார்த்தபோது அவை அந்த பேங்க்கின் ஷேர் பத்திரங்கள். 500 ஷேர்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாய் மதிப்புக்கு எல்லாவற்றையும் அம்மா பெயருக்கு வாங்கி வைத்திருந்தார். கிட்டத்தட்ட 5 லட்சம் ரூபாய் மதிப்புக்கு, மேலே, ஒரு கடிதம். அதில் ''என் காலத்துக்குப் பிறகு என் மனைவி சகுந்தலாவுக்கு இந்த ஷேர்கள் உபயோகமாகட்டும்'' என்று சுருக்கமாக எழுதி இருந்தார் அப்பா.

அதற்குக் கீழே ஒரு சுருக்குப் பையில் என்னவோ இருந்தது. என்ன என்று பார்த்தால் ஒரு செட் வெள்ளிப் பூணல்! ஒரு செட் தங்கப் பூணல்!! அவற்றைப் பார்த்த பிறகு ரகுவுக்குத் துக்கம் அடக்க முடியவில்லை. பேரனின் உபநயனத்துக்கு எவ்வளவு பிளான் செய்து வைத்திருக்கிறார் அப்பா. குலுங்கிக் குலுங்கி அழத்தொடங்கினான் ரகு. சற்றுத் தள்ளி நின்றிருந்த வங்கி மேனேஜர், ''ரகுராமன் சார், தண்ணீர் குடிங்க'' என்று ஆசுவாசப்படுத்தினார். அம்மாவைப் பார்த்தான் ரகு. அவள் கண்களிலும் சில துளி கண்ணீர் இருந்தது. ரகுராமனுக்கு அம்மா ஆறுதல் சொன்னாள். வீட்டுக்கு வரும் வழியில் ஆட்டோவில் வரும்போது அம்மாவிடம் கேட்டான் ரகுராமன். ''எனக்குன்னு ஒரு செலவு கூட வெக்கலியே அப்பா... உனக்குக் கூட பேங்க் ஷேர் அஞ்சு லட்சத்துக்கு வாங்கி வெச்சுட்டுப் போய்ட்டார்.

அவரோட காலத்துக்குப் பிறகும் அவர் காசு நமக்கு வந்துண்டிருக்கு, ''எனக்கு செலவு எதுவும் வைக்கலியே'' என்றான் அம்மாவின் கரத்தை பிடித்துக்கொண்டு ''அதாண்டா அப்பா'' என்றாள் ரகுவின் அம்மா.

அப்பா இறந்த பிறகே உலகம் அவரைப் புரிந்துகொள்கிறது. தாய் பத்துமாசம் சுமந்தாள் என்றாள், தகப்பனோ தன் வாழ்நாள் பூராவும் மனதிலும் தோளிலும் சுமக்கிறான்.

''நம் தந்தை
சொன்னதெல்லாம் சரிதான்''
என்று நாம் உணரும் காலத்தில்
''நீ சொல்வதெல்லாம் தவறு''
என்று சொல்ல நமக்கு ஒரு
மகன் பிறந்து விடுகிறான்.

மேல் நோக்கு நாள் கீழ்நோக்கு நாள் என்றால் என்ன?

தினசரி காலண்டர்கள் மூலமாக இந்த நாட்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம். அதில் மேல்நோக்கு, கீழ்நோக்கு சமநோக்குநாள் என்று பதிவு செய்யபட்டு இருக்கும். இந்த நாள்கள் மூன்றும் நட்சத்திரத்தின் அடிப்படையில் அமைகின்றன.

ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், சதயம், அவிட்டம், உத்திரம், ஆகிய 9 நட்சத்திரங்களை கொண்ட நாட்கள் மேல்நோக்கு நாட்கள். மேல்நோக்கி வளர்கின்ற பயிர்களுக்காக விதைக்கவும் மரங்களை நடுவதற்கும் மேல் நோக்கி எழும் கட்டிடங்கள் கட்ட உரிய நாட்கள் ஆகும்.

கீழ்நோக்கு நாட்கள் : பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி – 9 நட்சத்திரங்கள் கொண்ட நாட்களாகும். இந்த நாட்களில் கிணறு வெட்டுதல் சுரங்கப்பணி அமைத்தல், செடிகளை பயிரிடுவது முதலான (கிழங்கு வகை மண்ணுக்குள் பலன் தருபவை) போன்ற பணிகளை செய்யலாம்.

சமநோக்கு நாட்கள் : அஸ்வினி, மிருகசீரிஷம், புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி ஆகிய 9 நட்சத்திரங்களில் வாகனம் வாங்குதல், செல்ல பிராணிகளை வாங்குதல், சாலை அமைத்தல், வாசல்கால் அமைத்தல் ஆகிய பணிகளை செய்யலாம். இவற்றை குறியீடு மூலமாகவும் ↑↓↔ அறிந்து கொள்ளலாம்.

பாபு (எ) ராமசெல்வம், விசலூர்.
9750806991

நட்சத்திரங்களும் மரங்களும்

(தொடர்ச்சி)

அக்ரி. கு. சேதுசுப்ரமணியன், சிதம்பரம்.

அலைபேசி : 9443665642

9. ஆயில்யம் :

சோதிடத்திலும், இந்திய வானியலிலும், இராசிக் சக்கரத்தில் வருகின்ற 27 நட்சத்திரங்களில் 9–வது நட்சத்திரமாய் விளங்குகின்ற ஆயில்யம் கடக இராசியில் அமைந்துள்ளதாகும். இதன் நான்கு பாதங்களும் கடக இராசியில் அடங்கிவிடும். திருமால் இராமாவதாரம் எடுத்தபோது அவரை விட்டுப் பிரியாது பணிவிடை செய்த இலக்குவணன் பிறந்த நட்சத்திரம் ஆயில்யம் ஆகும். ஆதிசேஷனுடைய நட்சத்திரமாகவும் விளங்குகின்றது.

சந்திரனுக்குரிய கடக இராசியில் அமைந்துள்ள ஆயில்ய நட்சத்திரத்துக்கு புதன் கிரகாதிபதியாகிறார். அதனால் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு சந்திரனுடைய படைப்பாற்றலும், புதனுக்குரிய சாதுரியமும் இயல்பாகவே அமைந்திருக்கும். இந்த நட்சத்திரத்தின் அதிதேவதை ஆதிசேஷன், கணம் இராட்சசம், மிருகம் பூனை, பறவை சிக்கிலி, விருட்சம் புன்னை மரம் என்பவையாம். இத்தகைய சிறப்புமிக்க ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்களுக்கு திருமணப் பேச்சு துவங்கினால் மாமியாருக்கு ஆகாது என்று ஒதுக்குவது மூட நம்பிக்கையேயன்றி வேறில்லை.

ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் புத்திகூர்மை உடையவராகவும், மற்றவர்களை வழிநடத்தும் ஆற்றல் கொண்டவராகவும் இருப்பார்கள். சுறுசுறுப்பாய் இயங்குவார்கள். கலகலப்பாக இருந்தாலும் சமயத்தில் பாம்பைப் போல் சீறும் தன்மை உடையவர்கள். சுகபோக வாழ்க்கையில் விருப்பம் கொண்டவர்கள். நம்பி வந்தவர்களைக் காப்பாற்றும் குணமும் இவர்களிடம் உண்டு.

ஆயில்ய நட்சத்திரத்துக்குரிய விருட்சம் புன்னாகம் என்னும் புன்னை மரமாகும். திரு மயிலாப்பூர், திருநாரையூர், திருப்புறம்பியம், திரு அம்பர் பெருந்திருக்கோயில், திருப்புகலூர், திருவேட்டக்குடி, திருப்புனவாயில் ஆகிய திருத்தலங்களில் விருட்சமாக விளங்குகின்றது.

தல வரலாறுகள் :

ஒரு சமயம் கயிலைநாதன் பார்வதி தேவிக்கு மந்திர உபதேசம் செய்து கொண்டிருந்தபோது, தேவியார் ஒரு மயிலின் ஆட்டத்தால் ஈர்க்கப்பட்டு கவனத்தைச் சிதறவிட்டதால், இறைவன் பூமியில் மயிலாகப் பிறக்க சாபமிட்டார். இறைவியும் பூமியில் மயிலாகப் பிறந்து மயிலாப்பூர் திருத்தலத்தில் புன்னை மரத்தடியில் எழுந்தருளியிருந்த இறைவனை வழிபாடு செய்து சாப விமோசனம் பெற்றார்.

திருமயிலாப்பூரில் வாழ்ந்த சிவநேசர் என்னும் வணிகர் சிவபக்தியில் சிறந்தவர். இவருடைய புதல்வி பூம்பாவையை திருஞானசம்பந்தருக்கு மணம் முடிக்க எண்ணினார். பூம்பாவை இறைவனுக்காக மலர் பறிக்கச் சென்ற போது அரவு தீண்டி இறந்து விடுகிறார். திருமகளை எரியூட்டி அஸ்தியை ஒரு மண்பானையில் இட்டு பாதுகாத்து வந்தார். திருஞானசம்பந்தர் இத்தலம் வந்ததும் நடந்ததை அறிந்து அந்த மண்குடத்தைக் கொண்டு வரச்செய்து "மட்டிட்ட புன்னையங் கானன் மட மயிலை" எனத் தொடங்கும் பதிகம் பாடி பூம்பாவையை உயிர்பெறச் செய்தார். தேன்பொருந்திய அழகிய புன்னை மரம் சூழ்ந்த திருமயிலை என ஞானசம்பந்தர் இத்தலத்தைப் போற்றுகிறார்.

புன்னாக வனம் என அழைக்கப்படும் திருநாரையூரில் புன்னை மரத்தடியில் எழுந்தருளியிருந்த அவருக்கு கந்தர்வனால் இடர்ப்பாடு ஏற்பட்டு, அவன் நாரையாகப் பிறக்குமாறு சபித்தார். சாப விமோசனம் வேண்டிய கந்தர்வனை இத்தலத்துள் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தை நாள்தோறும் வழிபாடு செய்து வரப்பணித்தார். அவ்வாறே நாள்தோறும் நாரையானது தினமும் கங்கையிலிருந்துநீர்கொண்டுவந்துசிவலிங்கத்துக்கு திருமுழுக்கீடு செய்து வழிபட்டு வந்தது. ஒரு சமயம், புயலில் சிக்கித் தன் சிறகுகளை இழந்த நாரை, பெரும் முயற்சி செய்து இறைவன் சந்நிதி சென்று தன் பூசையை நிறைவேற்றியது. நாரை சாப விமோசனம் பெற்றதால் இத்தலம் திருநாரையூர் எனப்பெற்றது. திருவேட்டக்குடி என்னும் திருத்தலத்தில் இறைவி புன்னை மரத்தடியில் சிவலிங்கம் தாபித்து வழிபட்டு பேறு பெற்றார்.

திருப்புறம்பியம் தலத்தின் இறைவன் புன்னை வனநாதர் என்ற திருப்பெயருடன் அருள்பாலிக்கிறார்.

புன்னை மரம் :

புன்னை மரம் பூக்கும் இருவித்திலைத் தாவரமாகும். இம்மரம் கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் கடற்கரை ஒட்டிய பகுதிகளில் வளருகிறது. இதன் தாவரவியல் பெயர் Calophyllum inophyllum Linn. என்பதாகும். Gutiferae என்ற தாவரக்குடும்பத்தைச் சேர்ந்தது. இம் மரம் அடர்ந்த தழையமைப்பைக் கொண்ட பசுமை மாறா மரமாகும். பூக்கள்வெண்மைநிறத்துடன்நறுமணம்கொண்டவை. ஏப்ரல்–மே மாதங்களில் பூத்து ஆகஸ்டு–செப்டம்பர் மாதங்களில் கனிகள் உருவாகின்றன.

மரத்தின் பட்டை தசையிறுக்கியாகச் (Asringent) செயல்படும். பட்டையினை இடித்து கொதிநீரில் இட்டு வடிநீர் (decoction) தயார் செய்து உள்ளுக்குக் கொடுக்க உள் இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தும்.

பட்டையை நீர்விட்டு அரைத்து விரைவீக்கத்துக்குப் பற்றாக (Poultice) இட வீக்கம் குறையும்.

மரத்திலிருந்து வடியும் பிசினை எடுத்து நீரில் இட்டு சிறிது நேரம் வைத்திருக்க, மேலாக எண்ணெய் மிதக்கும். இந்த எண்ணெயை கண்ணுக்கு இட கண்நோய்க்கு மருந்தாகும். புண்களுக்கும் இடலாம். இலைகளைக் காயவைத்துப் பொடியாக்கி சிறிதளவு நாசி வழியாக உள்ளுக்கு இழுக்க ஒற்றைத்தலைவலி (Migraine) தீரும்.

புன்னைக் கொட்டை பருப்பில் சராசரியாக 60% எண்ணெய் உள்ளது. இந்த எண்ணெயை விளக்கெரிக்கப் பயன்படுத்தினால் கண்ணுக்குக் குளிர்ச்சி தரும். சோப்புத் தொழிலிலும் புன்னை எண்ணெய் பயன்படுகிறது. மருத்துவ ரீதியாகவும் பெருமளவில் பயனளிக்கின்றது.

புன்னை மரம் நல்ல நிழல் தரும் மரமாக (Avenue tree) சாலையோரங்களில் நடுவதற்கு ஏற்றது. ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் திருமயிலாப்பூர், திருநாரையூர், திருப்புறம்பியம், திருப்புகலூர், திருவேட்டக்குடி, திருப்புனவாயில், ஆகிய தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்ய நற்பலன்கள் உண்டாகும்.

சங்கரன்கோயிலில் உள்ள சங்கரநாராயணர் சந்நிதியில் வழங்கப்படும் புன்னைமரப்பட்டை செல்லரித்த புற்றுமண் பிரசாதம் எல்லா நோய்களையும் தீர்க்கவல்லது.

சென்னைக்கு அருகில் உள்ள திருவிடந்தை ஆதிவராகப் பெருமாள் கோயிலும் ஒரு பரிகாரத்தலமாகும். மேற்கண்ட திருத்தலங்கள் பரிகாரத்தலங்களாக விளங்குவதால் அங்கு சென்று வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்வதோடு அங்கிருக்கும் புன்னை விருட்சத்துக்கு விளக்கேற்றி வழிபடுவதும், கீழிருக்கும் நாகர்களுக்கு நீல மலர் கொண்டு பூசிப்பதும் நன்மை பயக்கும்.

புன்னை மரக்கன்றுகளை வாய்ப்புள்ள இடங்களில் நட்டு வளர்ப்பதும், புன்னை மரங்களுக்கு நீர் ஊற்றி வருவதும் சிறந்த பரிகாரங்களாகும்.

(பயணிப்போம்)

ஜெயஸ்ரீ திருமண தகவல் மையம்

19/2, வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிவுக்கட்டணம் ரூ. 200/– மட்டும் பெறப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவு ஓர் ஆண்டிற்கு பிறகு புதுப்பிக்க வேண்டும். திருமணம் முடிந்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

அலுவலக நேரம் : மாலை 4.30 மணி முதல் 7.30 வரை ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடித தொடர்புமுகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை – 609 001.

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/1 செல்வி **V. நந்தினி** திருவோணம் செம்பதரிய பூர்வீகம் : பரதூர் – சிதம்பரம்	24.03.98 5' - 3"	B.E. (ECE)	Software Engineer Chennai Rs. 9 Lakhs/PA	திரு. S. வாசுதேவன், 8, மீனாட்சி அவென்யு, சாந்தி நகர், சிதம்பரம் – 608 001. Cell : 82206 30973, 99443 27563
B 2/1 செல்வி **B.V. அட்சயா** ஆயில்யம் ஷேஷதரிய பூர்வீகம் : நந்தீஸ்வரமங்களம்–ஸ்ரீமுஷ்ணம் தாலுகா விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன்.	11.08.99 5' - 2"	B.Tech., Bio Technology	Episource India Pvt. Ltd., Rs. 20,000/PM	திரு. C. வேல்முருகன், நந்தீஸ்வரமங்களம் (PO), ஸ்ரீமுஷ்ணம் (Tk), Cell : 99762 52642, 93166 06299
B 3/1 செல்வி **மு. திவ்யபிரியா** கேட்டை 2ம் பாதம் வஞ்சினமுட பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt) விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன்	02.06.96 5' - 4"	B.A. (English)		திரு. ச. முருகேசன் பிள்ளை, 1/53, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO), செந்துறை (Tk), அரியலூர் (DT) – 621 714, Cell : 96263 97559 (Whatsapp) 94869 67149, 85319 86109
B 4/1 செல்வி **ப. திரிபுரசுந்தரி** பூசம் 4ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : சாத்தநத்தம் விருப்பம் : பணியில் உள்ள வரன்	03.11.96 163 cm	B.C.A.,	CSS Corp. Chennai Rs. 35,000/PM	திரு. P. பழனிவேல், சாத்தநத்தம், திட்டக்குடி வட்டம், Cell : 95007 90802, 79040 77494
B 5/1 செல்வி **மா. காயத்ரி** சதயம் காருட பூர்வீகம் : ப. திருமாளம் – திருவாரூர் மாவட்டம் விருப்பம் : படித்த, பணியில் உள்ள வரன்	27.08.99 168 cm	B.E. (EEE)		திரு. ச. மாதவன், 2/220, மெயின் ரோடு, ப. திருமாளம், பூந்தோட்டம் வழி, திருவாரூர் மாவட்டம் – 609 503. Cell : 99653 41179 87788 60062 (W)
B 6/1 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : சமபடிப்பு/சென்னை/பெங்களூரில் நல்ல பணியில் உள்ள வரன்	16.09.95 155 cm	B.E. (Com. Sci) M.Sc., Cyber Forensics and Information Security	Associate in MNC Bangalore (Top 5 Company)	திரு. N. Gowrishankar, 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044 – 2363 8284
B 7/1 செல்வி **M. அஞ்சனா** விசாகம் செலுத்திரை பூர்வீகம் : அம்பாசமுத்திரம் – திருநெல்வேலி மாவட்டம்	15.10.96 150 cm	B.E., (Electronics & Telecommunication)	IT, MNC Bangalore Rs. 10 Lakhs/PA	திரு. N. மாணிக்கவாசகம், 14/31, மேலப்பாளையம், தெற்கு ரத வீதி, அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்–627 401. Cell : 94242 69714, 95846 00244 E-mail : nmani1960@gmail.com

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 8/1 செல்வி **B. திவ்யா** மூலம் 2ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : சாத்துக்கூடல் விருப்பம் : பொருத்தமான வரன்.	14.12.93	B.E. (CS)	Software Engineer Accenture Chennai	திரு. S. பாலகிருஷ்ணன் பிள்ளை, வடக்கு தெரு, மேல்பாதி, சாத்துக்கூடல், விருத்தாசலம் (TK) – **606 110.** Cell : **99529 20903** **81487 67273** (Whatsapp)
B 9/1 செல்வி **ப. ஸ்ரீநிதி** ரேவதி உத்திரக்குட பூர்வீகம் : கடக்கம் (திருவாளபுத்தூர்) குறிப்பு : 7ல் ராகு – கேது இருக்கும் அணுகவும்	12.08.98 158 cm	B.Tech (IT),	Technology Analyst at Infosys Pvt. Ltd., Mahindra World City Chengalpet. Rs. 6 Lakhs/PA	திரு. தி. பழமலை, **11/224,** ஆஞ்சநேயபுரம், முதல் தெரு, காக்களூர் தொழிற்பேட்டை (PO) திருவள்ளூர் – **602 003.** Cell : **94445 63618** **94432 70311** (Whatsapp) e-mail : siva.yoga.t@gmail.com
B 10/1 செல்வி **G. காகரபிரியா** உத்திரம் 2ம் பாதம் காளிங்கராய பூர்வீகம் : நந்தீஸ்வரமங்கலம் விருப்பம் : உயர்கல்வி – மேற்படிப்பு	10.10.96 5' - 2"	M.E. (Stru) .		திரு. வ. ஞானசேகர், **80,** கீழரத வீதி, சிதம்பரம் – **608 001.** Cell : **94432 29120**
B 11/1 செல்வி **K. ரூபசுவாதிகா** உத்திரட்டாதி செஞ்சிலுட பூர்வீகம் : சி. சாத்தமங்கலம் – சிதம்பரம் (Tk)	20.06.95 162 cm	B.E. (ECE)	Continental Automotive, Bangalore Rs. 11 Lakhs/PA	திரு. K.G. குமாரசாமி, C11, Co-op Bank Road, Block 16, Neyveli - 607 801. Cell : **94420 33990**
B 12/1 செல்வி **S. பவதாரணி** மூலம் 3ம் பாதம் குமாரகுட பூர்வீகம் : அகரஆலம்பாடி விருப்பம் : சமபடிப்பு	07.08.95 5' - 3"	M.Tech Bio Medical .	Software Professional G.E. Health Care Bangalore	திரு. R. சுந்தரராஜன், 129F, கதம்பம் தெரு, பெரியசாமி நகர் விரிவாக்கம், வடக்குத்து, நெய்வேலி TS–**607308.** Cell : **94869 73075**
B 13/1 செல்வி **M. தனலட்சுமி** உத்திரம் பருவுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு	07.05.98 154 cm	B.Tech (CS) .	Software Professional EPSILON Bangalore	திரு. K. மணிகண்டன், G1, Ashok Manor, Ruby Builders, 5/2, Kalamegam Street, East Tambaram, Chennai - 600 059. Cell : **94447 11045, 99416 20355**
B 14/1 செல்வி **M. இந்துமதி** கேட்டை 4ம் பாதம் விஸ்வராய பூர்வீகம் : சிதம்பரம் விருப்பம் : சமபடிப்பு, அரசு வேலை / IT சென்னையில் உள்ள வரன்	13.06.95 5' - 3"	B.E., EEE., MBA.,	Software Engineer Rs. 10 Lakhs/PA	திரு. G. முருகேசன், 97, பார்த்தசாரதி தெரு, நன்மங்களம், சென்னை–**600 129.** Cell : **70106 83125 / 86089 00886**
B 15/1 செல்வி **பிரியா** பூரம் பெண்ணாகட பூர்வீகம் : கிடாத்தலைமேடு, மயிலாடுதுறை விருப்பம் : சென்னை / பெங்களூரில் பணியில் உள்ள வரன்	13.04.95 150 cm	B.Tech	Software Module Lead Mind Tree Ltd.,	திரு. வே. இராஜசேகரன், 20 Type 4 Quarters, Block 13, Neyveli - 607 803. Cell : **94862 82512 / 94897 77523** E-mail : rashasekar@gmail.com
B 16/1 செல்வி **மு. சுகந்தி** சுவாதி கானுட பூர்வீகம் : மடப்புரம் – செம்பனார்கோவில்	27.11.97 151 cm	MCA	Accounts Executive Chennai Radha Engineering Works (P) Ltd., Siruseri Rs. 18,000/PM	திரு. ஆ. முத்துக்குமாரசாமி, **4/193,** தெற்குத் தெரு, மடப்புரம், செம்பனார்கோவில் – **609 309.** தரங்கம்பாடி வட்டம் Cell : **98412 49667, 90471 57729**

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/1 செல்வன் **V. நட்ராஜ்** புனர்பூசம் செம்பதரிய பூர்வீகம் : பரதூர், சிதம்பரம் விருப்பம் : பணியில் உள்ள வரன்.	12.02.95 5' - 8"	B.E. (CSE)	L & T Technology Services, Chennai Rs. 11 Lakhs / PA	திரு. S. வாசுதேவன், 8, மீனாட்சி அவென்யு, சாந்தி நகர், சிதம்பரம் – 608 001. Cell : 82206 30973, 9944327563
G 2/1 செல்வன் **R. மணிகண்டன்** உத்திரம் முதனுட வளையமாதேவி விருப்பம் : B.E /B.Tech / MCA/ MS / M.Phil / Ph.D. முடித்த உள்நாடு/ வெளிநாடு வேலையில் உள்ள / இல்லாத வரன்	05.07.84 165 cm	B.Tech M.Sc., Ph.D Atmospherie Science	Reserch Asst. University of Utach (USA) $ 4000 Dollar/PM	திருமதி. T. மணிமேகலை, S1, இராகவேந்திரா அப்பார்மெண்ட்ஸ், சுசிலா அம்மாள் நகர், கனகசபை நகர் விரிவு, சிதம்பரம் – 608 001. Cell : 989412 2436 E-mail : manimegalai53orathur@gmail.com
G 3/1 செல்வன் **இரா. சீதாராமன்** பூரட்டாதி இளமாங்குட இடைக்கட்டு	29.09.93 170 cm	DME, (Tool & Die)	6 Projects (Purchase Executive) Chennai Rs. 30,000/PM	திரு. சோ. இராமகிருஷ்ணன் பிள்ளை, இடைக்கட்டு, உட்கோட்டை (அஞ்சல்), ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் – 612901. Cell : 96298 89261 98298 89262 (W)
G 4/1 செல்வன் **கே. மணிவேல்** கேட்டை முதுனுட பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)	15.02.93 6' - 00"	B.E. (EEE),	வணிகவரி துறை, சேலம்	திரு. T. கேசவன், 5/234-2, புதிய அம்பேத்கர் நகர், ஜாகிர் ரெட்டிபட்டி, சேலம் – 636 302 Cell : 94422 59692
G 5/1 செல்வன் **M. செழியன்** திருவாதிரை காருட பூர்வீகம் : ம.கொத்தங்குடி	27.04.93 5' - 10"	B.Sc., (Computer Science)	Cognizant (CTS)	திரு. G. ராமலிங்கம், 18, V.S.R. Nagar, Chidambaram Cuddalure Dt. Cell : 8667010342, 94424 41233.
G 6/1 செல்வன் **C.R. மகேந்திரன்** பூரட்டாதி 4ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : வளையமாதேவி	27.11.90 176 cm	M.Tech.,	Asst. Professor VRS Engineering College, அரசூர், விழுப்புரம்	திரு. செ. ராஜேந்திரன், 11/7, ஆழ்வார் நகர், நெய்வேலி மெயின் ரோடு, வடலூர் – 607 303. Cell : 94434 42757
G 7/1 செல்வன் **M. வெங்கட்குமார்** ரேவதி மாயலுடையான் பூர்வீகம் : கோடாலிகருப்பூர் விருப்பம் : உயர்கல்வி படிப்பு	01.02.90 180 cm	B.E., CSC	Transport Business Rs. 40,000/PM	திரு. R. மகாலிங்கம், 34, தேவதாஸ் நகர், விபீஷ்ணபுரம், சிதம்பரம் Cell : 95978 00801 77086 58280 (Whatsapp)
G 8/1 செல்வன் **B. அரவிந்ராஜ்** பூரட்டாதி சாத்துகுட திருமணஞ்சேரி விருப்பம் : பட்டதாரி	29.09.93 5' - 8"	B.E. Mechanical	Tamil Mani Automobiles Rs. 25,000/PM	திரு. D. பாலசுப்பிரமணியன், 5/146, கம்பர் நகர், குத்தாலம் – 609 801. Cell : 81481 90659, 95784 24883

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/1 செல்வன் **இரா. அமுதன்** ரேவதி வேளா பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு, (BE/ME/MCA/MBA) வேலைக்கு செல்லும் பெண்.	19.10.94 175 cm	B.E. (Mecha),	S.A.P. Consultant DANFOSS Industries Pvt. Ltd., Chennai (MNC) Rs. 9,00,000/PA	திருமதி. இரா. ராஜேஸ்வரி, E1/40, வள்ளலார் தெரு, பெண்ணாடம், திட்டக்குடி Tk., கடலூர் Dt., Cell : **80126 82125, 94436 38924**
G 10/1 செல்வன் **R. அரவிந்த்** பரணி 2ம் பாதம் பில்லாலுட பூர்வீகம் : மாப்படுகை – மயிலாடுதுறை விருப்பம் : பொருத்தமான வரன்	03.07.94 5' - 6"	M.Tech.,	Net Access India Ltd.,	திரு. R. ரமேஷ், 64, காவேரி சதுக்கம், தந்தை பெரியார் நகர், விழுப்புரம் – **605 602.** Cell : **94427 41245, 94434 35343**
G 11/1 செல்வன் **இரா. மணிபாரதி** மகம் தொழுவுட பூர்வீகம் : பெண்ணாடம்	04.03.96 168 cm	B.Sc.	MRF Ltd., Arakonam	திரு. தி. இராஜாமணி, 540, கண்ணப்பா தெரு, நசரத்பேட்டை, பூந்தமல்லி – **600 123.** Cell : **89399 91174, 98406 87849**
G 12/1 செல்வன் **S. கிஷோர்குமார்** அவிட்டம் குணமுட பூர்வீகம் : கூகூர் லால்குடி	27.06.94 160 cm	B.E. (E&I)	ELMACK Engineering Chennai Rs. 6Lakhs/PA	திரு. S. சுரேஷ்குமார், 137, அக்ரஹாரம் தெரு, கூகூர் (PO), லால்குடி (Tk) திருச்சி (DT) - **621 703** Cell : **97152 71355**
G 13/1 செல்வன் **பா. ஆனந்தன்** உத்திரட்டாதி 4ம் பாதம் பஞ்சதரிய பூர்வீகம் : கௌுத்தூர் விருப்பம் : பட்டம் பயின்ற பெண்	17.08.92 5' - 11"	B.E. (Mech)	Business - BSNL இணைய சேவை Net Business Rs. 12Lakhs/PA	திரு. அ. பாலசுப்ரமணியன், 23, கரையான் தோப்பு, திருவிழுந்தூர், மயிலாடுதுறை Dt. - **609 001.** Cell : **94873 32726, 944545 3251**
G 14/1 செல்வன் **M. அருண்குமார்** கார்த்திகை 2ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : 19 புதுக்குடி – எரவாஞ்சேரி வழி விருப்பம் : நல்ல குணமுள்ள படித்த வரன் சென்னையில் இருந்தால் நலம்.	29.01.96 165 cm	M.Sc., BCA	GUPSHUP Chennai	திரு. S. மதியழகன், 3/781, தெற்கு வீதி, அம்மன் கோவில் தெரு, கெருகம்பாக்கம், சென்னை – **600 128.** Cell : **94446 31446, 90872 95484**
G 15/1 செல்வன் **P. விக்னேஷ்** அஸ்வினி காணிக்கைதிரையார்	25.10.88 5' - 7"	BCA - MCA	Cashier in Garments Rs. 2,50,000/PA	திரு. V.S. பிரித்திவிராஜ், D.No. 39C, Ground Floor, இராஜேஸ்வரி அபார்மெண்ட்ஸ், KAS நகர், திண்டல், ஈரோடு – **638 012.** Cell : **99650 38229, 88385 86744**
G 16/1 செல்வன் **R. ஹரிஷ்குமார்** புனர்பூசம் 4ம் பாதம் முனகூரிய பூர்வீகம் : கண்ணங்குடி – சிதம்பரம்	17.10.95 180 cm	B.E., C.S.C	Front End Developer one Dot Chennai Rs. 3.5 Lakhs/PA	திரு. V. இராமகிருஷ்ணன், G3, சாய்குமரன் அபார்மெண்ட்ஸ், 74, 2வது மெயின் ரோடு, குமரன் நகர், விருகம்பாக்கம், சென்னை – **600 092.** Cell : **967712 1315, 94446 10246**

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 17/1 செல்வன் **A. சாரதிராஜன்** பூசம் பிராங்குட பூர்வீகம் : கொத்தவாசல் விருப்பம் : 1996க்கு பின் பிறந்த வரன்	23.11.94 180 cm Rs. 9.5 Lakhs/PA	B.E., (EEE)	William Lea India, Private Ltd. - Kochi (Head Office Chennai) Rs. 7 Lakhs/PA	திரு. R. அசோகன், 119, கம்பர் சாலை, சிவஜோதி நகர், சிதம்பரம் – 608 001. Cell : 94429 82700, 89032 82700
G 18/1 செல்வன் **குகன்** பூராடம் செஞ்சலுட பூர்வீகம் : வேளக்குடி – சிதம்பரம்	24.09.93	B.E.(Mech)	Mobis Technologies Pvt. Ltd. Kelambakkam, Chennai Rs. 30,000/PM	திரு. S. இராமலிங்கம் பிள்ளை, 1/59, வேளக்குடி, வல்லம்படுகை (PO), சிதம்பரம் (Tk) – 608 401. Cell : 98653 02340, 96888 86835
G 19/1 செல்வன் **ப. ஸ்ரீராம்** ஆயில்யம் சாத்தனுட பூர்வீகம் : வயலூர் – குன்னம் பெரம்பலூர் மாவட்டம் விருப்பம் : தகுந்த வரன்	28.10.94 165 cm	B.E.(CSC)	IT Analyst TCS, Chennai Rs. 40,000/PM	திரு. P. இராமச்சந்திரன், 5-A/84C, ரோஸ் நகர், பெரம்பலூர் – 621 212. Cell : 98650 54625, 97505 29615
G 20/1 செல்வன் **A. தினேஷ்** சதயம் 2ம் பாதம் வில்வராய பூர்வீகம் : கழுதூர் (திட்டகுடி வட்டம்) விருப்பம் : சமபடிப்பு மற்றும் வேலையில் உள்ள வரன்.	15.11.91	B.E., Instrumentation	Yokogawa India Ltd., Bangalore Rs. 8 Lakhs/PA Project @ Mumbai	திரு. S. அனந்தகிருஷ்ணன், கழுதூர் PO, திட்டக்குடி TK, கடலூர் Dt. – 604 304. Cell : 76395 81027 / 98400 28815

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRA, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

CS TEXTILE PROCESS

Office : NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. TATA ZUDIO (INDIA)



"QUALITY IS OUR LIFE"

சதாபிஷேக சுபமுகூர்த்த விழா



காட்டுமன்னார்கோவில் வட்டம் கீழ்அதங்குடி தெய்வத்திரு கோபாலகிருஷ்ணன் பிள்ளை செந்தாமரை ஆகியோரின் மகனும் வெச்சியூர் தெய்வத்திரு சவுரிராஜன் பிள்ளை ஆண்டாள் ஆகியோரின் மகளும் எங்களின் அன்பு பெற்றோரும் ஆகிய

கோ. இலட்சுமிநாராயணன் - சியாமளா தேவி இவர்களின் சதாபிஷேக சுபமுகூர்த்த விழா 18.12.2022 ஞாயிறு அன்று சிதம்பரம் ஓம்சிவசக்தி திருமண மாளிகையில் இறையருள் துணையுடனும் பெரியோர்களின் நல்லாசியுடனும் சிறப்பாக நடைபெற்றது. உங்கள் இருவரின் பாதம் பணிந்து வணங்குகிறோம் உலகிற்கு வள்ளுவர் குறளை தந்தார் நீங்களோ அன்பு, அறிவு, ஒழுக்கம், பண்பு, பாசம், பற்று இவை அனைத்தையும் ஒருங்கே தந்துள்ளீர்கள் உங்கள் இருவரின் சதாபிஷேகம் கண்ட நாங்கள் தங்களின் கனகாபிஷேகம் காண விழைகிறோம் விழாவிற்கு வருகை தந்து வாழ்த்தி வணங்கிய அன்பு உறவுகளுக்கும் அருமை நண்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

என்றும் அன்புடன்

V. லட்சுமிகாந்தன்
L. குழல்வாய்மொழி
L. சாதனா முத்துக்குமரன்
S. வெற்றிவேல்
L. மஞ்சுளம்
V. சூரியப்பிரகாஷ்
L. மணிவண்ணன்
M. ராஜேஸ்வரி
M. கிருஷ்ணா
M. சிவரஞ்ஜனி

மணிவிழா தம்பதியர் வாழ்க



சிதம்பரம் வட்டம் வில்வராய K. ஆடூர் வான்நின்று வாழ்த்தும் S. சுப்பராய பிள்ளை, S.. பர்வதம்மாள் அவர்களின் மூத்த குமாரன் **S. அம்பலவாணன்** மயிலாடுதுறை பூவனுட வரகடை வானின்று வாழ்த்தும், K. ராமலிங்கம் பிள்ளை R. கோகிலம் அம்மாள் அவர்களின் இளையபுதல்வி **A. சாந்தியும்** எனது பெற்றோரும் ஆகிய இவர்களின் மணி விழா 11.12.2022 ஞாயிறு அன்று திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயிலில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மணி விழாவிற்கு வருகைதந்து வாழ்த்தியும், வாழ்த்து பெற்றும் உதவிகள் நல்கிய நல் உள்ளங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

N. விக்னேஷ் (மருமகன்)

A. சிவஅபிராமி (மகள்)

சஷ்டி குருபரன் விக்னேஷ் (பேரன்)

சிறிய தாயார் **R. மதனவள்ளி அம்மாள்**

சகோதரர்கள் **B. ராதாகிருஷ்ணன், R. சிவகாமசுந்தரி**

S. நடராஜன், N. ஆண்டாள், R. சுந்தரமூர்த்தி, S. ஜெயலெட்சுமி, S. அபிஸ்ரீ, R. செந்தில்நாதன், S. சிவகாமசுந்தரி, S. ரமாதேவி, S. பாலசந்திரன், R. சாமிநாதன்

சகோதரிகள் **S. புகழேந்தி, கீதா, Dr. M. பாலகுமரன், Dr. P. சுவாதிகா,**

K. கண்ணன், K. சூரியகுமாரி, K. விக்னேஷ்வரன், K. பவித்ரா

மைத்துனர்கள் **R. ரத்தினசபாபதி, N. வசந்தி, R. அசோக், கார்த்திக், R. தீப்தி, K. ரேயா குட்டீஸ், R. கோவிந்தராஜன், G. சுடர், G. அரவிந்தன், G. நடராஜன்**

மணமகன் தேவை



பெயர் செல்வி **மோ. அபிநயா**

படிப்பு B.E. (EEE)

வேலை Production Editor
Sinjore Technologies,
Thanjavur.

பிறந்த தேதி 21.09.1995

உயரம் 5' - 4"

நட்சத்திரம் ஆயில்யம் 3–ம் பாதம்

கோத்திரம் சணமுடை

பூர்வீகம் உடையார் பாளையம்

தகப்பனார் **கோ. மோகன் பிள்ளை**

தாயார் **மோ. மலர்கொடி**
(திருநாரையூர்)

முகவரி A/2, சீத்தா நகர்,
சிவாஜி நகர் வழி,
தஞ்சாவூர் – **613 001.**
Cell : 94424 75666, 94424 75777

விருப்பம் சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.



பெயர் செல்வி **B. திவ்யா**

படிப்பு B.E. (CS)

வேலை Software Engineer,
Accenture, Chennai

பிறந்த தேதி 14.12.1993

நட்சத்திரம் மூலம் 2ம் பாதம்

கோத்திரம் தென்னவராய

பூர்வீகம் சாத்துக்கூடல்

தகப்பனார் **S. பாலகிருஷ்ணன் பிள்ளை**
விவசாயம்

தாயார் **B. சுசிலா,** இல்லத்தரசி
சாத்துக்கூடல்

முகவரி வடக்கு தெரு,
மேல்பாதி,
சாத்துக்கூடல் – **606 110.**
Cell : 99529 20903
81487 67273 (Whatsapp)

விருப்பம் பொருத்தமான வரன்



பெயர் செல்வி **R. ANU KRUBA**

படிப்பு B.Com., M.B.A. (Finance)

வேலை TCS, Chennai

பிறந்த தேதி 10.05.1992

உயரம் 169 cm

நட்சத்திரம் Magam

கோத்திரம் Marunguda

பூர்வீகம் Akkur

தகப்பனார் **A. Rajaram,** M.Sc.,

தாயார் **R. Kalaichelvi,** B.A.,
Mayiladuthurai

முகவரி 7/4, West College Road,
Arumbakkam, Chennai - 600 106.
Cell : 97908 80266, 93809 97467



பெயர் செல்வி **K. யுவஸ்ரீ**

படிப்பு B.Ed., M.Sc. (CS)

வேலை Teacher in
Private School

பிறந்த தேதி 27.09.1998

நட்சத்திரம் கேட்டை (பாகம் – 1)

கோத்திரம் பாலுட

தகப்பனார் **G. கீர்த்திவாசன்**

பூர்வீகம் தீபாமங்களம், நன்னிலம் தாலுக்கா

தாயார் **K. சுமதி**
வன்னிக்குடி மொழையூர், பந்தநல்லூர்

முகவரி 43, கோசிமணி நகர் மெயின் ரோடு,
மேல அம்மாசத்திரம் – **612 103.**
கும்பகோணம்.
Cell : 94896 56270

விருப்பம் படித்த, நல்ல வேலையில் உள்ள மணமகன்.

மணமகன்/மணமகள் தேவை



பெயர் செல்வி **C. சந்தனா**
படிப்பு B.E., M.B.A. (Loyola)
வேலை T.C.S. Chennai
Rs. 8 Lakhs/PA
பிறந்த தேதி 04.10.1995
நட்சத்திரம் அவிட்டம்
கோத்திரம் தனபாலுட
பூர்வீகம் ஜெயங்கொண்டம்
தகப்பனார் **T. சந்திரசேகரன்**
Business
தாயார் **C. விமலா,** இல்லத்தரசி
கீழப்பெரும்பள்ளம்
முகவரி Pallavi Enterprises,
D.No. 98, Bazaar Street,
Jayankondam - 621 802,
Ariyalur Dist.
Cell : 92444 09112, 81110 08601
E-mail : chandru.pallavi@gmail.com



பெயர் செல்வன் **V. சிவானந்தன்**
படிப்பு M.E. Civil (Bits Pilani)
வேலை Structural Engineer,
MNC, Hyderabad
பிறந்த தேதி 07.01.1995
உயரம் 178 cm
நட்சத்திரம் உத்திரட்டாதி
கோத்திரம் வில்வராய
பூர்வீகம் வெள்ளையனிருப்பு, பூம்புகார்
தகப்பனார் **R. வெங்கடேசன்,** Civil Engineer
தாயார் **V. மாலதி,** மாப்படுகை
முகவரி வெள்ளையனிருப்பு தெரு,
பூம்புகார் – **609 105.**
மயிலாடுதுறை மாவட்டம்
Cell : 88388 25539, 88864 67000



பெயர் செல்வி **கு. அபர்ணா தேவி**
படிப்பு B.E. (ECE)
வேலை MP & L Analyst,
Ford Global Technology & Business Center
Corporate Office, Sholinganallur
Rs. 8.10 Lakhs/PA
பிறந்த தேதி 26.01.1997
உயரம் 5' - 3"
நட்சத்திரம் மகம்
கோத்திரம் தென்னவராய
பூர்வீகம் வேள்விமங்கலம்
தகப்பனார் **சு. குமார்**
Proprietor - VSA Diagnostics
தாயார் **மு. புவனேஸ்வரி**
இடைநிலை ஆசிரியை – அரசு உதவி பெறும் பள்ளி
முகவரி A306, Casa Grand Miro, Vandalur - Walajabad Road,
Urapakkam Link Road, Mannivakkam,
Chennai - 600 048.
Cell : 94443 54949, 87788 17011
விருப்பம் நற்பண்புகளையுடைய பொருத்தமான வரன்.

மணமகன் தேவை

பெயர்	செல்வி **R. ஸ்ரீ கௌரி**
படிப்பு	B.E.,
வேலை	ASTRA Zeneca
பிறந்த தேதி	27.04.1994
நட்சத்திரம்	விசாகம்
கோத்திரம்	பொண்ணாமுடை
பூர்வீகம்	கருவாழக்கரை
தகப்பனார்	**P. ரவி** (சுய தொழில்)
தாயார்	**R. உஷாராணி** (House Wife)
	மயிலாடுதுறை
முகவரி	நெ. 27, மயூரநாதர் தெற்கு மடவிளாகம்,
	மயிலாடுதுறை – 609 001.
,	Cell : 99401 75275, 94870 77107



பெயர்	Selvi **K. VASUNDRA**
படிப்பு	M.Sc. (Media Sciences)
வேலை	Team Lead, Accenture
பிறந்த தேதி	01.12.1991
உயரம்	160 cm
நட்சத்திரம்	ஹஸ்தம்
கோத்திரம்	வங்காரமுட
பூர்வீகம்	மாதானம், சீர்காழி தாலுகா
தகப்பனார்	**S. கார்த்திகேயன்,** B.E., M.Tech.,
	Retired G.M. TVS Logistics
தாயார்	**K. நிர்மலா**
முகவரி	Block 1F3, Happy Windows,
	49, AR Nagar, Kattupakkam,
	Chennai - 600 058.
	Cell : 99403 76098 / 98407 04908
விருப்பம்	நல்ல பண்புள்ள வரன் தேவை
குறிப்பு	விவாகரத்தானவர்



மணமகன் தேவை

பெயர்	செல்வி **சௌமியா அ தி**
படிப்பு	B.E. (Civil) PSG College of Technology MBA - Finance (Pursuing) Kumaraguru College of Technology Business School
பிறந்த தேதி	06.09.99
நட்சத்திரம்	புனர்பூசம்
கோத்திரம்	வங்காரமுட
பூர்வீகம்	சிதம்பரம்
தகப்பனார்	**ஆ. திருஞான சம்பந்தம்,** M.Tech (Power Systems)
தாயார்	**அகிலா. அ,** B.Tech (Civil), MBA., ஜெயங்கொண்டம்
முகவரி	7/46, வடக்கு ரத வீதி, சிதம்பரம் Cell : 94434 40929, 94866 38646
விருப்பம்	Foreign Country / India



பெயர்	செல்வி **R. சிந்துஜா**
படிப்பு	M.Sc., B.Ed., Physics
பிறந்த தேதி	03.11.98
உயரம்	160 cm
நட்சத்திரம்	அசுபதி
கோத்திரம்	வேளாணுட
பூர்வீகம்	கோழியூர்
தகப்பனார்	**P. ராஜா**
தாயார்	**B. தெய்வானை** (BT Asst.)
முகவரி	14/2, பெருமாள் கோவில் தெரு, கோழியூர், திட்டக்குடி (PO) கடலூர் (DT) – **606 106.** Cell : 90476 61099 (W) 94428 66655
விருப்பம்	பணியில் உள்ள வரன் (சுத்த ஜாதகம்)



மணமகள் தேவை



பெயர்	செல்வன் **R. பாலாஜி**
படிப்பு	B.E., MBA
வேலை	BOT VFX (India) Private Limited Teynampet, Chennai Rs. 55,000/PM
பிறந்த தேதி	18.06.1990
உயரம்	167cm
நட்சத்திரம்	அசுபதி
கோத்திரம்	நன்உடை
பூர்வீகம்	கீழையூர்
தகப்பனார்	**A. ரவிச்சந்திரன்,** (காவல் துறை ஓய்வு)
தாயார்	**R. சாந்தி,** (திருப்பங்கூர்)
முகவரி	எண். 1, ஸ்ரீ லெட்சுமி நகர், செம்பனார் கோவில், மயிலாடுதுறை – **609 309.**
,	Cell : 94981 65037, 94866 65327
விருப்பம்	பட்டயப்படிப்பு



பெயர்	செல்வன் **VENKATESAN .M**
படிப்பு	B.E. (ECE), Diploma in EEE
வேலை	Design Engineer, M-al Bhargesh, Dammam, Saudi Arabia Rs. 20 Lakhs / PA
பிறந்த தேதி	13.07.1990
உயரம்	168 cm
நட்சத்திரம்	பூரட்டாதி
கோத்திரம்	குளத்துட
பூர்வீகம்	K. ஆடுர்
தகப்பனார்	**Murugesan M,** Supervisor
தாயார்	**Malathi,** Extension Officer Rtd.
முகவரி	3, ARB Nagar, Chidambaram. Cell : 96292 48406 E-mail : sandysomass@gmail.com













வாழ்க மணமக்கள்



R.V. மனோஜ்குமார், M.E.,
Tech. Lead, HCL, Chennai
மணநாள்
09.09.2022, வெள்ளிக்கிழமை
அபிராமி மஹால், மயிலாடுதுறை

S. அனுஷா, B.E.,
Sys. Engineer, T.C.S. Chennai
வரவேற்பு
11.09.2022, ஞாயிற்றுக்கிழமை
கடம்பூர் ஸ்ரீ மாரியம்மன் மஹால்,
மடிப்பாக்கம், சென்னை

எங்கள் இல்லத் திருமணத்தை தங்கள் வீட்டுத் திருமணமாக எண்ணி சீரும் சிறப்புமாக நடத்திட்ட கார்குல சொந்தங்களுக்கும், திருமணம் மற்றும் வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்திய அனைத்து நல் இதயங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.



K. சுந்தர மகாலிங்கம், B.E.,
Dy. Chief Engineer, NLC India Ltd.
S. ஆர்த்தி, M.E.,
மாஸ்டர் **அகிலன்** நெய்வேலி





A.R. வெங்கடாஜலம்
El-Furge Ltd., Chennai (Rtd.)
V. வானதி
(வித்யா மந்திர், மயிலாப்பூர், மடிப்பாக்கம், சென்னை)
94445 28966

R. சடகோபன், (SBI Rtd.) - **S. விஜயபாரதி**
மயிலாடுதுறை 94435 78563



SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

கண்ணீர் அஞ்சலி



பண்புச் செம்மல் **P.V. சண்முகம்**, B.E., அவர்கள்

சென்னை **கேஜிஎஸ் ரெஸிடென்ஸி குழுமத்தின் மேலாண்மை இயக்குனர்** திரு. **P.V. சண்முகம்,** B.E., அவர்கள் **11.11.2022** அன்று இயற்கை எய்தினார்கள். அன்னாரது மறைவுக்கு சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றன.

கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
05–06–1948

மறைவு :
26–11–2022

திரு. தி. செல்வநாயகம் பிள்ளை

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் கன்னியாகுடி கிராமம் தெய்வத்திருவாளர்கள் சு. திருநாவுக்கரசு பிள்ளை – வைரத்தாச்சி இவர்களின் புதல்வரும், திருமதி. செ. சுலோசனா அவர்கள் கணவரும், திரு. செ. ராஜமுருகன் அவர்களின் தந்தையுமாகிய... திரு. **தி. செல்வநாயகம் பிள்ளை** (ஆசிரியர் ஓய்வு) அவர்கள் 26–11–2022 சனிக்கிழமை மாலை இறைவன் திருவருளை அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் தங்கள் நினைவில் வாழும்.

மனைவி. **செ. சுலோசனா.**

மருமகன் : **S. முத்துகுமார்**

மகன் : **S. ராஜமுருகன்**

மகள் : **சுஜித்ரா முத்துகுமார்**

மருமகள் : **மேகலா ராஜமுருகன்**

பேத்திகள் :

செல்வி. **மதுமிதா. M**

செல்வி. **சம்யுக்தா. R**

மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மறைவு
19.11.1931

மறைவு
31.01.2020

நாகை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, மணிக்கிராமம், மேலத்தெரு,
தெய்வத்திரு.த.இராமநாதன் பிள்ளை அவர்களின் குமாரர், திருமதி.வி.சாரதா அவர்களின் கணவர்,
எங்களது தகப்பனார்

திரு.இராம.விஸ்வநாதன் பிள்ளை

(தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர்- அருள்மிகு திருமேனி அழகர் கோவில் நிர்வாக அறங்காவலர்)

தங்கள் பிரிவால் துயரில் ஆழ்ந்த எங்களை
தெய்வமாக வானின்று வாழ்த்தி நல்வழி காட்டிட வேண்டுகிறோம்.

தெய்வம் உங்கள் நினைவில் வாழும்.

மகள்கள் :

பா. மகாலெட்சுமி - பாஸ்கரன், மயிலாடுதுறை.

பா. செந்தமிழ்செல்வி-பாலசுப்ரமணியன்,
தஞ்சாவூர்.

மனைவி : **V. சாரதா**

மகன் : **Rtn.Er. சுந்தரமூர்த்தி**
ரேவதி சுந்தரமூர்த்தி
மயிலாடுதுறை.

பேரன் & பேத்திகள் :

பா.வசீகரன் - வித்யா, சென்னை.
பா.நர்மதா - பிரபுஆனந்த், காரைக்கால்.
சு.சுரேந்தர் - ஆர்த்தி சென்னை.
கோ.சுவேதா-கோவிந்த், சிங்கப்பூர்.
பா.கௌரிசங்கர் - தேவிகா, சென்னை.

கொள்ளுபேரன்- பேத்திகள் :

வ.கீர்த்தி, பி.பிரித்வி, சு.ஆதிரை, கௌ.ரேவந்த் இனியன், சு.மித்ரன்

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
12.12.1946

மறைவு
15.01.2022

திருமதி. சோ. சந்திரவதனம்

ஓராண்டு நகர்ந்தாலும்
எம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
அன்பினால், பண்பினால், நட்பினால்
எங்கள் அனைவரது
உள்ளங்களிலும் குடியிருக்கும்
எம் அன்னையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்
அன்னையின் ஆத்மா
இறைபாதம் சரணடைய
பிராத்திப்போமாக
ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி....

முதலாம் ஆண்டு திதி 04.01.2023 புதன்கிழமை அன்று திருவிழந்தூர், செட்டித்தெருவில் அமைந்துள்ள எங்களது இல்லத்தில் சமய நிகழ்வுடன் நடைப்பெற்றது. உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்துக் கொண்டனர்.

இங்ஙனம்,
கனடா A.S.சார் என்கின்ற
திரு. ஆ.சோமசுந்தரம் பிள்ளை
(பூர்வீகம்: மணல்மேடு) செல்: 9786119903

மகன்கள், மருமகள்கள், பேரன்கள் மற்றும் பேத்தி

சோ.முத்துகிருஷ்ணன்,
மு. அகிலா
மு.அர்ச்சிதா
மு.சித்தேஷ்
ஹாங்காங்

சோ.சரவணன்,
ச. செந்தமிழ்ச்செல்வி
சோ.ச.செந்தூரன்
திருவிழந்தூர்.

கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
8.3.1944

மறைவு :
25.12.2022

திருமதி **கமலா முருகேசன்**

சிதம்பரம் வட்டம் கீ. ஆடூர் திரு. M. முருகேசன் பிள்ளை அவர்களின் துணைவியாரும், எங்களது தாயாருமான திருமதி **கமலா முருகேசன்** அவர்கள் 25.12.2022 புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மகன் **M. தியாகராஜன்**

மருமகள் **சித்ரா தியாகராஜன்**

பெயரன் **T. அஷ்வின்**

மகன் **M. முத்துகுமரன்**

மருமகள் **கௌரி முத்துகுமரன்**

பெயரன், பெயர்த்தி **M. சித்தார்த், M. ஷ்ருதி**

கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :
07.03.1943

மறைவு :
17.12.2022

தெய்வத்திரு **து. சிவபாலன் பிள்ளை** (தாசில்தார் ஓய்வு).

சிதம்பரம் நகரம் 42, திருவள்ளுவர் தெரு திருமதி. சி. லலிதா அவர்களின் கணவரும் மோகன், நடராஜன், சிவக்குமார் இவர்களின் தந்தையாருமாகிய தெய்வத்திரு. **து. சிவபாலன்** சுபகிருது வருடம் மார்கழி மாதம் 2ம் தேதி (17.12.2022) சனிக்கிழமை சிவலோக பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

சி. மோகன்
கு. கவிதா
மோ. ஹரிசங்கரன்
மோ. அகிலேஷ்

சி. நடராஜன்
ல. சாவித்திரி
ந. பாவனா

சி. சிவக்குமார்
ச. சுகன்யா
சி. சாதனா

உண்மை பேசுவதும் புண்ணியமே!

– வழிப்போக்கன்

நீயும் பொய், நானும் பொய், எல்லாம் பொய் என்று மாயா வாதம் பாடுகிறார் ஒருவர். பொய் சொல்லல் ஆகாது பாப்பா ஒரு குழந்தையை வையாதே பாப்பா என்று பாடுகிறார் இன்னொருவர், பொய் சொன்ன வாயிக்குப் போசனம் (சாப்பாடு) கிடைக்காது என்பது வழக்குமொழி. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு வேண்டாம் என்கிறார் வள்ளலார்.

பொய்யே பேசாமல் புகழடைந்தவன் அரிச்சந்திரன் பொய் பேசுதல் என்பது குற்றம். அறமற்ற செயல். பாவம்.

அச்சத்தாலும், ஆசையாலும், தன்னலத்தாலும் தப்பிக்க வேண்டியும் மனம் திரிந்து பொய் பேசுவோர் ஏராளமானோர். காதல் பொய் டன் கணக்கில்.

அரசியல்வாதிகளின் பொய்க்கு அளவே இல்லை. அரசியல் தலைவர்களின் பொய்வாக்குறுதியைப் பற்றிப் பேசினாலே தலை சுற்றும்.

நீதி மன்றங்களிலும், காவல் நிலையங்களிலும் பொய் வழக்கும், பொய் சாட்சியும், மனச்சாட்சியின்றி மலிந்துவிட்டன.

அன்றைய ஊர்ப்பஞ்சாயத்துகளில் விசாரணையின் பொழுது குற்றம் சாட்டப்பட்டவரை "நீ சொல்வது உண்மைதான் என்று சூடமேற்றி அனை, அல்லது உன் மனைவி மக்கள் மீது சத்தியம் செய், அல்லது உன் துணியைப் போட்டுத் தாண்டு, அல்லது உன் அப்பன் ஆத்தா மீது ஆணையிட்டுச் சொல்" என்றால் குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் குற்றவாளியாயின் இவற்றிற்கெல்லாம் ஒப்பமாட்டார். உடனே பரிதாபமாக பஞ்சாயத்தாரிடம் அதான் நீங்களே குற்றவாளி என்று முடிவு செய்து விட்டீர்களே! புறவு என்ன. சத்தியம் எல்லாம். ஒன்றும் வேண்டாம் சாமி. நீங்க கொடுக்கிற அபராதம் தண்டனையைக் கொடுத்து விடுங்க" என்று பேசிவிடுவார்.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. வீட்டிலேயே பெற்றோர் (கணவன்–மனைவி) ஒருவருக்கொருவர் பொய் பேசுவதும், இதனைக் கண்ணுற்ற குழந்தைகள் தானும் பொய் பேசி பழகுவதும், பள்ளி, கல்லூரி, பணிக்களம் என பொய் பேசுதல் விரிவடைவதும் நடைமுறையாக உள்ளது.

அன்றை புலவர் ஒருவர் பொய் உரைக்கும் இடமும் பொய் உரைக்கக்கூடாத இடமும் பற்றிப் பாடி வைத்துள்ளார்.

"பொய்யருக்குப் பொய்யுரைத்தல் வெற்றியாம்;
அவருக்குப் பொய்யா காத
மெய்யருக்குப் பொய்யுரைத்தல் தேய்பிறை போல்
தவம் குறையும் மிட உண்டாகும்;
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
வறுமைபிணி தொலையா; என்றும்
உய்யவருள் தேசிகற்குப் பொய்யுரைத்தால்
நரகமது உண்மை தானே"

– (அந்தகக் கவி வீரராகவர்)

பொய்யரிடம் பொய் சொன்னால் வெற்றி உண்டாகும். பொய்யை விரும்பாதவரிடம் பொய் சொன்னால் தேய்பிறை போல் புண்ணியப் பலன் தேய்ந்து போகும், மேலும் வறுமையும் உண்டாகும். தூய பெற்றோரிடம் பொய் சொன்னால் வறுமையும் நோயும் அகலாது. நல்ல வழி காட்டும் ஆசானிடம் பொய் சொன்னால் நரகம்தான் கிட்டும் என்பது பாடலின் பொருளாகும்.

இந்த தண்டனைகள்யாவும் உண்மையோ பொய்யோ ஒன்று மட்டும் உண்மை. உயிர் போகும் காலை அல்லது செயலற்ற பொழுது மனச்சான்று தரும் தண்டனை தாங்க முடியாதது என்று தொடர்புடைய பலர் நம்மிடம் இறுதிக்காலத்தில் புலம்பியதை நம்மால் இன்றும் மறக்க முடியவில்லை.

இதுபற்றி பொய்யா மொழிப்புலவர் கூறுவதைக் கேட்போம்.

வாய்மை எனப்படுவது யாதெனில் தீமையிலாத
சொல்லே.
பொது நன்மை, பிறநன்மைக்காகப் பொய் கூறலாம்
நெஞ்சறிய பொய் சொன்னால் பின்னால் அது
நெஞ்சைச் சுட்டுவிடும்
பொய் சொல்லாதவர், பெரியோர்
உள்ளத்தில் நிலைத்திருப்பர்

பொய் பேசாதவன் தவம் தானம் செய்வோரைவிடச் சிறந்தவன். பொய் பேசாதவருக்குப் புகழ் உண்டு. எச்சிரமமும் இன்றி அனைத்தும் கிட்டும் வாய்மை அறம் செய்வோர் வேறு அறம் செய்ய வேண்டாம். உடல் நீரால் தூய்மையடையும், உள்ளம் உண்மையால் தூய்மையடையும்.

உண்மை அக இருளை அகற்றும் விளக்காகும்
அறங்களிலே சிறந்த அறம் பொய் பேசாமையே.

பர்மாவில், உயிர் வாழ வேண்டி யான் பொய் கூறவல்லேன் என்று தான் பார்த்த வேலையைத் துறந்து, தமிழகம் வந்து பயின்று பல்கலைக் கழகத் துணைவேந்தரானவர் காலம் சென்ற வ.சுப. மாணிக்கம் அவர்கள். பொய் பேசுதல் என்பது சிலருக்கு வியாதி. அதில் அதிகச் சுகம் காணும் அவர்கள் தம்மை மிகவும் தரங்குறைத்துப் பேசுகின்றார்களே என்று சிறிதும் கவலைப்படமாட்டார்கள்.

உண்மை உயர்த்தும், உண்மை வெல்லும், உண்மை புண்ணியம், உண்மை வீடு பேற்றினை நல்கும் என்று கூறி தம் சொற்பொழிவை முடித்தார்கள் சிவத்திரு சத்யோஜாத சிவம் தங்கசிவப்பிரகாச சுவாமிகள்.

உயிர்களுக்கு சோதனை வேண்டுமா! வேண்டாமா!!

தி. கபீர்தாஸ், சிதம்பரம். செல் : 9445473386

எங்கும் நிறைந்த பரம்பொருளான இறைவனை காண முடிவதில்லையே என்ற ஏக்கம் அனைவர் உள்ளத்திலும் எழலாம். சூரியன் எங்கும் ஒரே மாதிரியான வெளிச்சத்தை வழங்குகிறான். பார்வை உள்ளவன் அதனை கண்டு மகிழ்கிறான். குருடனோ அதனை பார்த்து ரசிக்க முடிவதில்லையே என ஏங்குகிறான். அதுபோல ஆணவத்தால் கட்டுண்ட ஞானகுருடர்களால் இறைவனைக் காண இயலாது. இறைவன் அன்புக்கு எளியவன். அவன் குருடர்களால் இறைவனைக் காண இயலாது. இறைவன் அன்புக்கு எளியவன். அவன் அருளாலே அவன்தாள் வணங்குபவர்களுக்கு அவன் காட்சித் தருவான் என்பது ஆன்றோர் வாக்கு.

இந்த இருவரும் இறைவனின் சோதனைக்கு ஆட்பட வேண்டும். இந்த சோதனை இன்பத் துன்பங்களுக்கு காரணமாக அமையும். உயிர்கள் எந்த அளவுக்கு ஆணவப் பிடியிலிருந்து விடுபட்டு அறிவு விளக்கம் பெற்றுள்ளது. சிவலோகத்தில் நுழைந்து வாழ்வதற்கும், அவனருகில் பயில்வதற்கும், தோழமை பெறுவதற்கும், உயிர்கள் எந்த அளவுக்கு தகுதி பெற்றுள்ளது என்பதை உணர்த்தவே பெருமான் உயிர்களிடத்து சோதனைகளை மேற்கொள்கிறான். இந்த சோதனைகள் மூலம் உயிர்களுக்கு மெய்ஞானத்தை ஊட்டுவது அவனின் நோக்கம். இதனை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சம் என்பர் சித்தாந்திகள்.

உயிர்கள் மும்மலங்களால் பிணிக்கப்பட்டு பிறவி என்னும் தீரா நோயினால் துன்பப்படுகிறது. ஆணவ இருள் சிறிது சிறிதாக நீங்குவதற்கும், வினைகள் நீங்குவதற்கும், உடம்பு, பொன், பொருள், மாடு, மனை சுற்றம் இவற்றின் நிலையற்ற தன்மையை உயிர்களுக்கு உணர்த்தவும், அவற்றின்பால் உள்ள பற்றினை நீக்குவதற்கும் பெருமான் உயிர்களை அவ்வப்போது சோதனைகளுக்கு உள்ளாக்குகிறான்.

உடம்பில் உயிர்மட்டும் பயணம் செய்வதில்லை. அத்துடன் ஆணவம் என்ற அரக்கனும், கன்மம் என்ற நச்சுப் பொருளும், மாயை என்ற மயக்கப் பொருளும் உயிர்களிடத்து கலந்து அதை நிலைகுலையச் செய்கிறது. அவைகள் எந்த அளவுக்கு ஆன்மாக்களைப் பற்றி ஊறு செய்கின்றது என்பதை அறிய இறைவன் சோதிக்கிறான்.

மாயா சத்தியிலிருந்து உயிர்களுக்கு ஏற்ற உடம்பு, உணர்கருவிகள், உலகம், நுகர்ச்சி முதலியவற்றை இறைவன் உயிர்களுக்கு வழங்குகிறான். அதற்கு உயிர்கள் நன்றி பாராட்டுகிறதா என அறிய சோதிக்கிறான்.

இவற்றைக் கொடுத்த அவன் பொருட்டு வழிபாடுகள், திருப்பணிகள் அடியார்களுக்கு தொண்டு இது போன்றவற்றை எல்லாம் உயிர்கள் செய்கிறதா என்று சோதித்து உயிர்கள் மெய்யுணர்வு பெறுமாறு அவைகளைத் தூண்டுகிறது பரம்பொருள்.

ஆடைகளை துவைத்து தூய்மைப்படுத்துவது போல, ஆன்மாவின் மனதை தூய்மைபடுத்தி, ஒளியினையும் ஊட்டுகிறான் இறைவன். இதைத்தான் சோதனை என்று கூறப்படுகிறது. மும்மலக் கூட்டால் முடக்குண்ட ஆன்மாக்களை அறக்கருணையாலும், மறக்கருணையாலும் ஆட்கொள்வதற்காகவே பெருமான் பலபல சோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

நல்லவர்களுக்கும் ஏன் சோதனை வருகிறது என எல்லோர் உள்ளத்திலும் ஓர் வினா உண்டு. இறைவன் நடுநிலையானவன். பாரபட்சமற்றவன், அவரவர் கணக்கில் உள்ள ஊழ்வினைகளே அவரவரின் இன்பத் துன்பங்களுக்குக் காரணம். அவ்வினைப் பயனை உரிய பொழுதில், உரியவாறு நல்லவர் கெட்டவர் என்ற பாகுபாடு பாராமல் பெருமானால் அவர்களுக்கு ஊட்டப்படுகிறது. இதனால் நல்லவர்களுக்கும் வினைக்கு ஏற்ற சோதனைகள் உண்டு. இது பொது நியதி.

இதுபோன்று இறைவன் செய்கின்ற சோதனைகள், உயிர்கள் மேலும் மேலும் உயர்வடைதல் பொருட்டே நடத்தப்படுகிறது. இதனால் உயிர்கள் மண்ணிலிருந்து விண்ணிற்கு உயர முயற்சி செய்யும்.

கருணை உள்ளங்கொண்ட பரம்பொருள் ஆன்மாக்களின் உள்ளத்தில் ஒளியினை ஊட்டுகிறான். தன் சிவசக்தியை உடம்பிற்குத் தந்து அருள்பாலிக்கிறான். இப்போது சொல்லுங்கள் உயிர்களுக்கு சோதனை வேண்டுமா! வேண்டாமா!!

வாழ்த்துகிறோம்

சீர்காழி, தில்லைவிடங்கன் திரு. R. சரவணன் பிள்ளை மகன் திரு. S. ஷர்மித் 14 வயதுக்கு உட்பட்டோரில் மாநில அளவில் சதுரங்க போட்டியில் மூன்றாம் இடமும், மாவட்ட அளவில் சதுரங்க போட்டியில் இரண்டாம் இடமும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவில் வங்கிகளின் தோற்றமும் மாற்றமும்

ORIGIN AND CHANGES OF BANKS IN INDIA

மேலையூர் ச. அன்பழகன் 98413 73184

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்த நாட்டில் உள்ள வங்கிகள் பெரும் பங்காற்றுகின்றன அதே போல் நம் இந்திய நாட்டிலும் வங்கிகள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி வருகின்றன அந்த வங்கிகளின் தோற்றம் பிற்காலத்தில் அவற்றுக்கு ஏற்பட்ட மாற்றம் ஆகியவற்றைப்பற்றி சற்று பார்ப்போம்.

வங்கிகளின் தோற்றமும் நோக்கமும்

இந்தியாவில் வங்கிகளின் சரித்திரம் 18 / 19 ஆம் நூற்றாண்டுகளிலேயே ஆரம்பித்து விட்டது எனக் கூறலாம். பிரிட்டிஷார் ஆட்சிக்குட் பட்டிருந்தகாலத்திலேயே நாட்டில் ஆண்ட சில குறு நில மன்னர்கள் அல்லது வசதி படைத்த தனி மனிதர்களால் பல வங்கிகள் துவக்கப்பட்டன அந்த வங்கிகள் அப்பகுதியில் தொழில் மற்றும் வணிகர் களுக்குத் தேவையான நிதி உதவி செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தன.

அதாவது வங்கிகள் வாடிக்கையாளர் கணக்குகளில் பணம் பெறுவது மற்றும் அக்கணக்கிலிருந்து பணம் கொடுப்பது, வாடிக்கையாளர்களின் நிரந்தர வைப்புத் தொகை மற்றும் சேமிப்புக் கணக்குத் தொகை ஆகியவற்றைப் பாதுகாப்பதுடன் அவற்றுக்கு வட்டியும் கொடுத்தல் மற்றும் தேவைப்படும் தனி மனிதர்களுக்கும் நிறுவனங்களுக்கும் கடன் கொடுத்தல் போன்ற செயல்களைச் செய்து வந்தன.

எளியவர்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவ வில்லை

அந்தக் கால கட்டங்களில் வங்கிச்சேவைகள் என்பவை வசதி படைத்த மனிதர்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்களின் உரிமையாகவே இருந்தன. பெரும்பாலான எளிய மக்களுக்கும் விவசாயிகள் மற்றும் சிறு தொழில் முனைவோருக்கும் வங்கிச் சேவைகள் கிட்டவில்லை. அவர்களுக்கு அதிக வட்டிக்கும் கடுமையான திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகளுடனும் கடன் வழங்கியதால் அவர்கள் தங்களது நிதித் தேவைக்கு கிராமத்தில் உள்ள வசதி படைத்த மிராஸ்தார்கள் மற்றும் வட்டிக்குக் கடன் கொடுக்கும் தனியார் நிதி நிறுவனங்களையுமே நம்பி இருந்தனர். மக்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகை போன்ற பணத்தை அவ்வாறு ஏழை எளிய



மக்களுக்கு உதவாததால் தான் பிற்காலத்தில் அரசு வங்கிகள் மீது சமூகக் கட்டுப்பாடு SOCIAL CONTROL மற்றும் வங்கிகளை தேசியமயமாக்குதல் NATIONALISATION OF BANKS போன்ற நடவடிக்கைகள் எடுக்க நேர்ந்தது அவற்றைப்பற்றி பிறகு விரிவாகப்பார்ப்போம்

இரண்டு வகையான வங்கிகள்

நம்நாட்டில் தோன்றிய வங்கிகளை சுதந்திரத்துக்கு முன்பாகத் தோன்றியவை 1786 – 1947 மற்றும் சுதந்திரத்துக்குப் பிறகு தோன்றியவை 1947 முதல் இன்று வரை என இரண்டாகப் பிரிக்கலாம். சுதந்திரத்துக்குப் பிறகு தோன்றிய வங்கிகளையும் கீழ்க் கண்ட மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்

" தேசியமயமாக்கப்படுவதற்கு முன் 1947 – 1969

" தேசியமயமாக்கப்பட்ட பின் 1969 – 1991

" தாராளமயமாக்கப்பட்ட காலம் 1991 லிருந்து இன்று வரை

அவற்றைப்பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்

1. தேசியமயமாக்கப்படும் முன்பு 1786 – 1969

* இந்தியாவின் முதல் வங்கி பொது பாங்க் ஆஃப் இந்தியா 1786 ல் துவக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து இந்துஸ்தான் வங்கியும் பெங்கால் வங்கியும் தொடங்கப்பட்டன.

* கிழக்கு இந்தியக் கம்பெனி அரசுக்குச் சொந்தமான பாங்க் ஆஃப் பெங்கால் 1809 பாங்க் ஆஃப் பாம்பே 1840 மற்றும் பாங்க் ஆஃப் மதராஸ் 1843 ஆகிய மூன்று வங்கிகளைத் துவங்கியது பின்னர்1935 ல் இந்த மூன்று வங்கிகளும் ஒன்றிணைக்கப்பட்டு இந்தியப் பேரரசு வங்கி இம்பீரியல் பாங்க்யாயிற்று பின்னர் அதுவே ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா என பெயர் மாற்றம் பெற்றது.

* அலஹாபாத் வங்கி முற்றிலும் இந்தியர்களால் 1865 ல் துவக்கப்பட்டது.

* 1895ல் பஞ்சாப் நேஷனல் பாங்க் லாகூரில் துவக்கப்பட்டது.

* 1906 லிருந்து 1913 க்குள் பாங்க் ஆஃப் இந்தியா, சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா, பாங்க் ஆஃப் பரோடா, கனரா பாங்க் இந்தியன் பாங்க் மற்றும் பாங்க் ஆஃப் மைசூர் ஆகிய அனைத்தும் இந்தியர்களால் தொடங்கப்பட்டன்.

* முற்றிலும் அரசுக்குச் சொந்தமான இந்திய மத்திய வங்கி என்னும் இந்திய ரிசர்வ் வங்கி 1935 ல் உருவாயிற்று.

* வணிக வங்கிகளின் செயல்பாடுகளை வலுவுள்ளவையாக்க இந்திய அரசு, பாங்கிங் கம்பெனிச் சட்டம் 1949 ஐ கொண்டு வந்தது . அதுவே பின்னர் பாங்கிங் ரெகுலேஷன் ஆக்ட் எனப்படும் வங்கிகள் ஒழுங்கு படுத்தும் சட்டம் 1949 என மாறியது.

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் அதிக அளவில் தனியார் வங்கிகள் தோன்றின அவற்றில் பெரும்பாலானவை சிறியவைகளாக தனியார் பங்குதாரர்களைக் கொண்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை அந்த உள்ளூர் பகுதியை அடிப்படையாகக் கொண்டிருந்தன அவற்றில் பல தோல்வியடைந்தன.

2. வங்கித்துறை சீரமைப்பு 1969 – 1991 தேசியமயமாக்கப்பட்ட பின்

1967 லிருந்து 1991 வரையிலான காலகட்டத்தில் வங்கித் துறை பெரும் மாற்றங்களைக் கண்டது. 1967 ல் வங்கிகள் மீது சமூகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அது எதிர்பார்த்த பலனை அளிக்காததால் 1969ல் 14 வங்கிகளும் 1980 ல் 6 வங்கிகளும் தேசியமயமாக்கப் பட்டன.

வங்கிகள் தேசியமயமாக்கப்படல்

திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்தகாலத்தில் வங்கிகள் தேசியமாக்கல் மூலம் வங்கிச் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதினார். அவ்வாறு தேசிய மயமாக்கப்பட்டதால் வங்கிகள் தங்களது சமுதாயக் கடமையின் ஒரு அங்கமாக கிராமப்புற மற்றும் விவசாயத்துறைகள் மீது கவனம் செலுத்த வேண்டியது கட்டாயமாயிற்று. கிராமப்புறங்களில் அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து வந்தவர்கள் பிடியிலிருந்து விவசாயக் கூலிகளை மீட்க வங்கிகளின் நிதி ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டன.

வங்கிகள் இரண்டு கட்டங்களாக தேசிய மயமாக்கப்பட்டன. முதல் கட்டம் 1955 ல் ஆரம்பித்தது அப்போது இம்பீரியல் வங்கிகள் என்று சொல்லப்பட்ட இந்தியப் பேரரசு வங்கிகள் நாடாளும் மன்றச் சட்டம் மூலம் ஸ்டேட் வங்கிகள் என மாற்றப்பட்டு அரசுடமையாக்கப்பட்டது 1959ல் அந்த ஸ்டேட் வங்கியின் 7 துணை வங்கிகளும் ஒன்று சேர்க்கப் பட்டு தேசியமயமாக்கப்பட்டு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவாயிற்று. 1969 ல் ரூ 50 கோடிக்கு மேல் தேசிய அளவில் வைப்புத்தொகை வைத்திருந்த 14 வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நாடு முழுவதும் தங்கள் கிளைகளைத் துவக்கி அவர்களுடைய நடவடிக்கைகளை விஸ்தரித்தன. எல்லாத்தட்டு மக்களும் பயன் பெறும் வண்ணம் கிராமப்புற வங்கிகள் பல திட்டங்களை அறிமுகப்படுத்தி சமுதாயத்தின் அனைத்து தரப்பினருக்கும் வங்கிச் சேவை கிடைக்க உதவியது.

ஆண்டு வாரியாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் விபரம் வருமாறு :-

1955 – ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா தேசியமயமாக்கப்பட்டது

1959 – ஸ்டேட் பாங்கின் கீழ்க்கண்ட 7 துணை வங்கிகள் ஒன்று சேர்க்கபப்ட்டு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு தேசியமயமாக்கப் பட்டது

" ஸ்டேட் பாங்க் ஆஃப் பிகானீர் மற்றும் ஜெய்பூர்

" ஸ்டேட் பாங்க் ஆஃப் ஹைதராபாத்

" ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தூர்

" ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர்

" ஸ்டேட் பாங்க் ஆஃப் பாடியாலா

" ஸ்டேட் பாங்க் ஆஃப் சௌராஷ்ட்ரா

" ஸ்டேட் பாங்க் ஆஃப் திருவாங்கூர்

1969 ல் ரூ 50 கோடிக்கு மேல் வைப்புத் தொகை வைத்திருந்த கீழ்க்கண்ட 14 பெரிய வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன

1. அலஹாபாத் பாங்க், 2. பாங்க் ஆஃப் பரோடா. 3. பாங்க் ஆஃப் இந்தியா 4. பாங்க் ஆஃப் மஹராஷ்ட்ரா 5. கனரா பாங்க் 6. சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

7. தேனா பாங்க் 8. இந்தியன் பாங்க் 9. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் 10. பஞ்சாப் நேஷனல் பாங்க் 11. சிண்டிகேட் பாங்க் 12. யூகோ பாங்க் 13. யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா 14. யுனை டெட் பாங்க் ஆஃப் இந்தியா

1980ல் மேலும் ஆறு வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன. அவை வருமாறு :-

" ஆந்திரா பாங்க்

" கார்பரேஷன் பாங்க்

" ந்யூ பாங்க் ஆஃப் இந்தியா

" ஓரியண்டல் பாங்க் ஆஃப் காமெர்ஸ்

" பஞ்சாப் சிந்த் பாங்க்

" விஜயா பாங்க்.

3. தாராளமயமாக்கப்பட்ட காலம் 1991 லிருந்து

பொதுத்துறை வங்கிகளின் நிதி நிலைமைய அபிவிருத்தி செய்து ஸ்திரப்படுத்தவும் அவர்களுடைய லாபத்தை உயர்த்தவும் ஆலோசனை கூற இந்திய அரசு திரு. A. நரசிம்மன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது . அந்தக் குழு முக்கியமாக வங்கிகளை மற்ற வங்கிகளுக்குப் போட்டியாக அதிக ஸ்திரமாகவும் நிதி நிலைமை உறுதியாக இருக்கச் சாதகமான நடவடிக்கைகளை எடுக்கவும் பரிந்துரை செய்தது. மேலும் அக்குழு இனி வங்கிகளை தேசியமயமாக்கக் கூடாது. வெளி நாட்டு வங்கிகள் இந்தியாவில் துணை வங்கிகளாகவோ அல்லது வங்கியின் கிளைகளாகவோ அமைக்க அனுமதிக்க வேண்டும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்ற வங்கிகளுடன் போட்டி போடும் வகையில் பொதுத் துறை வங்கிகளும் தனியார் துறை வங்கிகளும் அரசு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் சமமாக நடத்தப்பட வேண்டும். வங்கிகள் பழைய காலத்துக்கு ஒவ்வாத முறைகளைக் கைவிட வேண்டும் போன்ற பல பரிந்துரைகளைச் செய்தது . குளோபல் ட்ரஸ்ட் வங்கி, ஐ சி ஐ சி ஐசி வங்கி, ஹச் டி எஃப் சி வங்கி, ஆக்ஸிஸ் வங்கி, பஞ்சாப் வங்கி போன்ற பல நிறுவனங்கள் வங்கித்துறையில் நுழைய ரிசர்வ் வங்கி உரிமம் வழங்கியது. அந்த சிபாரிசுகளில் பல வற்றை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது.

அட்டவணை வணிக வங்கிகள்

பாங்கிங் கம்பெனிகள் சட்டம் பிரிவு 5 1 அ ல் ஷெட்யூல் பாங்க் என்னும் அட்டவணை பாங்க் என்பது இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934 இரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள வங்கிகள் என்று கூறுகிறது. இத்தகைய வங்கிகளின் குறைந்த பட்ச பங்கு மூலதனமும் ரிசர்வ் என்னும் இருப்பும் சேர்ந்து ரூ 25 லட்சமாக இருக்க வேண்டும். இவ்வங்கிகள் அவைகளுடைய நடவடிக்கைகள் பற்றி ஒவ்வொரு வாரமும் ரிசர்வ் வங்கிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

வணிக வங்கிகளின் பணிகள்

வங்கிகள் பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகை பெறுதல், வாடிக்கையாளர்களின் நடப்புக் கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்கு வைத்திருத்தல் மற்றும் கேஷ் கிரெடிட் என்னும் காசுக் கடன் கணக்கு ரெகரிங் டெபாசிட் என்னும் தொடர்ச்சியான வைப்புக் கணக்கு வைத்திருத்தல் மற்றும் மக்களுக்கு வீட்டுக் கடன், வாகனக் கடன், நகைக்கடன் மற்றும் வணிகக் கடன் போன்ற கடன் வழங்குதல் ஆகிய பொதுவான வங்கிப் பணிகளுடன் கீழ்க்கண்ட வசதிகளையும் மக்களுக்குச் செய்கின்றன.

வங்கிகள் வழங்கும் இதர வசதிகள்

வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு, பாதுகாப்புப் பெட்டக வசதி, பயணக் காசோலை வழங்குதல் ஆயுள் காப்பீடு ஆண்டுக் கட்டணம் மற்றும் நகராட்சி வீட்டுவரி கட்டுதல், கடன் அட்டைகள் வழங்குதல். மின்னணு வங்கிச் சேவை தானே பணம் எடுக்கும் எந்திர வசதி , ஒரு வங்கியின் கணக்கில் வேறு கிளை மூலம் கட்டுதல் போன்ற பலவகை வசதிகளையும் செய்து கொடுக்கின்றன.

நம் நாட்டில் வங்கிகளின் தோற்றம் நாளாவட்டத்தில் அவற்றுக்கு ஏற்பட்ட மாற்றங் கள் பற்றி எல்லாம் அதிகம் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் பி என் பி எஸ் யூ.காம், ஜக்ரன் ஜோஷ்.காம், ஆல் கவண்மெண்ட் ஜாப்ஸ் இந்தியா.இன் பாங்கர்ஸ் டெய்லி .இன் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

மருதநாயகம் என்னும் மர்மநாயகம்

ஆங்கிலேயரிடம் நாம் அடிமைப்பட்டிருந்த காலகட்டத்தில் அதே ஆங்கிலேயர் கனவிலும் கண்டு நடுங்கிய மன்னர்கள் இம்மண்ணில் உண்டு. அவ்வாறு கண்டு நடுங்கி, மடிந்த வீரனின் உடலைத் தோண்டி எடுத்து, துண்டு துண்டாய் வெட்டிப் புதைத்த கதை நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

நம் நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தது யார் என்று கேட்டால், காந்தி என்ற பெயரே முதலில் கேட்கும். காந்தி போரின் இறுதிக் கட்டத்தில் வந்து சேர்ந்தவர் அவருக்கும் முன்னதாகவே பரங்கியரை எதிர்த்து போரிட்டு மாண்டவர் பலர் உண்டு.

அத்தகையருள் குறிப்பிடத்தக்கவர் தாம் மருதநாயகம் என்னும் யூசுப்பான். பாகனேரி என்னும் நாட்டில், சாதாரண குடிமகனாக பிறந்தவர் தான் மருதநாயகம். பின்னாளில் இஸ்லாமிய மதத்தை தழுவி, யூசுப்கான் என்றுத் தன் பெயரை மாற்றிக்கொண்டார்.



புதுச்சேரி சென்ற அவர், அங்கிருந்த பிரெஞ்சு நாட்டவரின் படையில், சாதாரண வீரனாக சேர்ந்தார். மூன்று வருட பயிற்சியில் சகலகலா வல்வனாய் திகழ்ந்தார். அது மட்டுமில்லாது பல மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

அவரது திறமையைத் கண்டு வியந்த பிரெஞ்சு அரசு அவரைப் படைத்தளபதி ஆக்கியது. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே நடந்த பல போர்களில் ஆங்கிலேயரை தோற்கடித்தார்.

முகாலயர் ஆட்சிக்காலம் முடிவுபெற இருந்த காலமது. ஔரங்கசீப் திடீரென இறக்க, அவரது கட்டுப்பாட்டில் இருந்த நவாப்கள் தங்கள் நாடுகளை சுதந்திர சிற்றரசாய் பிரகடனப்படுத்தினர். வேலூரில் இருக்கும் ஆற்காட்டை தலைநகரமாய் கொண்டு இயங்கும் நவாப் அப்போது சக்தி வாய்ந்தவராய் இருந்தார். ஆற்காடு நவாப் திடீரென இறக்க, பதவி சண்டை வலுவானது. சந்தா சாகிப் மற்றும் முகமது அலி என்ற இருவருக்கும் சண்டை உருவானது. சந்தா சாகிப் பிரென்சுகாரர்களின் உதவியை நாட, முகமது அலிக்கு உதவியாய் ஆங்கிலேயர் வந்தனர். மருதநாயகத்தின் உதவி இருந்தும் ஆங்கிலேய படையின் எண்ணிக்கையால் சந்தாசாகிப் கொல்லப்பட்டார்.

ஆற்காட்டின் நவாப்–ஆக முகமது அலி வந்தார். எனினும் ஆங்கிலேயருக்கு கப்பம் கட்ட நேர்ந்தது.

மருதநாயகம் பின்னாளில் பிரெஞ்சு தளபதியுடன் ஏற்பட்ட சச்சரவின் காரணமாய் ஆங்கிலேயருடன் சேர்ந்தார். ஆங்கிலேயருடன் சேர்ந்து பிரெஞ்சுகாரர்களை ஓடவிட்டார். பிரெஞ்சுகாரர்கள் தம் எல்லையை பாண்டிச்சேரி மற்றும் காரைக்காலோடு நிறுத்திக் கொண்டதற்கு மிகப்பெரும் காரணம் யூசுப்கான்.

ஆங்கிலேய அரசு அவரது திறமையைப் பாராட்டி அவரை கவர்னர் ஆக்கியது. மதுரை, திருநெல்வேலியின் ஆட்சிப் பொறுப்பு அவரிடம் சென்றது. அவரது ஆட்சிக்காலத்தில் மதுரை ஜொலித்தது.

தாமிரபரணி நதியில் அணை ஒன்றைக் கட்டி வேளாண்மை பெறுக வழிசெய்தார். வேளாண் துறைக்கு அடுத்து நெசவுத்துறை மேம்பட பல வழிகள் செய்தார். சௌராஷ்டிரா இனத்தவர் மதுரையில் அதிகம் வாழ வந்தது இவர் காலத்தில்தான்.

ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கோவில் நிலங்களைத் திரும்பப் பெற்று, கோவில் நிதியோடு சேர்த்தார். கோவில் நிதிகளை கோவில் மேம்பாட்டிற்கு செலவிட உத்தரவிட்டார். அதற்கு முன் நடந்த போரின் விளைவால் அழகர்கோவில் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனை மீட்டு கோவில் நிர்வாகத்திடம் அளித்தார்.

பல ஊர்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. விஞ்ஞானம் புகாத இந்திய மண்ணில் கொடைக்கானல் செல்ல மலைப்பாதை அமைக்கப்பட்டது இவர் காலத்தில் தான். இன்று மதுரை, தேனி, கம்பம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகியவை சாலையால் ஒன்றிணைந்து இருப்பது இவரது முயற்சியால் தான் ஆங்கிலேயருக்கு இம்மேம்பாட்டுப்

பணிகள் பிடிக்காது இருந்தாலும், இவரிடமிருந்து கப்பம் ஒழுங்காக வந்த காரணத்தினால் எதற்கும் இடையூறு செய்யாமல் இருந்தனர்.

ஆற்காடு நவாப்பிற்கு உதவப்போய் மைசூரு சிங்கம் ஹைதர் அலியின் பகையைப் பெற்றுக்கொண்டார். இன்னொரு பக்கம் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிடத் தயாரான பூலித்தேவர் இவரையும் எதிரியாய் கருதினார்.

ஆங்கிலேயர் இந்திய வரலாற்றில் இருவரின் போர் யுக்திகளை கண்டு வியக்கின்றனர். ஒன்று ஹைதர் அலி மற்றொன்று யூசுப்கான் என்னும் கான்சாகிப்.

இவ்விருவரும் சேர்ந்திருந்தால் ஆங்கிலேயரின் ஆதிக்கம் ஒடுக்கப்பட்டிருக்கும் வளம் நிறைந்த நம் திருநாட்டின் செல்வங்கள் சுரண்டப்படாமல் இருந்திருக்கும். இந்திய வரலாற்றின் பெரும்பக்கங்கள் மாற்றப்பட்டிருக்கும். ஆனால் ஆங்கிலேயரின் சூழ்ச்சியால் நம் நாட்டினை திறமையே மற்றொன்றை வீழ்த்தியது.

நெல்லூர் சுபேதார், கமாண்டோ கான் என்றழைக்கப்பட்ட யூசுப்கானின் புகழ் பரவத்தொடங்கியது. அது ஆற்காடு நவாப்பிற்கு பொறாமையே அதிகப்படுத்தியது. திருச்சியில் வரிவசூலிக்கும் உரிமையை யூசுப்கானிடம் இருந்து பிடுங்க செய்தார்.

பனிப்போராய் இருந்தது, ஒரு நாள் திடீரென பெரும்போராய் கிளர்ந்தெழ ஆரம்பித்தது. ஆற்காடு நவாபா / யூசுப்கானா என்று முடிவு செய்யும் அளவிற்கு ஆங்கிலேயர் ஆளாயினர். ஆற்காடு நவாப் திறமையில் ஒன்றுமில்லாது இருந்தாலும் பதவியின் காரணமாய் உயர்ந்திருந்தார். அதனால் அவரோடு சாய்ந்தது ஆங்கிலேய அரசு, யூசுப்கான் ஆற்காடு நவாப் பின் ஆட்சிக்கு அடியில் கொண்டுவரப்பட்டார்.

தன் திறமையை துச்சமென கருதிய ஆங்கிலேயர் மீது கோபம் கொண்டார் யூசுப்கான். வெளியுலகம் மெல்லப் புலப்பட்டது. தன் நாட்டை வேறு ஊரிலிருந்து வந்தவன் எவ்வாறு கையகப்படுத்தினான் என்று சிந்தித்துப் பார்த்தார்.

தன் திறமையை வைத்தே தன் நாட்டு மக்களின் உயிர்களை கொன்று குவித்த ஆங்கிலேயர் மீது ஆவேசம் கொண்டார் எவனுக்கும் கப்பம் கட்ட முடியாது போடா! என்று துணிச்சலும் ஆங்கிலேயரை எதிர்த்தார்.

அவரது அரண்மனையில் பறந்த ஆங்கிலேய கொடி இரக்கப்பட்டு, எரிக்கப்பட்டது மதுரைப் போர் மூண்டது. பல யுக்திகளை முறியடித்த யூசுப்கான் முன் ஆங்கிலேய படை ஒடுங்கி நின்றது.

வீரத்தால் அவ்வீரனை வெல்ல முடியாது என முடிவுக்கு வந்த ஆங்கிலேயர், அவரை வஞ்சத்தால் கைகொள்ள திட்டமிட்டனர். அதன்படி ஒரு வெள்ளிக்கிழமை தொழுகையில் இருந்தபோது யூசுப்கான் தன் மந்திரிகள் மூலமாக கைது செய்யப்பட்டார்.

ஆயுதம் இல்லாதிருந்த அவரை, பின்னால் இருந்து மூவர் பிடித்து ஆற்காடு நவாபிடம் ஒப்படைத்தனர். ஆங்கிலேயர்கள் யூசுப்கான் தங்களுக்கு அளித்த பெரும்சேவையை கருத்தில் கொண்டு அவருக்கு எவ்வித தண்டனையும் அளிக்க வேண்டாம் என்று நினைத்தனர்.

ஆனால் ஆற்காடு நவாப் மருதநாயகத்தை தூக்கிலிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார். அதன் பேரில் சம்மட்டிபுரம் என்னும் இடத்தில் மருதநாயகத்தை தூக்குக் கயிற்றில் ஏற்றினர். ஆனால் கயிறு அறுபட்டதே தவிர யூசுப்கானை கொல்ல முடியவில்லை.

புதுக்கயிற்றை தயாரித்து தூக்கில் ஏற்றியும் கழுத்தில் சிறுகாயம் மட்டுமே உருவானது. யோகாசனம் பயின்ற அம்மாவீரன் மூச்சை அடக்கி தன்னுயிரைக் காத்துக் கொண்டான்.

15–10–1764– ஆம் ஆண்டு மூன்றாம் முறையாய் தூக்கில் ஏற்றப்பட்டார் யூசுப்கான் உயிர் போகும்வரை தூக்கில் இருக்கட்டும் என்று விடப்பட்டார். நெடுந்நேரம் கழித்தே மருதநாயகத்தின் உயிர் இம்மண்ணை விட்டு போனது.

அதன் பிறகும் உயிருடன் வந்துவிட போகிறார் என்று பயந்த ஆங்கிலேயர், புதைத்த அவரது உடலைத் தோண்டி எடுத்து துண்டாக்கினர். தலை திருச்சியிலும் கைகள் பாளையம்கோட்டையிலும் கால்கள் தஞ்சையிலும், மற்ற உடற்பாகங்கள் சம்மட்டிபுரத்திலும் புதைக்கப்பட்டன.

வரலாற்று சுவடுகளில் பெரும் இடத்தைப் பிடித்த மருதநாயகம் இறந்தும் எதிரிகளை பயம் கொள்ள வைத்த மாவீரன் ஆங்கிலேயரின் வளர்ச்சிக்கு வித்திட்டாலும், மதுரையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவன் அவன்.

அவ்வீரனை நம் நினைவுகளில் வைத்து போற்றுவது நம் கடமை !!!

– பா. லெட்சுமி,
மேற்கு தாம்பரம்.

திருவிளையாடற் புராணம்

36 – இரசவாதம் செய்த படலம்.

– 'சிவகாமியின் செல்வன்'

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

தன்னையே அணிமணிகளால் அலங்கரித்துக் கொண்டு அழகு பார்த்து மகிழ்வது பொதுவாக மகளிர் இயல்பு. தனக்கு மிகவும் நெருக்கமானவர்களை அலங்கரித்து அழகு பார்ப்பதும் அவர்களின் இன்னொரு சிறப்பியல்பு. பத்தி செய்வோர் தாம் வணங்கும் கடவுளை வடித்து உருவமாக்கி அலங்கரித்து அழகு பார்த்தல் என்பதும் ஓர் உன்னதக்குணம். அத்தகைய குணம் கொண்ட பெண்தான் பொன்னையாள். அவள் வரலாறுதான் 36–ஆம் படலத்தின் பேசுபொருள்.

திருப்பூவணத் தலத்தின் பெருமை :

இந்திரலோகத்தை விஞ்சும் அளவிற்கு எழிலும் வளமும் நிறைந்தது பைந்தமிழ்ப் பாண்டி நாடு. இந்நாட்டை, பேரரசன் இராசேந்திரன் ஆண்டகாலம். இந்நாட்டுத் திருத்தலம் பூவணம். இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானை வையை ஆறு தன் அலை கரங்களால் பூத்தூவி வணங்கும். இந்திரன், சூரியன் முதலான தேவர்கள் வந்து வணங்கி வரங்கள் பல பெற்றுள்ளனர்.

பொன்னையாள் :

பொன்னையாளின் பெயர் மட்டுமல்ல உடல் உள்ளம் எண்ணம் யாவும் பொன்னே! வண்டு மிழற்றும் கூந்தல் கொண்டவள். தெய்வம் பெண் போன்றவள். தேவரும் மயங்கும் அமுதம் போன்றவள். யாழ் மீட்டுவதில் வல்லவள். நன்கு பாடுவாள். சிறப்பாக ஆடுவாள். அழகில் அரம்பை மகளிருக்கு நிகராவாள். சிவபுண்ணிய நெறி நிற்பதால் இவள் யாவரினும் மேலானவள்.

முன்னொரு காலத்திலே தாருகவனத்தில் பிட்சாடன வடிவோடு சென்ற சிவன் அங்குள்ள இருடி பத்தினிகளை அன்புடன் நோக்கினார். அப்பொழுது அவர்கள் கருப்பமுற்றுப் பெற்ற பெண்கள் உருத்திர கணிகையர் எனப்பட்டனர். இந்த வழியில் வந்தவள்தான் பொன்னையாள். இவர்கள் ஆலயத்து எழுவகை நடனமாதருள் முதலானவர்கள். இவர்களைத் தேவதாசி என்றும் கூறுவர்.

பொன்னையாள் வைகரையில் எழுந்து வையையில் நன்னீராடுவாள். சிவபூசை செய்வாள். திருப்பூவண நாதரை வணங்கிச் சுத்த நிருத்தம் ஆடுவாள். இதனை சொக்க நடனம் என்பர். இது சாந்தமாக ஆடும் சாந்திக் கூத்தின் நான்கு வகைகளுள் ஒன்று. நூற்றிஎட்டுக் கரணமுடையது. மத்தளம் முதலியன இன்றிச் செய்யப்படும் நாட்டியமாகும் இது.

ஆடி முடித்துவிட்டு வீட்டிற்கு வருவாள். வந்திருக்கும் சிவனடியார்களை சிவமாகப் பாவித்து வணங்குவாள். அவர்கள் மகிழ இன்சுவை உணவளிப்பாள். அவர்கள் புசித்து எஞ்சியதையே புசிப்பாள். இதுவே பொன்னையாளின் தினசரி வழக்கமாகும்.

சிவனார் வடிவை படிமமாக்க எண்ணுதல் :

இவள்தன் அன்பை உலகிற்கு அறிவிக்கும் பொருட்டுச் சிவனாரின் திருவுருவை பொன்னில் வடிக்கும் விருப்பத்தைச், சிவன் இவள் உள்ளத்தில் உருவாக்கினான். இவள் மான்மழு ஏந்திய சிவன் உருவை 'கருவினால்' செய்வித்தாள். அதாவது மாழையில் (உலோகம்) வடிவம் வார்க்கப்படுவதற்கு மெழுகால் அமைக்கப்படும் உருவம். இதனைத்தான் 'கருக்கட்டுதல்' என்பர் சிலை சாத்திரத்தில்.

சிலை வடிக்கப் பொன்னில்லை. வரும் பொருள்யாவும் அடியார் வழிபாட்டிற்கே செலவாகிறது. மிச்சம் இல்லை. சிவனின் திருவுருவை எப்படி வார்ப்பது என்பது புரியவில்லை. பெரும் கவலைக்குள்ளானாள். குலபூடண பாண்டியனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத பொற்கிழியினை அருளிய சோமசுந்தரக் கடவுளை மனத்திலே சிந்தித்திருந்தாள். அவளின் நினைவைத் தம் உள்ளத்தில் கொண்டார் சிவபெருமான்.

சித்தர் வடிவங்கொண்டு வந்த சிவபெருமான் :

தூய திருநீறு அணிந்த திருமேனியும், பவழம் போன்ற செஞ்சடையும் கொண்ட சிவமூர்த்தியாய் பெருமான் பொன்னையாளின் இல்லத்திற்கு எழுந்தருளினார். ஏனைய சிவனடியார்களுடன் திருவமுது செய்யாமல், பொன்னையாள் வீட்டின், ஒரு பக்கத்தில் தனியாக ஏதோ சிந்தித்தவாறு அமர்ந்திருந்தார். இவரைக் கவனித்த பொன்னையாளின் தாதியர் அவரிடம் சென்று உள்ளே வருமாறு அழைத்தனர். மறுத்த சித்தர் ''அமுதம் போன்ற உங்கள் தலைவியை இங்கே அழைத்து வாருங்கள்'' என்றார். இச்செய்தி பொன்னையாளின் செவிக்கு எட்டியது. உடனே அவள் கொடியனைய தன் உடலைச் சுமந்தவாறு சித்த மூர்த்தியிடம் வந்தாள். விழுந்து வணங்கினாள். ''ஐயனே! உள்ளே எழுந்தருள்க! தேவரீர் திருவுள்ளத்திற்கு ஏற்றவாறு தொண்டு செய்வேன்'', என்று அழைத்தாள்.

சித்த மூர்த்தி பொன்னையாளை மெலிந்த காரணம் யாதெனல் :

அதனைக் கேட்ட சிவமூர்த்தி சிரித்தார். 'உன் உடல் கொடி போல மெலிந்திருக்கிறதே! என்ன காரணம் ?'' என்றார்.

"சுவாமிகளே! உடல் மெலிவிற்கு வேறு காரணம் ஏதுமில்லை. எம்பெருமானின் திருவுருவத்தை வார்த்து வடிக்கப் பெரிதும் விரும்பினேன். அதற்கான உருவை மெழுகால் கருக்கட்டி வைத்துள்ளேன். அதைப் பொன்னால் வடிக்க விரும்பியும், உரிய பொன் பொருளின்றி உள்ளேன். வரும் பொருள் யாவும் சிவனடியார்களைப் பேணுவதிலேயே செலவாகிவிடுகிறது. இதுதான் காரணம் என் மெலிவிற்கு" என்றாள்.

"பெண்ணே! வாழ்வும், இளமையும், பொருளும் நிலையற்றவை என்பதை இவ்வினம் வயதிலேயே நீ உணர்ந்து கொண்டாய். தருமம் ஒன்றே நிலையானது என்பதையும், அதிலும் சிவதருமமே சிறந்தது என்பதை உணர்ந்து கொண்டாய். அதனால் சிவபூசையும், சிவனடியார்களுக்கான உணவளிக்கும்தொண்டையும் செய்கிறாய். இதனால் நீ இம்மைப் பயனையும் இப்பொழுதே பெற்றுவிட்டாய். பொன்னையாள் என்ற பெயரைப் பெற்ற நீ அழிவற்ற இறைவனின் திருவுருவத்தைப் பொன்னாலேயே செய்து முடித்து மகிழ்வாயாக! இப்பொழுது உன் வீட்டிலுள்ள மற்ற உலோகப் பாத்திரங்கள் யாவற்றையும் இங்கே கொண்டு வருக! என்று கூறியருளினார்.

சிவமூர்த்திகள் இரசவாதம் புரிதல் :

சிவமூர்த்தியின் சொல்லைக் கேட்டதும் பொன்னையாள், வீட்டிலிருந்த பாத்திரங்களை எல்லாம் கொண்டு வந்து சித்தமூர்த்தியின் முன்பு வைத்தாள்.

சித்தமூர்த்தி, தன் பையிலிருந்த திருநீற் எடுத்து தன்முன் இருந்த பாத்திரங்கள் மீது சிதறித் தெளித்தார். "இவை யாவும் பொன்னாகுக!" என்று பொழிந்தார். பின்பு அவளை நோக்கி "இன்றிரவு நீ இவற்றையெல்லாம் நெருப்பிலிட்டு எடு. யாவுமே பொன்னாக மாறிவிடும். பின்னர் நீ விரும்பியவாறு சிவனாரின் திருமேனியைப் பொன்னால் வார்ப்படம் செய்து கொள்!" என்றார்.

பொன்னையாள் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கிற்று. "சுவாமி! இன்றிரவு தாங்கள் இங்கேயே தங்கி திருவமுது செய்துவிட்டு, இப்பெருமைக்குரிய செயலையும் முடித்துவிட்டு, பொழுது விடியுமுன் புறப்பட்டுச் செல்வீர்களாக" என்றாள்.

அங்கையற்கண்ணியைச்சற்றும்பிரியாதவரான சோமசுந்தரப் பெருமான் "யாம் மதுரையில் வசிக்கும் சித்தர். நாம் இங்கு இருப்பதாகவே எண்ணி நீ செயல்படு. யாவும் நன்கு நடக்கும்" என்று கூறி மறைந்தருளினார்.

பொன்னையாள் உலோகங்களைத் தீயிலிட்டுப் பெண்ணாக்கல் :

பொன்னையாள் சித்தர் வழங்கிய கட்டளைப்படியே செயலாற்றினாள். இறையருள் கிட்டியதும் ஆன்மாவைப் பற்றியுள்ள ஆணவம்லம் அழிந்து ஆன்மா தூய்மையடைவதைப் போல, நெருப்புபட்டவுடன் அப்பாத்திரங்கள் எல்லாம் சொக்கத்தங்கமாக மாறி ஒளிர்ந்தன.

பொன்னையாள் பொன்னால் இறைவனை வார்த்தெடுத்தல் :

அப்பொன்னைக் கொண்டு ஒரு வடிவமில்லாத இலிங்க மூர்த்தியான இறைவனுக்குத் திருவடிவம் வார்ப்பித்தாள். இறைவன் பெயர் சோமாஸ்கந்தமூர்த்தி ஆகும். பொன்னார் மேனியரின் பேரழைகைக் கண்டு பெருவியப்பும் மகிழ்ச்சியும் கொண்டாள். பின்னர் அதனை பிரதிட்டை செய்வித்தாள். திருவிழாவும் தேரும் நடாத்தினாள். சில காலம் சென்ற பின் பராசக்தியின் சாரூப பதிவியைப் பெற்று சிவலோகம் சென்றாள்.

இறைவன் குறியும் பெயரும் கொண்டு விளங்கி வருதல் :

பொன்னையாள் அப்பெருமானின் கன்னத்தின் கண் அள்ளுதற்கிட்ட கையிலுள்ள நகக் குறியையும், "அழகிய பிரானோ" ஏமாநாதர், சுந்தரநாதர், திருப்பூவணநாதர் என்று கூறிய காரணப் பெயரையும் இறைவன் கொண்டு, பொன்னாலாகிய திருமேனி வேறுபட்டுத் தக்க உருவாக எழுந்தருளி இன்பம் நல்கி அருளி வருகின்றார்.

வாழ்த்துகிறோம்.

பெண்ணாகடம் G. ரவிச்சந்திரன் B. கலைச்செல்வி இல்லத்திருமணம் 4–12–22 அன்று சரோ ரத்தினம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மணமக்கள் ர. கோபிகண்ணன் – V. பாரதி.

திட்டக்குடி மு. கோடிபிள்ளை – கோ. கலாவதி அவர்களின் சதாபிஷேகம் 7–12–22 அன்று சரோ ரத்தின அரங்கத்தில் நடைபெற்று இரு நிகழ்வுகளிலும் பெண்ணாகடம் சங்கத்தின் சார்பில் வாழ்த்து மடல் அளிக்கப்பட்டது.

சங்க நிகழ்வுகள்

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

அண்ணாநகர் :

சங்கத்தின் மாதாந்திர கூட்டம் 18–12–2022 அன்று கொரட்டூரில் உள்ள சங்க வளாகத்தில் தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

YMKA மற்றும் நங்கநல்லூர் சங்கத்தின் ஆண்டு விழா ஆகியவை நடைபெறவுள்ளது எனவும், அதில் அனைவருமே கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என தலைவர் கேட்டுக் கொண்டார். நம் சங்கத்தில் 422 பேர் ஆயுட்கால உறுப்பினர்களாகவும் 196பேர் ஆண்டுசந்தாசெலுத்தும்உறுப்பினர்களாகவும் உள்ளார்கள். ஆண்டு சந்தா செலுத்தும் உறுப்பினர்களை ஆயுட்கால உறுப்பினர்களாக மாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினர்களுக்காக 10% இட ஒதுக்கீட்டை உடனடியாக தமிழகத்தில் அமுல்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வருக்கு பதிவு கடிதம் அனுப்புவது, மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு 10% இட ஒதுக்கீட்டில் மூலம் பொதுப் பிரிவினர்கள் பயன்பெற செய்ததற்கு நன்றி தெரிவித்து பதிவு கடிதம் அனுப்புவது என தீர்மானிக்கப்பட்டது.

திரு. V. ராஜசேகரன் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

– ஜெ. கோபாலகிருஷ்ணன்,
தலைவர்.

குரோம்பேட்டை:

சங்கத்தின் 16வது ஆண்டு விழா 25.12.2022 அன்று சென்னை அஸ்தினாபுரம் ராஜேந்திர பிரசாத் (R.P. Road) சாலையில் உள்ள ஸ்ரீராம் கணேஷ் மஹாலில் (A/C) நம் வீட்டு விழாவாக வெகு சிறப்பாக நடைபெற்றது.

மகளிர்க்கான கோலப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாலை 6.30 மணி அளவில் திருமதிகள் குத்துவிளக்கு ஏற்ற, செல்வி. S. அக்ஷயா இறைவணக்கத்துடன் விழா துவங்கியது.

விழாவிற்கு முன்னாள் தலைவர் திரு. வை. சதாசிவம் அவர்கள் தலைமையேற்க, ஆலோசகர்கள் திரு. சபா. சிவகுமார், டாக்டர் M. செல்வகணபதி, முன்னாள் தலைவர்கள் திரு. V. ஜெகநாதன், திரு. D. திருஞானசம்பந்தம், திரு. T. முருகேஷ், திரு. S. மனோகர் மற்றும் மாநில கூட்டமைப்பின் சென்னை மண்டல செயலர் திரு. M. பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்க சங்கத் தலைவர் திரு. R.S. அகோரம் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். தொடர்ந்து சங்க ஆண்டு அறிக்கையை செயலர் திரு. J. தீபன் அவர்களும், நிதிநிலை அறிக்கையை பொருளாளர் திரு. V. ஆறுமுகம் அவர்களும் சமர்ப்பித்தார்கள்.

சங்கத்தின் 2023 & 2024 ஆண்டிற்கான புதிய நிர்வாக குழு ஒருமனதாக கீழ்க்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

திரு. S. மனோகர் – தலைவர், திரு. B. தியாராஜன் – செயலாளர், திரு. N. வரதராஜன் – பொருளாளர்

சிறப்பு பேச்சாளர், டாக்டர் S. அசோகன் B.S.M.S. அவர்கள் ஆரோக்கியமாக வாழ ''பத்து நம் சொத்து'' என்ற தலைப்பில் தற்போது மனிதன் அவன் உடலையும் உயிரையும் காக்கும் உன்னத தேவை அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்றும், ஒவ்வொரு மனிதனும் தனது உணவு முறையிலும் உடற்பயிற்சியிலும் உறக்கம் ஓய்வு இவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதை வெகு நேர்த்தியாக தெளிவாக குறிப்பிட்டு பேசி அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்கள்.

விழாவின் போது பார்வதி மருத்துவமனையின் "PRIVILEGE CARD", முதல் கட்டமாக குரோம்பேட்டை, சிட்லபாக்கம் பகுதிகளில் உள்ள நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கபட்டது. மற்ற பகுதியில் உள்ள நமது உறுப்பினர்களுக்கு

இந்த CARD படிப்படியாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

போட்டிகளை திரு. V. சதாசிவம், திரு. T. முருகேஷ், திரு. S. மனோகர் ஆகியோர் வெகு சிறப்பாக நடத்தி கொடுத்தார்கள்.

கோலப்போட்டி, விளையாட்டுப் போட்டி, கலை நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்றவர்கள் / பங்கு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. 2022ஆம் ஆண்டில் 60 வயது & 80 வயது நிறைவு செய்தவர்களுக்கு பயனாடை போர்த்தியும் நினைவு பரிசு வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். 2022ஆம் ஆண்டு கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 75%க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியருக்கு ஊக்க பரிசு வழங்கி உற்சாகப்படுத்தப்பட்டனர்.

விழாவில் நிறைவாக பேசிய முன்னாள் தலைவர் திரு. D. திருஞானசம்பந்தம் அவர்கள், இச்சங்க வளர்ச்சிக்காக சிறப்பாக பணியாற்றிய தலைவர் திரு. R.S. அகோரம், செயலர் திரு. J. தீபன், பொருளாளர் திரு. V. ஆறுமுகம் அவர்களையும் மற்றும் மங்கல சந்திப்பை – புத்தகம் மற்றும் Mobile APP நிறுவி சிறப்பாக நடத்திக் கொடுத்த மங்கல சந்திப்பு அமைப்பாளர் திரு. R.M. சத்தியமூர்த்தி அவர்களையும் பாராட்டி வாழ்த்திப் பேசினார்கள்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவு பரிசு மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான அழகிய மாதாந்திர காலண்டர் வழங்கப்பட்டது. இரவு 8 மணி அளவில் விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் இச்சங்க கௌரவ தலைவர் திரு. சபா. சுந்தரேசன் பிள்ளை அவர்கள் அறுசுவை விருந்து உபசரிப்புடன் விழா இனிதே நிறைவுற்றது.

– J. தீபன், செயலர். 9659632577

பெருங்களத்தூர்

சங்க செயற்குழு கூட்டம் 18–12–2022 அன்று சிவாலி ஹாலில் தலைவர் திரு. C. குழந்தைவேல் அவர்கள் தலைமையில் அனைவரும் தமிழ்த்தாய் வாழ்த்து பாட நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக திரு. மோகன் ராஜ், திரு. G. முத்துகுமாரசாமி, திரு. பரணி, திருமதி. கலைச்செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

24–12–2022 அன்று நடைபெற இருக்கும் நமது சங்கப் பொதுக்குழு மற்றும் நான்காம் ஆண்டு விழாவினை சிறப்பாக நடத்திட விரிவாக விவாதிக்கப்பட்டு, பொறுப்புகள் வழங்கப்பட்டது. செயலாளர் அறிக்கையினையும், பொருளாளர் நிதிநிலை அறிக்கையையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நமது பகுதி K.K. நகர் வாழ் கார்குல சொந்தங்களிடமிருந்து முழுமையாக சந்தா பெற்றுத் தந்த திரு. V. பாலசுப்ரமணியம் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நமது பகுதியில் உறுப்பினர்களாக இணையாத கார்குல சொந்தங்களை ஆண்டு விழாவிற்கு அழைத்து அவர்களையும்உறுப்பினர்களாக இணைக்க அனைத்து, செயற்குழு உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. 8–01–2023 அன்று நடைபெற இருக்கும் சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள நமது சங்கத்தின் சார்பாக செல்பவர்களுக்கு ஏதுவாக வாகனங்கள் ஏற்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

திரு. G. முத்துகுமாரசாமி அவர்கள் நன்றி நவில அனைவரும் தேசிய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– கோ. ராஜகோபாலன்,
செயலாளர்.

புதுச்சேரி :

18–12–2022 அன்று புதுவை தட்சணாமூர்த்தி நகர் சங்க பொருளாளர் திரு. K. இராஜேந்திரன் அவர்கள் இல்லத்தில் தலைவர். திரு. J. ராஜன்பாபு, அவர்கள் தலைமையிலும் துணைச்செயலாளர் திரு. M. கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையில் 15 செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு கூட்டம் நடைபெற்றது. அது சமயம் நீதிமன்ற உத்திரவை ஏற்று மத்திய அரசு பொருளாதாரத்தில் பின் தங்கிய வகுப்பினருக்கு 10% இட ஒதுக்கீடு வழங்கியதை ஆதரித்து நன்றி கூறியும் தமிழக அரசும் அதனை ஏற்று காலத்தோடு நடைமுறைபடுத்த வேண்டும்மென்று கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2023–ஆம் ஆண்டு மாத காலண்டரை செயலாளர், திரு. S. வெங்கடேசன் அவர்கள் கரத்தால் வெளியிட துணைச்செயலாளர் G. பத்மநாபன் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

விரைவில் உறுப்பினர்களின் புதிய முகவரி கையேட்டை வெளியிடவும், சங்கத்திற்கு என தனி வங்கி கணக்கு துவங்கவும்

புதுச்சேரி சங்க பொதுக்குழு கூட்டத்தை 2023 ஏப்ரல் மாதத்திற்குள் கூட்ட ஆவண செய்யவும்

சென்னையில் 08–01–2023 அன்று நடைபெற உள்ள நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க உறுப்பினர்கள் அழைத்துச்செல்வது எனவும்

மகளிரணியை அழைத்து விளக்கு பூஜை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் தலைவர். திரு. J. ராஜன்பாபு, அவர்களது நன்றி உரையில் சங்க செயற்குழு உறுப்பினர்களுக்கும் 2023–ஆம் ஆண்டு காலண்டர் அச்சடித்து வழங்கிய இளைஞர் அணி செயற்குழு உறுப்பினர். R. பாலமுருகன் அவர்களுக்கும் முகமலர்ச்சியுடன் செயற்குழு உறுப்பினர்களை வரவேற்று தேனீர் விருந்து அளித்த சரண்தேவி பாலமுருகன் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கிறோம்.

J. ராஜன்பாபு,
தலைவர்.

கடலூர் :

சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் 07–12–2022 அன்று சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் தலைமையேற்றார். மண்டல செயலாளர் S. சிவகுருநாதன் முன்னிலை வகித்தார். கடலூர் மண்டல மாநிலத் துணைத்தலைவர், வழக்கறிஞர் சிவராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பொருளாதாரத்தில் நிலவடைந்த முற்பட்ட பிரிவினர்க்கான 10% இட ஒதுக்கீட்டை உடனடியாக செயல்படுத்திட தமிழக அரசையும், மாண்புமிகு முதலமைச்சரையும் கேட்டுக்கொள்ளவும்

எதிர் வரும் ஆங்கிலப்புத்தாண்டு 01–01–2023 அன்று சங்கக் கட்டிடத்தில் தமிழ்புத்தாண்டையும், ஆங்கிலப் புத்தாண்டையும் சிறப்பாகக் கொண்டாடவும்

சங்கக் கட்டிடத்திற்கு வண்ணப்பூச்சு செய்வதெனவும், அதை ஜனவரி 2023 க்குப் பிறகு செய்திடவும்

சங்கக் கட்டிடத்திலுள்ள தளவாட சாமான்களை இருப்புப் பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரி பார்த்திட மகளிர், ஆடவர் குழுவை அமைத்து செயல்படுத்திட தீர்மானிக்கப்பட்டது.

விக்கிரமங்கலம் :

மகளிர் அணி கூட்டம். 11–12–2022 அன்று கௌரவத்தலைவர் பரிமலா பாலசுப்பிரமணியன் இல்லத்தில் நடைபெற்றது. 37 உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவராலும் சிவபுராணம் பாடப்பட்டது. குத்துவிளக்கு ஏற்றி இரா. இளஞ்சியம் தலைமையில் – ரெ. சுதா, ரா. உமா, தி. நித்யா முன்னிலையில் 30–40 வயதுக்கு மேல் பெண்களுக்கு மூட்டுவலி வருவது ஏன் ? விளக்கம் அளித்து பைசா செலவில்லாமல் இயற்கை, பாரம்பரிய, கலாச்சார உணவுகள் மூலம் குணம் பெறலாம் என்ற விளக்கம் அளிக்கப்பட்டது.

கவிமணி அவர்கள் வாக்கிற்கு இணங்க கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை இல்லை உன் வாழ்வில் என்ற வைர வரிக்கு ஏற்ப தொழில் தொடங்கவும், 10% உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு நன்றியும், அனவைருக்கும் பொங்கல் வாழ்த்தும் தெரிவித்துக் கொண்டனர்.

விக்கிரமங்கலம் இளைஞர் அணியினர் கலந்துகொண்டு பொங்கல் அன்று கூட்டம்

திட்டக்குடி வட்டார கார்காத்தார் சங்கம்.

வழங்கிய கல்வி உதவித்தொகை பெயர் பட்டியல் 2022–23.

வ.எண்	பெயர்	முகவரி	படிப்பு	வழங்கப்பட்ட தொகை (ரூ)
1	அ. மகாலெட்சுமி	த/பெ. அசோகன் – நாகமங்கலம்	BBA IInd year	3000
2	ஞா. அபிராமி	த/பெ. ஞானவேல் – சாத்தநத்தம்	M.Com., Ist year	3000
3	மு. ரேணுகாதேவி	த/பெ. முருகன் – சாத்துக்குடல்	M.A., IInd year	3000
4	வை. சிவரஞ்சனி	த/பெ. வைத்திலிங்கம் – சாத்துக்குடல்	B.E., IInd year	3000
5	க. சரோஜினி	த/பெ. கணபதி – சாத்துக்குடல்	B.Sc., IIIrd year	3000
			கூடுதல்	15000

ரெ. இராதாகிருஷ்ணன்
செயலாளர்

வைத்துக்கொள்வதாக கூட்டத்தை ஒத்தி வைத்து வாட்ஸ் அப் குரூப் உருவாக்கப்பட்டது.

அனைவருக்கும் தேனீர், சிறுதானிய உணவு உபசரிப்பு, கீழநத்தம் ரா. கலா. கண்ணகி (எ) மு. ஜெயலட்சுமி வழங்கினர் கூட்டம் மாலை 5 மணிக்கு முடிவுற்றது. வான்முகில் வழாது பெய்க பாடலுடன்.

ரா. சத்தியமூர்த்தி,
செயலாளர்.

காட்டுமன்னார்கோயில்

15–12–2022 அன்று சங்கத்தின் சிறப்பு செயற்குழுக்கூட்டம், தலைவர் திரு. R. பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. 07–11–2022 அன்று உச்சநீதிமன்றத் தீர்ப்பினைச் சுட்டிகாட்டி, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் முற்போக்கு சாதியினரில் (Forward Caste) பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான 10% இட ஒதுக்கீட்டை தமிழ்நாடு அரசு உடனடியாக அமுல்படுத்தவேண்டும் என்று அரசைக்கேட்டுக் கொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2023–ஆம் ஆண்டு நாட்காட்டி, உறுப்பினர்கள் குடும்பத்திற்கு வழங்கிட, செயற்குழு உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.

R. ஞானம்
செயலர்

சிதம்பரம் மகளிரணி

சிதம்பரம் மகளிரணி 21வது ஆண்டு விழா சிதம்பரத்தில் தனியார் திருமணமண்டபத்தில் நடைபெற்றது. கடலூர் மண்டல செயலாளரும், சிதம்பரம் பகுதி மகளிரணி தலைவருமான மகேஸ்வரி சண்முகசுந்தரம் தலைமை வகித்தார். பொருளாளர் சுமதி சிவகுமார் வரவேற்புரை வழங்கினார். மகளிரணி ஆலோசகர் பார்வதி சிவக்குமார் முன்னிலை வகித்துப் பேசினார். கடலூர் மண்டலத் தலைவரும், சிதம்பரம் மகளிரணி அமைப்பாளருமான சாந்தி சிவக்குமார் மகளிரணி செயல்பாடுகள் குறித்து விளக்கவுரை ஆற்றினார். செயலாளர் சாந்தி முத்துக்குமரன் மகளிரணியின் 20வது ஆண்டறிக்கையை வாசித்தார். சென்னை முன்னாள் ராணுவ வீரர் ஜி. பாலசுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார். மாநிலத் துணைத்தலைவர் வா. சிவராஜன், குமராட்சி ஒன்றியத் தலைவர் ஏ.ஜி. சிவராமன் வாழ்த்துரை வழங்கினர். தொழிலதிபர் எஸ். சண்முகசுந்தரம், CREW அறக்கட்டளை, பூவிழந்தநல்லூர் ஆர். பத்மநாபன், பொறியாளர் சி. கார்த்திகேயன், ஏ.வி.சி. கல்லூரி ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள் கோமதி ரத்தினகுமார், எஸ். மாலதி ஆகியோருக்கு பாராட்டு விழா நடைபெற்றது. வேளாண் பட்டதாரி மு. பாலக்குமரன் நவீன விவசாயம், மாடித் தோட்டம் அமைப்பது குறித்துப் பேசினார். கார்குல குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டது. மீனா ரமேஷ்சங்கர் நன்றி கூறினார். ஆசிரியை காயத்ரி முத்துக்குமரன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். அனைவருக்கும் மதிய விருந்து வழங்கப்பட்டது.

– சாந்தி முத்துக்குமரன், செயலாளர்.
9442910951

சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 3–12–2022 அன்று நமது சங்க கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்க்கு தலைவர் திரு. கல். சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமை ஏற்றார்கள், திரு. குணஅமுதன் பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள்.

புதிய உறுப்பினர்கள் இருவர் சேர்க்கப்பட்டது.

சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழாவிற்கு நமது சங்கத்தின் சார்பாக உறுப்பினர்கள் செல்வது என்றும்

அனைத்து உறுப்பினர்களையும் சந்தித்து நாட்காட்டி வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பொருளாளர் திரு. C. அகோரம் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

– G. அமுதன், செயலாளர்.

மயிலாடுதுறை

செயற்குழு கூட்டம் 04–12–2022 அன்று சங்க கட்டிடத்தில் கூடியது. கூட்டத்திற்கு சங்கத்தலைவர் திரு. S. அன்பழகன் அவர்கள் தலைமையேற்க கூட்டம் இனிதே தொடங்கியது. மகளிர் அணியினர் இறைவாழ்த்துப் பாட, சங்கத்தின் இணை செயலாளர் திரு. A. இராஜேந்திரன் வரவேற்புரை நல்கினார்.

செயலாளர் திரு. M.S. முருகேசன் நவம்பர் மாதத்திற்கான அறிக்கை வாசிக்க தொடர்ந்து சங்கப் பொருளாளர் திரு. R. சந்திரசேகரன் நவம்பர் மாதாத்திற்கான வரவு செலவு கணக்கை தாக்கல் செய்து அதற்கு செயற்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.

மேனாள் சங்கத் தலைவர் திரு. M. சத்யபால் மற்றும் திரு. R. ஆனந்தன் அவர்கள் சங்க நாட்காட்டி வழங்குவதைக் குறித்து ஆலோசனை வழங்கினார்கள்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் :

சங்கத்தின் சார்பாக வழங்கப்படும் காலண்டர்–ஐ Dec 31–க்குள் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கவும்

வரும் காலங்களில் சங்கத்திற்கு சொந்தமான ''சமுதாயகூடம்'' உறுப்பினர்கள் தங்கள் இல்ல மங்கல நிகழ்ச்சிக்கு பதிவு செய்யும் போது குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் உறுப்பினர் சந்தா தொடர்ச்சியாக செலுத்தி இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவருக்கு சமுதாயக் கூடத்தில் மங்கல நிகழ்வை நடத்த அனுமதி மறுக்கப்படும் எனவும்

மேலும் வெளியூரில் இருந்து சமுதாயக் கூடத்தை பதிவு செய்ய வருபவர் நம் பகுதியில் உள்ள சங்கத்தில் உறுப்பினர் ஆக இருக்க வேண்டும். (அல்லது) மயிலாடுதுறை நகர சங்கத்தின் சந்தா செலுத்திய உறுப்பினர், சிபாரிசு செய்தால் மட்டுமே அவருக்கு அனுமதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாக இளைஞரணி பொறுப்பாளர் திரு. G.V. கவாஸ்கர் அவர்கள் நன்றியுரை நல்க சென்ற மாதத்தில் இறைவனடி சேர்ந்த நம் கார்குல உறவுகளுக்கு இரங்கல் தெரிவித்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டு கூட்டம் நிறைவடைந்தது.

M.S. முருகேசன்,
செயலாளர்.

மகளிர் அணி - மயிலாடுதுறை

15–12–2022 அன்று தலைவி பில்டெக் அருள்மொழி அவர்கள் தலைமை வகிக்க மகளிர் அணி கலந்தாய்வு கூட்டம் கௌரவத் தலைவி கோமதி அவர்கள் வீட்டில் நடைபெற்றது. திருமதிகள் இந்துமதி, சசிகலா, விஜயலெட்சுமி இறைவணக்கம் பாடினார்கள். குடியரசு தினம், தை மாதம் வினாயகர் பூசை, மார்ச் மாதம் மகளிர் தினம் குறித்து விபரமாக பேசப்பட்டது. மயிலாடுதுறையில் நடக்கவிருக்கும் ''மகளிர் ஒற்றுமை'' நிகழ்ச்சி தொடர்பாக எல்லா ஊர் குழந்தைகளும், மகளிர்களுக்கும் போட்டி இணையம் வழியாக நடத்தப்பட்டு வருகிறது. செயலாளர் அறிக்கை காயத்ரி வாசித்தார். மகிழ்வோடு வளர்மதி அவர்கள் நன்றி கூற ஆலோசனை கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பில்டெக் அருள்மொழி. 8883468333

செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–12–2022 அன்று சங்க சிறப்புத் தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை இல்லத்தில் அவர்களே இறைவணக்கம் பாடிட சங்கத்தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. திரு. சபா. ஆனந்தன் பிள்ளை வரவேற்பு உரை ஆற்றிடவும், சென்ற மாத அறிக்கை சங்க செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் வாசிக்கவும், வரவு–செலவு அறிக்கை சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது.

சங்க செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் அவர்கள் மகன் நெ. சரவணன்–அபிநயா தம்பதியினருக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது பற்றி இனிமையான செய்தியை கூட்டத்தில் தெரிவித்து அதனை முன்னிட்டு அவர்களது செலவில் பிஸ்கட், காரம், காபி வழங்கப்பெற்றது. காளகஸ்தினாதபுரத்தில் வசிக்கும் சங்க உறுப்பினர் திரு. S. மதியழகன் நன்றி கூறிட கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன்,
செயலாளர்,
9443051641

பரசலூர்

சங்க கூட்டம் 04–12–2022 அன்று தலைவர் திரு. க. கோவிந்தராஜன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. 18–12–2022 ஞாயிற்றுக்கிழமை பரசலூர் பிரதான சாலை தினமலர் நிருபர் திரு. R.V. பன்னீர்செல்வம் இல்லத்தில் ஆண்டு விழா கொண்டாடுவது என முடிவெடுக்கப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய முற்பட்டோர் இனத்திற்கு 10% இட ஒதுக்கீடு செய்த பாரதப்பிரதமர் திருமிகு. நரேந்திரமோடி அவர்களுக்கும், தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கும் நன்றி அறிவிப்பதோடு, 10% இட ஒதுக்கீடு வழங்காத தமிழக அரசையும் இச்சங்கம் வன்மையாக கண்டித்து தீர்மான நகலை மாண்புமிகு பாரத பிரதமருக்கும், தமிழக முதல்வருக்கும் அனுப்புவது என்று முடிவெடுக்கப்பட்டது.

திரு. V. சிவக்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

ஆண்டு விழா 18–12–2022 அன்று பரசலூர் பிரதான சாலை திருமதி. லட்சுமி பன்னீர்செல்வம்

இல்லத்தில் சங்கக் கொடியை பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் முன்னிலையில் திருமதி. லெட்சுமி பன்னீர்செல்வம் அவர்கள் ஏற்றினார்கள்.

தலைவர் க. கோவிந்தராஜன் அவர்கள் தலைமையில், சிறப்புத்தலைவர் திரு. க. சண்முகம் பிள்ளை இறைவணக்கம் பாட வரவேற்புரையை துணை செயலர் திரு. A. இராமலிங்கம் பிள்ளை நிகழ்த்த, செயலர் வீ. கண்ணன் ஆண்டு அறிக்கையையும் வாசிக்க அவையின் ஒப்புதல் பெறப்பட்டது.

தருமபுரம்பேராசிரியைதிருமதி.சாந்திஅகோரம் அவர்கள் திருவாசகத்தைப் பற்றியும், ஆன்மீகம் பூலோகத்தை சிவலோகமாக மாற்றியது என்றும் ஆலயங்களின் அருமை பெருமைகளைப் பற்றியும், பக்தி மலர் வாடாது, சாதாரணப் பூ வாடும், பக்திப் பூ எப்பொழுதும் வாடாது. சிவபுராணம், திருவாசகம் போன்றவற்றை தினந்தோறும் பாடவேண்டும் என்றார்.

அலைபேசியால் பெரிதும் ஏற்படுவது நன்மையா தீமையா என்ற தலைப்பில் நன்மையே என்ற தலைப்பில் திருமதி. செந்தமிழ்ச்செல்வி இராமலிங்கம் பிள்ளை, திருமதி. லதா மதிவாணன் பிள்ளையும், தீமையே? என்ற தலைப்பில் திருமதி. ஜெயசுதா அமிர்தகணேசன் பிள்ளையும், திருமதி. சபீதா சிவக்குமார் பிள்ளையும் பேசினார்கள். நடுவர் பேராசிரியர் திரு. A. விக்னேஷ்வரன் பிள்ளை அவர்கள் தனது தீர்ப்பில் அலைபேசியால் பெரிதும் நன்மையே ஏற்படுகிறது என்று கூறினார்.

மகளிர் தின விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு சங்க உறுப்பினர்கள் பரிசுகள் வழங்கினார்கள். காலை தேநீரும், மதியம் அறுசுவை உணவும் வழங்கப்பட்டது. ஆண்டு விழாவிற்கு மொத்தம் 110 உறுப்பினர்கள் வருகை புரிந்தது பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். நிகழ்ச்சியை பேராசிரியர் ஏ. சிவக்குமார் பிள்ளை அவர்கள் தொகுத்து வழங்கினார். திரு. R. அமிர்தகணேசன் பிள்ளை அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன், செயலர்.

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு கார்காத்தார் சங்க மாதாந்திர கூட்டம் 05–11–2022 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் தொடங்கியது

சங்க உறுப்பினர்களை வரவேற்று பேசிய தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் சங்க உறுப்பினர்களின் ஒப்புதலோடு, கீழ்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றினர்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட வகுப்பினருக்கும் 10% இட ஒதுக்கீடு அளித்த நம் பாரத பிரதமர் திரு. மோடி அவர்களுக்கு இச்சங்கம் சார்பில் மனமார்ந்தநன்றியையும், பாராட்டுதலையும் பதிவு செய்யப்பட்டது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட வகுப்பினருக்கு 10% இட ஒதுக்கீடு மத்திய அரசால் அளிக்கப்பட்டதைஎதிர்த்துஉச்சநீதிமன்றத்தில்சீராய்வு மனுதாக்கல் செய்யும் தமிழக அரசுக்கு இச்சங்கம் சார்பில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

சென்ற 28–10–2022 அன்று மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ வடுவகிர்கன்னி சமேத திருவலம்புரசாமி கோவில் கார்த்திகை சோமவாரம் அபிஷேகம் மற்றும் அன்னதானம் இச்சங்கம் சார்பில் சிறப்பாக செய்யப்பட்டமைக்கு சங்க உறுப்பினர்களுக்கு தலைவர் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

வழக்கம் போல் வருகின்ற 2023 க்கு தினசரி காலண்டர் வழங்க ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. சங்க உறுப்பினர்களுக்கு தலைவர் திரு. B. இலட்சுமணன் நன்றி தெரிவிக்கப்பட்டதோடு சங்க கூட்டம் இனிதே முடிவுற்றது.

- B. இலட்சுமணன்

தலைவர்.

Cell: 9443783743

மணிக்கிராமம்

சங்க கூட்டம் 05–12–22–ம் அன்று திருமேனி அழகர் சிவன் கோவிலில் தலைவர் திரு. M. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. செயலர் இறைவணக்கம் பாட தலைவர் சிவபுராணம் வாசித்தார். செயலர் திரு. G. அன்பழகன் சென்ற மாத அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. T. கபிலன் வரவு செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது.

சிவன் கோவிலில் குருமூர்த்தி சுவாமி அபிஷேகமும் ஆராதனையும் உறுப்பினர் திரு, S. தருமதுரை திரு. M. முரளி, திரு. R. வெங்கட்ராமன் ஆகியோர் மிகவும் சிறப்பாக செய்து இருந்தார்கள். அவர்களுக்கு சங்கத்தின் நன்றி தெரிவிக்கப்பட்டது. சிவனடியார் சிவன்கோவிலை சுற்றி உழவாரப் பணி சிறப்பாக செய்து இருந்தார்கள். அவர்களுக்கும்

பாராட்டும் நன்றி கூறப்பட்டது. மகளிர் அணியினர் அதிகம் பேர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கார்த்திகை மாதத்தில் ஒவ்வொரு திங்கள்கிழமை கோவிலில் சோமவாரம் அபிஷேகமும் ஆராதனையும் நம்குல உறுப்பினர்கள் செய்து இருந்தார்கள் தலைவர் எல்லோருக்கும் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன்,
செயலர்.

இளந்தோப்பு :

சங்க கூட்டம் 7–12–2022 அன்று சிவன் கோவில் வளாகத்தில் திரு. S.S. ராஜேந்திரன் தலைவர் வரவேற்புரை கூற, செயலாளர் திரு. V. ராஜசேகரன் தலைமையில் நடைபெற்றது.

மாநில சங்க அறக்கட்டளைக்கு சங்க உறுப்பினர்களிடம் பெறப்பட்ட தொகை ரூ. 2460/– மண்டலசெயலாளரிடம் வழங்கப்பட்டது. B. நடேசன்– அமுதா மணிவிழாவிற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. திரு. G. பாலு, B. ஹேமலதா புதல்வர் செல்வன் B. சரவணன் திருமண விழாவிற்கு வருகை தந்து வாழ்த்துரை வழங்கிய மாநில தலைவர் திரு. K.K.R. சுரேஷ் அவர்களுக்கு அவரது துணைவியாருக்கும் நன்றியையும் பாராட்டுதல்களும் தெரிவிக்கப்பட்டது.

மண்டல செயலாளர் திரு. S. சீனுவாசன் அவர்கள் நன்றியுரை நவில கூட்டம் இனிதே நடைபெற்றது.

வெ. இராஜசேகரன்,
செயலாளர்.
9444610907

நெடுங்காடு :

சங்க கூட்டம் காரைக்கால் திரு. G. சாய்முரளி அவர்கள் இல்லத்தில் 11–12–2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் 20 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். திரு. K.S. கணபதி சுப்ரமணியன் அவர்கள் இறைவணக்கம் பாடினார்.

மத்திய அரசு கொண்டு வந்த 10% EWS இட ஒதுக்கீட்டை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ள நிலையில் மாநில சங்கத்தால் அனுப்பப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவான தீர்மானத்தினை கையெழுத்திட்டு தமிழக முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது.10% இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக மாநில சங்கம் கொண்டு வரும் அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு அளிக்க முடிவு செய்யப்பட்டது. பரிசுக் குலுக்கலில் திரு. K.S. கணபதி சுப்ரமணியன், திரு. S. கோபு, திரு. R. முரளி ஆகியோர் பரிசு பெற்றனர்.

குத்தாலம் :

சங்க 6–ம் ஆண்டு துவக்க விழா கூட்டம் அருணகிரிநாதர் தெரு, M.R.S. இல்லத்தில் இராமச்சந்திரன் நினைவரங்கில் தலைவர் R. சுவாமிநாதன் தலைமையில்நடைப்பெற்றது.P.நாகராஜ், V. சடையப்பன், G. கணபதி முன்னிலை வகித்தனர். செயலாளர் M. கண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். பொருளாளர் M.R. பலராமன் வரவு–செலவு வாசித்தார். J. வேதநாயகம், A. நடராஜன், S. மங்கையர்கரசி, S. கிருஷ்ணமூர்த்தி T. பார்வதம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். 26–11–2022 செயற்குழு கூட்டத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேரிய வகுப்பினருக்கு 10% இட ஒதுக்கீடு தீர்மானம் நிறைவேற்றியதை இக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. 08–01–2023–ல் மகளிரணி கார்குல கூட்டு சமத்துவ பொங்கல் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக இக்கூட்டத்தில் பூம்புகார் கலைக்கல்லூரி இணை பேராசிரியர் மற்றும் வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் E.K. சிவசக்திவேல் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். பேராசிரியர் G. மணிகண்டன் அவர்கள் நன்றியுரை வழங்க கூட்டம் சிற்றுண்டியுடன் இனிதே நிறைவடைந்தது. இக்கூட்டத்தில் மண்டல செயலாளர் உயர்திரு. சீனிவாசன் பிள்ளை அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்.

இரா. சுவாமிநாதன்,
தலைவர்.

குடவாசல்

சங்க கூட்டம் 10% இடஒதுக்கீடு குறித்து அவசர பொதுக்குழு கூட்டம் 24–11–2022 வியாழன் அன்று குடவாசல் ஓகை சண்முகம் பிள்ளை திருமண மண்டபத்தில் சங்க தலைவர் திரு. எஸ். முத்து பிள்ளை தலைமையில் மாநில துணை தலைவர் திரு. எஸ். குஞ்சிதபாதம் பிள்ளை, திரு. என். சங்கர் பிள்ளை முன்னிலையில் நடைப்பெற்றது.

அனைவரையும் துணைதலைவர் திரு. எஸ். தியாகராஜன் பிள்ளை வரவேற்றார்கள். பொருளாளர் திரு. கே. சுவாமிநாதன் நிதிநிலை அறிக்கையினை அறிவித்தார்கள். சங்க செயலாளர் திரு. ஜி. ராம்குமார்

சங்க செயல்பாடு குறித்து விரிவாக உரையாற்றினார் சென்ற ஆண்டு கல்வி உதவிதொகை 4–நபர்களுக்கு பெறப்பட்டது என்றும், இந்த ஆண்டு 5–நபருக்கு கல்வி உதவிதொகை வேண்டி விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. பேரூராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற திரு. எஸ். முத்துப் பிள்ளை ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டப்பட்டார்கள். துணைதலைவர் திரு.எஸ.தியாகராஜன்பிள்ளைபேரன் ராக்கேஷ் மருத்துவ படிப்பு கிடைத்ததற்கு பாராட்டும் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் குடவாசல் திரு. எஸ். கணபதி பிள்ளை, ஓகை திரு. ஜி. மகாலிங்கம் பிள்ளை ஆகியோர் சதாபிஷேகம், துறையூர் திரு. எஸ். செல்வம் பிள்ளை சஷ்டியப்த பூர்த்தி விழா ஆகியவற்றுக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. 2023–ம் ஆண்டு தினசரி காலண்டர் அனைவருக்கும் வழங்கிட துணையாக வருகிறோம் என கூறிய குடவாசல் எஸ். சுரேஷ், வி. அருள் துறையூர் எஸ். மோகன் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. குடவாசல் சங்கத்தில் இணையாமல் உள்ள உறுப்பினர் அனைவரையும் இணைத்து செயல்படுவதென முடிவு செய்யப்பட்டது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர் வகுப்பினர்களுக்கான மத்திய அரசின் 10% இட ஒதுக்கீட்டினை வழங்கிய நீதி அரசர்களுக்கு நன்றியும், அந்த இட ஒதுக்கீட்டினை செயல்படுத்தமாட்டோம் என கூறும் மாநில அரசுக்கு கண்டனத்தையும் தெரிவித்தும் கொள்கிறோம் இதில் மாநில சங்கம் எடுக்கும் முடிவுக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இறுதியாக மறைந்த சங்க உறுப்பினர்கள் இலையூர் ஆர். பத்மநாதன் பிள்ளை, ஆர். ரங்கராஜன் பிள்ளை, குடவாசல் ஜி. கண்ணன் பிள்ளை, ஆச்சமங்கலம் பி. சங்கரன் பிள்ளை ஆகியோருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

- G. ராம்குமார்,
செயலாளர்.

கும்பகோணம் :

16–12–2022 அன்று பரட்டை ஸ்ரீராம் அவர்கள் இல்லத்தில் பொங்கல் விழா ஆலோசனை கூட்டம் குழு தலைவர் M. சாமிநாதன் @ இளங்கோ அவர்கள் தலைமையில் செயலாளர் S. விஜயகுமார் து. செயலாளர் A.S. பழனி, M.R.K. பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் குழுவினர் M. சந்திரமோகன், T.S. சூரியநாராயணன், S. குணசீலன், V. ஸ்ரீராம், கலந்துகொண்டார்கள்.

31–12–2022 அன்று நடைபெறும் பொங்கல் விழா குறித்து ஆலோசனை நடத்தவும்

கும்பகோணம் சங்க செயலாளரும் முன்னாள் மாநில சங்க பொருளாளர் திரு. தி.மா. வைத்தியநாதன் BABL அவர்கள் ஐம்பது ஆண்டுக்கு மேல் சட்ட சேவையை பாராட்டி கவுரவிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

தஞ்சை :

7–12–2022 அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது. பொருளாதாரத்தில் பின் தங்கியோருக்கான முன்னேறிய வகுப்பினருக்கு 10% இட ஒதுக்கீடு வழங்கிய மத்திய அரசுக்கும் உச்சநீதிமன்றத்திற்கும் நன்றியினை தெரிவித்தும்

பொருளாதாரத்தில் பின் தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கான 10% இட ஒதுக்கீட்டை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்த வேண்டி கேட்டுக் கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. G. கைலாசம் கூட்டுறவுத்துறை (ஓய்வு) அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி :

கார்காத்தார் சங்கம், திருநெல்வேலி 2022–2025 க்கான நிர்வாகிகள் தேர்தல் மற்றும் பொதுக்குழு கூட்டம் கார்காத்தார் சங்க கட்டிடம், வெங்கடேசன் பிள்ளை அரங்கத்தில் 18–12–2022 அன்று திரு. செல்லையா பிள்ளை, கௌரவ தலைவர் அவர்கள் தலைமையில், திரு. சுப்பிரமணியன் என்.ஜி.ஒ. காலனி சங்க தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

திரு. செல்லையா பிள்ளை அவர்கள் தேர்தல் அதிகாரியாக இருந்து கீழ்கண்ட நிர்வாகிகள் போட்டியின்றி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டதாக அறிவித்தார்கள்.

தலைவர் – C. சண்முகசுந்தரம், செயலர்– S. சங்கரபாகம், பொருளாளர்– A. திருஞானசம்பந்தன், துணைத்தலைவர்கள் – P. சுப்பிரமணியன், C. முத்துகிருஷ்ணன் பிள்ளை, A. சுப்பிரமணியன், இணைசெயலாளர்கள் – S. வெங்கட்ராமன், C. சங்கரநாராயணன், S.S. மாரியப்பன், S.K. கணபதியா பிள்ளை, செயற்குழு உறுப்பினர்கள் – A. நெல்லையப்பன், S. கணபதி, பொன். சிதம்பரம், K.M. காந்திமதிநாதன், K. பாபநாசம் பிள்ளை, K. கண்ணன்

(எ) சண்முகம், P. கோபால், S. வேலாயுதம் பிள்ளை, M.K. கனகசபாபதி (பழநி), C. அரசு சீனிவாசன், R.M. பொன்னுசாமி, S. வைத்தியநாத பிள்ளை, இராஜேஸ்வரன், S. கோமதிநாயகம், S. அரசப்பன், C. ராமசுப்பிரமணியன், A.C. ராதாகிருஷ்ணன்.

C. சண்முகசுந்தரம்.
தலைவர்

கோவை :

சங்க கூட்டம் 27–11–22 அன்று திரு. இளங்கோ அவர்கள் வீட்டில் திருமதி. ஞானகுமாரி மற்றும் செல்வி கலைஸ்ரீ வள்ளிநாயகம் அவர்கள் இறைவணக்கத்துடன் துவங்கப்பட்டது. திரு. அரியநாயகம் அவர்கள் வரவேற்பு உரை ஆற்றினார்கள். மூத்த உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது. 10% ரிசர்வேஷன் சட்டம் இயற்றியமைக்கு பிரதமர் மோடி அவர்களுக்கு நன்றியும் அதை செயல்படுத்தும்படி தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாதாந்திர கூட்டம் மகளிர் தினமாக அறிவிக்கப்பட்டு மகளிர் நாள் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. திரு. சங்கரன் அவர்கள் (சன் டைம்ஸ்) தங்கள் வீட்டில் நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்தார்கள். திரு. இளங்கோவன் அவர்கள் அனைவருக்கும் மதிய உணவு தந்து விருந்தோம்பல் செய்தார்கள். திரு. வள்ளிநாயகம் அவர்கள் நன்றி உரை கூறினார்கள்.

ஓசூர்:

சங்க ஆண்டுவிழா மற்றும் குடும்ப விழா 25.12.2022 ஞாயிறன்று ஓசூரில் சிறப்பாக நடைபெற்றது.

திரு. S. கனகசபாபதி பிள்ளை அவர்கள் விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள். சிறுவர், சிறுமியர்களுக்கு பலவிதமான போட்டிகளும், மகளிர்களுக்கு கோலப்போட்டி, Sweet போட்டி, அதிர்ஷ்ட குலுக்கல் போட்டிகளும் நடைபெற்றது. ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு தனித்தனியாக கயிறு இழுத்தல் போட்டிகளும் நடைபெற்றது. கலந்துகொண்ட அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

மதிய விருந்துக்குப் பின் செல்வி. நிகிதா, செல்வி.கோபிஷாவின் பரதநாட்டியத்துடன் விழா துவங்கியது. செல்வி. ரம்யா வரவேற்புரை ஆற்றினார். சங்க தலைவர் திரு. S. பிரகாஷ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. G. சுந்தரபாண்டியன், திரு. S. ராமலிங்கம், திரு. M. சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். தலைவர் தனது உரையில் ஓசூர் சங்கம் கட்டிக்கொண்டு இருக்கும் கட்டிடத்தை பற்றி விவரித்தார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக மாநில தலைவர் திரு. Dr. KKR. சுரேஷ் என்கிற ராஜசுந்தரம்பிள்ளை அவர்களும், மாநில அமைப்பு செயலாளர் திரு. கைலை. ஷண்முகம் பிள்ளை அவர்களும் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினர்கள் இருவரும் தனது உரையில் கார்குல பாரம்பரியத்தைப் பற்றியும், வரும் காலங்களில் விவசாயம் முக்கியத்துவம் பெறுமாதலால் கார்குல மக்கள் தங்கள் நிலங்களை விற்காமல் இருக்கும்படியும் கேட்டுக்கொண்டார்கள். மாநில சங்கம் கார்குல இளைஞர்களுக்கும், மகளிருக்கும் எவ்விதத்தில் உதவி புரிந்து வருகிறது என்பதை விவரித்தார்கள்.

அடுத்து சங்க பொருளாளர் திரு. M. மனோகர் அவர்கள் 2021–22ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு அறிக்கையை சமர்ப்பித்தார்கள்.

சங்க செயலாளர் திரு. I. சிதம்பரம் அவர்கள் தனது நன்றியுரையில் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த சிறப்பு விருந்தினர்களுக்கும், ஓசூர் சங்க கார்குல சொந்தங்களுக்கும், விழா சிறப்பாக நடைபெற உதவிய விழா குழுவினர்களுக்கும் மற்றும் நன்கொடை கொடுத்து உதவிய நல் உள்ளங்களுக்கும் நன்றி கூறினார்கள். நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

- M. மனோகர், ஓசூர்

வருந்துகிறோம்

கன்னியாகுடி திரு. S. ராஜமுருகன் அவர்கள் தகப்பனார் திரு. தி. செல்வநாயகம் பிள்ளை (ஆசிரியர் ஓய்வு) அவர்கள் 26–11–22 அன்று இயற்கை எய்தினார்கள். திருக்கருகாவூர் திரு. V. குமார் தனலெட்சுமி ரைஸ் மில் உரிமையாளர் அவர்களின் தகப்பனார் திரு. K. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் 29–11–22 அன்று இயற்கை எய்தினார்கள்.

கன்னியாகுடி திரு. P. நடராஜன் பிள்ளை அவர்களின் தாயார் திருமதி. தையல்நாயகி அம்மாள் அவர்கள் 10–12–22 அன்று இயற்கை எய்தினார்கள் மறைந்த கார்குல சொந்தங்களுக்கு சீர்காழி சங்கம் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக்கொள்கிறது.

20–ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
06.03.1955

மறைவு :
18.01.2003

கோ. மாணிக்கம் அவர்கள்

செயங்கொண்டம்

கண்ணீரால் கரைய வில்லை உங்கள் மறைவு
காலத்தால் அழிவதில்லை உங்கள் நினைவு

பூங்கோதை (சிவகாமசுந்தரி)

கோவி. சண்முகம், NPKRR .CSM பணி நிறைவு, கரும்புத்துறை – மயிலாடுதுறை
மேனாள் பொருளாளர் – நகர கார்காத்தார் வேளாளர் சங்கம் மயிலாடுதுறை


தெய்வத்திரு. **கோ. இராஜேந்திரன்,** முன்னாள் நகர் மன்ற உறுப்பினர், செயங்கொண்டம்

கோ. சேகர், ஒப்பந்தகாரர், செயங்கொண்டம்

மா. கண்ணன், மா. கணேசன், செயங்கொண்டம்

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்ந்தது
1954



உதிர்ந்தது
02.01.2018

மெட்ராஸ் என்கிற R. மூர்த்தி பிள்ளை

உரிமையாளர் மெட்ராஸ் ஆட்டோ ஒர்க்ஸ்
கச்சேரி ரோடு, மயிலாடுதுறை

மீளாத்துயில் கொண்டு எம்மை, ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே ?
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்கிறோம்.

என்றும் தங்கள் நினைவில் வாழும்

மனைவி : **M. பிரேமா**

மகன்கள் :

M. திருமலைராஜன், திருமலை ஆட்டோ ஒர்க்ஸ்

M. ஜோதிராஜன்
நிறுவனர் ஜோதி பவுண்டேஷன்
மெட்ராஸ் ஆட்டோ ஒர்க்ஸ்

மருமகள்கள் :

சுகுணாவதி

கிருபாலெட்சுமி

தினசரி காலை உணவு அன்னதானம் வழங்கி வரும் தொண்டு நிறுவனம்

ஜோதி பவுண்டேசன், கச்சேரி ரோடு, மயிலாடுதுறை. செல் : 97880 42324

பேத்திகள் : **பிரியதர்ஷினி, காவியா, சுபஸ்ரீ**

முகவரி : 12/6, ஆராய தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை.

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்



மண்ணுலகிற்கு
11-11-1942

விண்ணுலகிற்கு
08-01-2020

நாகை மாவட்டம் மயிலாடுதுறை தாலுக்கா உளுந்துகுப்பை
தெய்வத்திரு **முத்தையா பிள்ளை - செல்லம்** அவர்களின் புதல்வரும்
கிராம கார்காத்தார் சங்க தலைவரும்
திருமதி **ராஜேஸ்வரி** அவர்களின் கணவரும் எங்களது தந்தையுமான

திரு M. பாலன் பிள்ளை

(Retd. Assistant Executive Engineer - Agriculture Dept.)

அவர்களுக்கு

மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் 08-01-2023

மகள்
M. தேவி (எ) தேவாமிர்தம்
M. மோகன், (RIDE INN CAR RENTAL)

மகன்
B. சுந்தர் (எ) சோமசுந்தரம்
(RAMS COMPUTECH)
அபிராமி, (ABHIRAMI INFOTECH)

பேரன் – பேத்திகள்

E.M. சோம்ராஜ் – அனிதா சோம்ராஜ்
E.M. மணிமாறன் – சிந்து (எ) சிவகாமி மணிமாறன்

S. ராம்ராஜ் M.A., HR - TCS
S. ஜஸ்வர்யா B.Com.,
Audit Associate - E Y Global

கொள்ளுபேத்தி : **ஆத்யா சோம்ராஜ்**

ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. கோ. ராஜகோபால் பிள்ளை
ம. மேலவன்னியூர்
குமராட்சி ஒன்றியம் திமுக
முன்னாள் ஒன்றிய துணை செயலாளர்

திருமதி. ரா. சிவதனுசு
ம. மேலவன்னியூர்

தங்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்த எங்களை தெய்வமாக
வானின்று வாழ்த்தி நல்வழி காட்டிட வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்

மகன் : **R. கண்ணன்,** தமிழ்நாடு மின்சார வாரியம் (ஓய்வு)

மருமகள் : (லேட்) **K. விமலா,** சிதம்பரம் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்

பேத்தி : **K. கவிதா,** HURIX SYSTEMS, Chennai

பேரன் : **N. வெங்கடேஷ்,** RENAULT NISSAN, Oragadam, Chennai

மற்றும் **உறவினர்கள், நண்பர்கள்**

8A, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம் – 608 001.

கண்ணீர் அஞ்சலி



மலர்ந்தது
05.05.1943

உதிர்ந்தது
13.12.2022

சிதம்பரம் வட்டம், நாஞ்சலூர் தெய்வத்திரு.நா.மு.பொன்னம்பலம் பிள்ளை
தெய்வத்திருமதி.சேது அம்மாள் ஆகியோரின் இளைய மகனும்,
மறைந்த திருமதி.வி.தங்கம் அவர்களின் கணவருமான

திரு. மணிப்பிள்ளை என்கிற

NMP. விவேகானந்தன் அவர்கள்

கடந்த 13-12-2022 செவ்வாய் கிழமை மாலை 6.30 மணியளவில்
இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரது ஆத்மாசாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்..

..... இங்கணம் .....

கஸ்தூரிபாய்®
கம்பெனி – NMP ரெடிமேட்ஸ்
Since 1943. சிதம்பரம் - 608001.

பலகாரம்.com®
உயர்தர சைவ உணவகம்
156, மேலரத வீதி, சிதம்பரம் - 608001.

பட்சணம்.காம்
இனிப்பு & காரம்
பாரம்பரியத்தின் புதிய சுவை

ஊழியர்கள் மற்றும் **குடும்பத்தினர்கள்.**

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th January 2023

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple



Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**